காலிங் அட்டென்ஷன் நோட்டீஸில் விவாதம் நடத்தும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அது மாதிரி இங்கேயும் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : This is not a point of order. The hon. Member must bring forward an amendment to the present Rule, if he wants to change it. The matter has already come up before the Rules Committee and we have to consider whether one or two questions can be allowed. But I do not know how to exercise that power. But it is not proper to put a number of questions as if it will be converted into a question. On a statement made we cannot have a debate and if we have a debate, it cannot come under Rule 41. If a debate is allowed, sometimes much 'heat' will be generated and the hon. Member who rasied the matter may not have the patience to consider all aspects of the matter and that may lead to undesirable consequences. So ordinarily on a matter like this no debate can be allowed and that is the spirit of the Rules and in accordance with it, the matter will be looked into.

VI. DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : Now the amendments can be moved.

SRI M. KALYANASUNDARAM : Mr. Speaker, Sir, I move the following amendment—

'Add at the end the following—

"but regret to add that the people of the State are subject to serious distress due to steep rise in prices of all essential articles of life, such as cereals, millets, pulses, edible oils, etc., due to the half-hearted and halting measures adopted by the Government".

SRI A. K. SUBBIAH : Sir, I second it.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment—

'Add at the end the following—

"but regret to point out that the employees in the service of the State Government, Local Administration, Panchayat Unions and Teachers are subject to distress due to failure of the Government to increase the rates of Dearness Allowance to neutralize the sharp rise in prices".'

SRI A. K. SUBBIAH : Sir, I second it.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move the following amendment—

'Add at the end the following—

"but regret to note that there is no mention about the starting of Salem Steel Plant though the detailed project report was prepared already".'

SRI A. K. SUBBIAH : Sir, I second it.

[22nd January 1965

SRI A. KUNJAN NADAR : Sir, I move the following amendment—

'Add at the end the following—

" but regret to note that no mention has been made about the public demand for a judicial enquiry on the police firing on students at the Scott Christian College, Nagercoil on 2nd December 1964 and the Thoothoor incident in Kanyakumari district ".'

SRI K. A. MATHIALAGAN : Sir, I second it.

MR. SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் உரை மீது என்னுடைய அபிப்பிராயங்களைக் கூற விரும்புகிறேன். தனுஷ்கோடி, ராமேசுவரம், மற்றும் கடற்கரை ஓரப் பகுதிகளில் உயிர் சேதமும், வீடுகள், வத்தைகள், வலைகள் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன. மேலும் குடிதண்ணீர் குளங்கள் முதலானவைகளும் மிகவும் பாதிக்கப்பட்டு, இருக்கிற மக்கள் மிகவும் அல்லலுக்கு உட்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, என் தொகுதியில் மீனவர்களும், முஸ்லீம் பெருமக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனது தொகுதியில் பால்சாமி என்ற மீனவர் இறந்து போயிருக்கிறார். தனுஷ்கோடி, இராமேசுவரம் பகுதியில் அதிகமாக உயிர் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கு ஏற்பட்ட சேதங்கள் போலவே, மற்ற என் தொகுதி கடற்கரை ஓரப் பகுதிகளிலும் ஏராளமான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தனுஷ்கோடி, இராமேசுவரம் பகுதிகளுக்கு எவ்வளவு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறதோ, அதே போல பாதிக்கப்பட்ட மற்ற பகுதிகளுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடிக்கடி புயல் ஏற்பட்டு, இப்படி மோசமான நிலை நாட்டிலே சுமார் 10 வருஷ காலமாகத் தான் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முன்பெல்லாம் இதைப் போன்ற புயல்களைப் பார்த்ததே இல்லை. இராமேசுவரம், தனுஷ்கோடி போன்ற புனிதமான தீர்த்த கரைகளிலே இப்படிப்பட்ட கோரமான நிலை ஏற்பட்டதே கிடையாது. நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட கடவுள் சீற்றம் என்று ஒப்புக்கொள்கிறார்கள். நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். இந்த நாட்டிலே தர்மமும், நியாயமும், ஒழுங்கும் அழிந்து கொண்டே வருகிறது. அதனால் தான் கடவுள் சீற்றம் இந்த நாட்டிலே ஏற்படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கடவுள் சீற்றம் என்று நான் சொல்லவில்லை. கடவுள் செயல் என்று தான் சொன்னேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: கடவுள் செயலினால் தான் இந்த சீற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.

22nd January 1965]

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: Ways of Providence are inscrutable என்பது ஒரு பழமொழி.

MR. SPEAKER: God's action cannot be controlled either by the hon. Member, Chief Minister or anybody else. It cannot be found out earlier.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: அப்படியானால், இராமேசுவரம் கோவில் மட்டும் ஏன் இருக்கவேண்டும், மற்றவைகளெல்லாம் அழிக்கப்படவேண்டும்? (சிரிப்பு). ஆண்டவன் செயலினால் தான் அப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தான் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இந்தத் தேசத்திலே முதன்மையாக இருக்கப்பட்ட தனுஷ்கோடி, இராமேசுவரம் தீவுகளில் இந்த சீற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்தாவது நாமெல்லாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், தர்மமும், நியாயமும், ஒழுங்கும் அழிந்துபோய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு இதை அறிகுறியாக, முதல்படியாக வைத்து அங்கே சீற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்து தர்மத்தையும், நியாயத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட முற்படுவோமாக.

கவர்னர் பெருமான் உரையிலே எதிர்க்கட்சியினருக்கு பாதுகாப்புக் கொடுக்கின்ற எந்த வார்த்தைகளும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. இந்த நாட்டிலே இருக்கிற அதிகாரிகள் எந்த விஷயத்திலும் காங்கிரஸ்காரர்களா அல்லது எதிர்க்கட்சிக்காரர்களா என்று யோசிக்கவேண்டிய அபாயகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்த விஷயத்தை எடுத்தாலும், எதிர்க்கட்சியினர்கள் என்றால் அந்த விஷயத்தை அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை. அதற்கு ஒரு தீர்க்கமான பாதுகாப்பு இந்த நாட்டிலே ஏற்படவேண்டும். காங்கிரஸ்காரர்களுக்கு ரேஷன் கடை கொடுக்கவில்லை என்றால் கூட, அதிகாரிகளை மாற்றும் நிலை இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இதெல்லாம் துரதிருஷ்டவசமானது.

சிறிய பாசனத்திற்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், எனது தொகுதி சம்பந்தப்பட்டவரை தேவகோட்டை பக்கத்தில் இருக்கிற விருசாலை ஆற்றிலே அநுமந்தக்குடிக்குப் பக்கத்தில் ஒரு தடுப்பு அணை சாங்ஷன் செய்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டது. இன்னும் அது சம்பந்தமாக வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. இப்பொழுது கூட இந்த அணைப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். புயலினால் அடிபட்டது ஒருபுறம், மறுபுறம் தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது கூட 41-வது விதியின் கீழ் இந்தப் பகுதியில் வரி வஜா செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு வருஷங்கள் இருக்கும், மந்திரி அவர்கள் அனுமந்தக்குடி அணை சாங்ஷன் ஆகிவிட்

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

டது என்று ஒரு கூட்டத்தில் கூறினர்கள். ஆனால், டிபார்ட்மெண்டில் கேட்டால் டெக்னிகல் சாங்ஷன் ஆகவில்லை என்று சொல்லுகிறார்கள். இரண்டு வருஷங்கள் ஆகியும், இந்த அணை வேலை நடக்காமல் இருந்தால், எப்படி உணவு உற்பத்தியை பெருக்கமுடியும். உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய சர்க்கார் இதுபோன்ற காரியங்களில் நன்றாக கவனம் செலுத்தவேண்டும். இதுபற்றி இந்த மன்றத்திலே ஒரு முறை கூட எடுத்துக்கூறியிருக்கிறேன். அதற்குப் பரிகாரம் இதுவரை ஏற்படவில்லை. அதற்குக் கீழே சிறுகம்பையூரில் ஒரு 'பெட் டாம்' சாங்ஷன் ஆகியிருக்கிறது. ஒரு வருடம் ஆகிறது. ஆனால் எந்த நடவடிக்கையும் அந்த வேலை விஷயமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. திருவாடானை தாலூகாவிலே தேனாற்றிலே ஊஞ்சணையில் ஒரு 'பெட் டாம்' போடுவதாக ஏற்பாடு செய்து, அரசாங்கத்திற்கு பேப்பர் வந்தது. அது சம்பந்தமாகவும் எந்தவித வேலையும் துவக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை. இப்படியிருந்தால், உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்க முடியும்? உண்மையிலே ஜீவநதி இல்லாத பிராந்தியத்தில் இது போன்ற காட்டாற்றில் அணை கட்டித் தருவதைக் கூட 'டிலே' பண்ணினால், உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்க முடியும்? ஆகவே இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த வருஷத்திலேயே எடுத்து, வேலை செய்ய வேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே விலைவாசி ஏற்றத்தை தடுப்பதற்கு எந்த வழிவகைகளும் கூறப்படவில்லை. விலைவாசி ஏற்றம் தான் இன்று இந்த நாட்டில் மிகமிக மோசமான நிலையை உண்டு பண்ணி இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் அங்கத்தினர்கள் கூட அதைப்பற்றி நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றத்தைப்பற்றி இந்த மன்றத்திலே எத்தனையோ தாம் எடுத்துச்சொன்னபோதிலும், அதற்கு ஒரு நிவாரணமும் கிடைக்கக்கூடிய வழிவகையே ஏற்படவில்லை. விலைவாசி குறைந்தால் ஒழிய நாட்டு மக்கள் மேம்பாடு அடைய முடியாது. இந்த கோரமான நிலை நீடித்துக்கொண்டே இருக்கிறது. இப்படி விலைவாசி ஏறிக்கொண்டே போவதால் நாட்டிலே மக்கள் சாவதா பிழைப்பதா என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உடனே இந்த விலைவாசியைக் குறைப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யவில்லை என்றால், அதனால் நாட்டிலே பெரும் குழப்ப நிலை ஏற்படும். வட எல்லையில் நமக்கு இருக்கிற ஆபத்திலே, இவைகளையெல்லாம் நீடித்து விட்டுக்கொண்டே போகக்கூடாது. ஆகவே, இதற்கு உடனடியாக நிவாரணம் தேடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரைக்கும் கடற்கரை ஓரப் பகுதிகளில் இருக்கிற ரோடுகளையெல்லாம் புயல் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகிறது. மாராமத்து மந்திரி அவர்களும்

[திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

நேரடியாகப் பார்த்தார்கள். அவைகளையெல்லாம் உடனடியாக மராமத்து செய்ய தக்க ஏற்பாடு செய்யவேண்டும். கடற்கரை ஓரப் பகுதிகளில் இருக்கிற நிலங்களில் உப்புத் தண்ணீர் அடித்து இருக்கிறது. அந்த நிலங்களை நல்ல நிலங்களாக மாற்றுவதற்கு, நிபுணர்களை அனுப்பி, என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டுமோ அவற்றைக் கவனித்து உடனடியாகச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே குடி தண்ணீரில் கூட உப்புத் தண்ணீர் அடித்து, சேதம் ஏற்பட்டிருக்கிறது. கடற்கரை ஓரப் பகுதிகளில் இப்படிப் பட்ட சீற்றம் ஏற்படும்பொழுது, உப்புத் தண்ணீர் குடிதண்ணீரில் அடித்து விடுவதால் நல்ல கிணறுகளை அமைத்து பாதுகாப்பான முறையிலே குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடற்கரையோரத்தில் இருக்கிற மீனவர்களின் வத்தைகளும் வலைகளும் சேதப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாக அரசாங்கம் கூறுகிறதேயொழிய இன்னும் சரியான முறையில் நிவாரணம் அளிக்கப்படவில்லை. பேருக்கு ரூ. 20 அல்லது ரூ. 30 என்று கொடுக்கிறார்கள். அதை வைத்து ஒன்றும் செய்யமுடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். கனம் மந்திரி அவர்கள் வந்தபோதுகூட அங்கேயுள்ள பெண்கள் எல்லாம் அவரிடம் கதறிக்கதறி அழுது உடனடியாக நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். 3,000 ரூபாய் பெறக்கூடிய வத்தைகள் கூட சேதப்பட்டிருக்கின்றன. சுமார் ரூ. 10,000 அல்லது ரூ. 20,000 பெறக்கூடிய வீடுகள் எல்லாம் இடிந்துபோய் இருக்கின்றன. இவற்றையெல்லாம் மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று சொன்னால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்தும் பாதித்தொகையை மானியமாகக் கொடுத்தும் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டும். அதிகாரிகள் யாரையாவது வந்து பார்க்கிறார்கள். அவரைக் கேட்டுவிட்டு திரும்பிவந்ததும் புள்ளி விவரம் தயாரிக்கிறார்கள். நேரடியாக ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று எவ்வளவு சேதமடைந்திருக்கிறது என்று பார்த்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே உள்ள ஏரிகளை ஆழப்படுத்தி கிழக்கு இராமநாதபுரத்தில் இருக்கிற விவசாயிகளை நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துதரவேண்டும். இந்த வருஷத்திலே கிழக்கு இராமநாதபுரத்தில் சில பகுதிகளுக்குப் பெரியாற்று அணையிலிருந்து தண்ணீர் விடப்பட்டது. அதற்காக மந்திரி அவர்களை நான் பாராட்டுகிறேன். திருவாடானைப் பகுதிக்கும் தண்ணீர் விடப்பட்டது. ஆனால் அந்தத் தண்ணீர் எங்களுக்கு பிரயோஜனப்படுவதற்கு முன்பாகவே அது நிறுத்தப்பட்டுவிட்டது. பெரியாற்றுப் பகுதியிலிருந்து தண்ணீரை உப்பாறு வழியாக விரிசலையாற்றில் விட்டால் திருப்பத்தூர், திருவாடானை தாலுகா போன்ற பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு, இப்பொழுது ஒரு தண்ணீர்ப்பாட்டிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு, நிவாரணம் அளிக்கமுடியும். ஆகவே, கனம் 10-00 a.m.

[திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர்ப்பாட்டிலே ஒவ்வொரு வருஷமும் பயிர்கள் கருகிப்போகிற நிலையிலிருப்பதால் வைகை பெரியாற்றில் உபரித் தண்ணீர் இருக்கும்பொழுது அதை எங்களுக்குக் கொடுப்பதற்கு 4 பர்லாங் தூரத்திற்கு ஒரு வாய்க்கால் வெட்டி, அந்தத் தண்ணீரை அதாவது புலிப்பட்டி 12-வது கால்வாயிலிருந்து உப்பாற்றில்விட்டு அங்கிருந்து விருசலே ஆற்றில் விட்டால் ஓரளவு பட்டினிப் பஞ்சத்தைத் தடுக்கமுடியும். ஆகவே, இதை அவசியமாக செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. பி. பாலகன்: கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரையை வரவேற்று எனது சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். நமது தென்னகத்தில் ராமேசுவரம் தீவிலும் மற்றும் கடலோரப் பகுதிகளிலும் சமீபத்தில் ஏற்பட்ட புயலினாலும், கடலின் சீற்றத்தினாலும் கொடிய நஷ்டங்களும் பெருமளவுக்கு உயிர்ச்சேதமும் ஏற்பட்டதைக் கண்டு நாடு பெரும் அதிர்ச்சியுற்றது. இம்மாதிரி ஒரு கொடிய நிகழ்ச்சியை நமது காலத்தில் நாம் இதுவரை பார்த்ததில்லை. தனுஷ்கோடி பகுதி பூராவும் நீரில் மூழ்கியதால் அங்குள்ள ஜனங்கள் தண்ணீரால் சூழப்பட்டு பெரும் அவதிக்கு உள்ளானார்கள், உயிர்ச்சேதம் ஏற்பட்டது, என்ற செய்தி காட்டுத் தீயைப் போல் பரவியது. அதைக்கேட்டு மக்கள் அதிர்ச்சியடைந்தார்கள். இந்தச் செய்தி சென்னைக்கு எட்டியவுடனே நமது உள் துறை அமைச்சரும் உணவு அமைச்சரும் மாபெரும் வீரர்களைப் போல தைரிய புருஷர்களாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாகச் சென்றார்கள். குறிப்பாக கனம் முதலமைச்சர் அவர்களும் மற்றும் எங்கள் கட்சித் தலைவரும் உடனே சென்றார்கள். அப்படிச் செல்லும்பொழுது அந்த மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களையும், உடை முதலியவற்றையும் எடுத்துக்கொண்டு கிடைத்த சாதனங்களைப் பயன்படுத்தி படகுகள் மூலமாக அவற்றைக் கொண்டுசென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்ததை மக்கள் பாராட்டுகிறார்கள். சமீபத்தில்கூட திருநெல்வேலி மாவட்டத்திற்கு நமது உணவு அமைச்சர் திரு. ராமைய்யா அவர்கள் வந்தபொழுது என் காதாலேயே நான் மக்கள் சொல்வதைக் கேட்டேன். 'இவர் அல்லவா அமைச்சர், தண்ணீரால் சூழப்பட்டு மக்கள் அவதிப்படுகிற நேரத்தில் ஒரு வீரர்போல அங்கு சென்று நல்ல காரியங்களை செய்திருக்கிறார், இவர்தான் அமைச்சராக இருப்பதற்குத் தகுதியுள்ளவர்' என்று மக்கள் கூறினார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டதை மாற்றுக்கட்சிக்காரர்களால் சகிக்க முடியவில்லை. அவர்கள் குட்டையை குழப்ப சேற்றை கலக்க முயற்சிக்கிறார்கள்.

22nd January 1965] [திரு. ஏ. பி. பாலகன்]

இதைப்பார்க்கும்பொழுது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. நல்ல கோடைகால வெயில் அடித்துக் கொண்டிருக்கிறது. அக்னி ஜ்வாலையாக உஷ்ணத்தை கக்குகிறது. அந்த சமயத்தில் காற்று அக்னி ஜ்வாலையாக வீசிக்கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் தண்ணீரே இல்லாத ஒரு கிராமப் பகுதியில் திடீரென்று ஏதோ ஒரு காரணத்தினால் தீப்பற்றி விட்டது. அந்த நெருப்பை அணைப்பதற்கு எந்திர சாதனங்கள் கிடையாது. ஊரில் இருக்கும் நல்ல எண்ணம் படைத்தவர்கள் சேவையுள்ளம் படைத்தவர் இப்படி தீ பல அடி உயரத்திற்கு ஜ்வாலைவிட்டு எரிவதையும் அகோர காற்றின் காரணமாய் வீடு விட்டு வீடுதாவி, தன் கோரபசியை தீர்த்துக்கொள்வது போன்று, பல வீடுகளை சாம்பலாக்கிய கோரதாண்டவத்தைப் பார்த்து கிடைத்தவைகளை எல்லாம், கல், மண், நீர், போன்றவைகளை எறிந்து, தீயுடன் போராடி, மேலும் அந்த தீ பரவாமல் தடுத்து விடுகிறார்கள். இம்மாதிரிச் செய்பவர்களை மக்கள் பாராட்டுகிறார்கள். இதைப்பார்த்து அடுத்த கிராமத்திலுள்ளவர் ஒருவர் மறுநாள் அந்த ஊருக்கு வருகிறார். 'நான் நேற்றே வந்திருப்பேன், ஆனால் எனக்கு சுகக்கேடாக இருந்தது, வருவதற்கு வாய்ப்பில்லை, நான் நேற்றே வந்திருந்தால் என்னவெல்லாம் செய்திருப்பேன் தெரியுமா, என்று சொல்கிறார். இதோ இந்த கம்புகள் எரிந்து விட்டதே அதோ அந்த கதவு கருகிவிட்டதே தீயை அணைத்தவர்கள் இதையெல்லாம் கவனித்திருந்தால் இப்படி ஏற்பட்டு இருக்குமா, நான் வந்திருந்தால் இப்படி நடந்திருக்காது' என்று சொல்லி கதவு போடுவதற்கு பணம் தருகிறேன். கம்புகள் வாங்குவதற்குப் பணம் தருகிறேன். இன்னும் மக்களுக்கு உதவியளிப்பதற்கு பணம் கொடுப்பதாக வாக்களிக்கிறேன், என்னை நம்புங்கள் என்று கூறுகிறார். இந்த மாதிரிக் கூறுபவர்களை மக்கள் எவ்வளவு தூரத்திற்கு நம்புவார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். நம்முடைய மக்களுக்குப் புரிந்து கொள்ளும் சக்தி இருக்கிறது. யாரையும் சுலபமாக மாற்றிவிடமுடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ரூ. 150 லட்சம் ஒதுக்கி பல நிவாரண வேலைகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதை மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். என்னுடைய நெல்லை மாவட்டத்தில் தென் பகுதியில் வழக்கத்தைவிட மழை குறைந்து போய்விட்டதாக கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். 15 தினங்களுக்குமுன் இருந்த நிலைமைக்கும் இப்பொழுதுள்ள நிலைமைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. முற்றிலும் மாறுபட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வடகிழக்குப் பருவகாற்று தவறிவிட்டதால் சரியான மழை பெய்யாமல் தானிய உற்பத்தியில் மொத்த விளைநிலங்களில் ஐந்தில் ஒரு பகுதி நிலங்களில் மட்டிலுமே விளையும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி குறைந்த நிலங்களில் விளையும் என எதிர்பார்த்தாலும் கூட வழக்கத்தைவிட சரிபாதியளவுக்குத்தான் மகசூல் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பயிர் காய்ந்து கருகி விட்டது. இன்று உணவுப் பற்றாக்குறை பிரதேசமாக திரு

நெல்வேலி மாவட்டம் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியான கடயம் பகுதியை எடுத்துக்கொண்டால், 100க்கு 100 மகசூல் தவறிவிட்டது. பயிர்களெல்லாம் காய்ந்து, தீய்ந்து விட்டன. விவசாயிகள் குதூகலமாக அறுவடை செய்யலாம் என்று இருந்தவர்கள், இன்றைக்கு காய்ந்து கருகிப்போன வெறும் வைக்கோலைமட்டும் அறுவடைசெய்யக் கூடிய கண்ராவியைப்பார்த்தால், மிகப் பரிதாபமாக இருக்கிறது. அந்த ஏழை விவசாயிகளுக்கு வாழ்வு அளிக்க, அவர்களையும் மக்களையும் பாதுகாக்க, உடனடியாக 5,000, 10,000 டன் உணவு தானியங்கள் திருநெல்வேலி மாவட்டம் அனுப்பினாலொழிய, அவர்களை வாழவைக்க இப்பொழுது வேறு மார்க்கமே கிடையாது. இன்னும் அவர்கள் எதிர்பார்க்கின்ற அறுவடை மார்ச் 15 தேதிக்குமேல் தான் ஆரம்பிக்கும். அதன் பிறகு சுமார் ஆறு மாதங்கள் வரை இதே உணவு தட்டு நிலை தான் நீடித்திருக்கும். அதுவரை வெளியிலேயிருந்து உணவு தானியங்கள் கொடுத்தால் அன்றி அந்த மக்களைக் காப்பாற்ற வழி எதுவும் இல்லை என்பதை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் இந்த ஆண்டுக்கு 3¼ லட்சம் மெட்ரிக் டன் அம்மோனியம் சல்பேட் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த உர வினியோகம் பற்றி பொதுவாக விவசாயிகள் மத்தியில் கூறப்படும் ஒரு குறையைப் பற்றியும் இந்த மன்றத்தின் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். விவசாயிகளின் குறை, இந்த உரம் காலாகாலத்தில், பருவ காலத்தில் கொடுக்கப் படுவதில்லை என்று விவசாயிகள் குறைபடுகிறார்கள். இன்னொன்று, குறிப்பிட்டிருக்கும் எடைப்படி கொடுக்கப் படுவதில்லை, என்பது மற்றொரு குறை. மூட்டைகளில் குறிப்பிட்டிருக்கும் எடைக்குக் குறைந்த எடையில்தான் அவை கொடுக்கப் படுகின்றன என்று கூறப்படுகிறது. அந்தக் குறை பெரும் குறையாக விவசாயிகள் மத்தியில் இருக்கிறது. ஆகவே, காலாகாலத்தில் கொடுக்கப் படுவதில்லை, குறிப்பிட்டிருக்கிற எடைப்படி கொடுக்கப் படுவதில்லை என்கின்ற குறைகள் இருக்கின்றன. ஆகவே உர மூட்டைகள் சப்ளை செய்யும்போது பட்டியலில் குறிப்பிட்ட எடை அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் இரண்டு அணைக்கட்டுகள் கட்டப்பட இருக்கின்றன. நீர்ப்பாசனத் திட்டங்கள் முறையாக நிறைவேறுவதாக கவர்னர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த இரண்டு நீர்த் தேக்கங்களும், எழு வருஷமாக என்ன காரணத்தினாலோ தடைப் பட்டுவிட்டது. ஆனால் இப்பொழுது, ராம நதி, கடனா நதி இந்த இரண்டு அணைகளையும் 2½ கோடி ரூபாயில் கட்டி முடிக்க திட்டம் உருவாக்கப்பட்டு, மதிப்பீடுகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ராஜ்ய சர்க்காரின் நடவடிக்கைக்கு அனுப்பப் பட்டிருப்பதாகத் தகவல் தெரிகிறது. இந்த இரண்டு திட்டங்களும் அதிககாலமாக தாமதித்து விட்டதால், வருகிற பட்ஜெட்டிலேயே இதற்குத் தொகை ஒதுக்கி, வேலையையும் துவக்க எல்லா ஏற்பாடு

களும் செய்து தரவேண்டும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்களையும், கனம் மராமத்து அமைச்சர் அவர்களையும், தங்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***டாக்டர் பா. நடராஜன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமானுடைய உரைக்கு நன்றி செலுத்தும் முகத்தான் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்பொழுது, கன்யாகுமரி மாவட்ட சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோருக்குமே கவலைத்தரக்கூடிய, எல்லோருமே வருத்தப்படக்கூடிய பெரிய பிரச்சினை இங்கே விவாதிக்கப்பட்டது. தூத்தூரில் ஆசிரியர்களை கைவிலங்கிட்டு, சிறைக்கு நடத்திச் செல்லப் பட்டது. நாகர்கோயில் ஸ்காட் கல்லூரியிலே மாணவர்கள் கல்லூரி காம்பவுண்டிலேயே சுடப்பட்டது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள். எந்த சமுதாயம் ஆசிரியர்களை மதிக்கிறதோ, அந்த சமுதாயம்தான் நாகரீக சமுதாயமாகக் கருதப்படும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

தொழில்களில் வேற்றுமை இருக்கிறது. ஒவ்வொரு தொழிலுக்கும் நாம் கொடுக்கும் மதிப்பைப் பொருத்திருக்கிறது நாட்டின் பண்பாடு . ஆசிரியர்களை விலங்கிட்டுச் செல்வது என்பது மிக்க வருந்தத்தக்கது. பிரின்சிபால் கல்லூரியில் இருக்கிறார். அவரைக் கேளாமலே, அவரைக் கலந்து சந்திக்காமலே, கலெக்டருடைய முன்னாலே, அவருடைய உத்தரவு இன்றியே, அங்கே மாணவர்களை சுட்டு இருக்கிறார்கள். ஒரு கல்லூரி என்பதில், அங்கே தலைவன் அந்தப் பிரின்சிபால் தான். அந்த பிரின்சிபாலுடைய அனுமதியின்றி அங்கே போலீசார் போவது கூட முறையல்ல என்று நான் கூறுவேன். நான் கல்லூரி பிரின்சிபாலாக இருந்து பணியாற்றிய போது, ஒன்றிரண்டு முறை, மாணவர்களிடையே சச்சரவு ஏற்பட்டதைக் கேள்விப்பட்டு, போலீசார் உதவி வேண்டுமா என்று ஃபோன் செய்தபோது, 'உங்கள் தலையே இங்கு தெரியக்கூடாது, அப்படி வந்தாலும், மஃப்டியில் தான் வரவேண்டும், யூனிஃபார்மில் வரக்கூடாது' என்று அவர்களுக்கு நான் சொல்லியிருக்கிறேன். ஒரு கல்லூரி பிரின்சிபால் அந்தக் கல்லூரி காம்பவுண்டுக்குள்ளே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டக் கடமைப்பட்டவர். ஆகவே இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் பெரிய தவறுகள் ஆக முடிந்திருக்கின்றன என்பது மிகவும் வருந்தத்தக்கது. அதற்குப் பின்னே நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது, அரசாங்கம் தவறுகளை உணர்ந்து, விரைந்து நடவடிக்கை எடுத்து, உடனே போலீஸ் தலைமை அதிகாரியான ஐ. ஜி. அவர்களை அனுப்பினார்கள் என்பது வரவேற்கத்தக்கது. அவர் சென்று, எந்தெந்த அதிகாரிகள் தவறு இழைத்தார்களோ அவர்களை உடனே சஸ்பெண்ட் செய்து, தாற்காலிகமாக மாற்ற வேண்டியவர்களை மாற்றி, சுடப்பட்ட மாணவர்களை நேரில் சந்தித்து அவர்களுடைய சிகிச்சைக்கு வேண்டிய முறைகளை ஏற்பாடு செய்து, ஐ.ஜி. திரும்பி இருக்கிறார்கள். அது மிகவும் பாராட்டத் தக்கது. ஏனென்றால், இம்மாதிரி தமிழ் நாட்டு

[டாக்டர் பா. நடராஜன்] [22nd January 1965

வரலாற்றிலேயே, ஏன், எந்த மாநில வரலாற்றிலேயும் இதுவரை நடவாதது. போலீசார் தவற்றை உணர்ந்து இப்படி இதற்குமுன் செய்ததேயில்லை. அரசாங்கம் அதற்கு வேண்டிய விசாரணைக்கும் ஏற்பாடு செய்திருக்கிறது. விசாரணை அறிக்கை வந்ததும், காயம் பட்ட மாணவனுக்கு காம்பென்சேஷன் ஆக, ஒரு மாணவனுக்கு 10,000 ரூபாயும், இன்னொருவனுக்கு 3,000 ரூபாயும் வழங்கியிருக்கிறார்கள். அதோடு தங்களுடைய குற்றத்தை அரசாங்கம் உணர்ந்து, ஒரு அறிக்கையையும் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இதுவும் அரசாங்க வரலாற்றிலேயே புதுமை. சாதாரணமாக அரசாங்கம் குற்றம் செய்தால் அதை ஒப்புக் கொள்வதில்லை. அப்படிச் செய்வது ஏதோ அரசினருக்கு பலஹீனமாகக் கருதப்படும் என்பது வழக்கமாகி விட்டது. அதிலும் போலீசார் குற்றம் செய்தால் அவர்களைத் தாங்குவதுதான் வழக்கம். அப்பொழுதுதான் நாட்டிலே நல்ல ஆட்சி இருக்கும், லா அண்டு ஆர்டரை நிலை நாட்ட முடியும் என்ற நம்பிக்கை பொதுவாக இருந்து வருகிறது. ஆனால் இந்த அரசினர் அற உணர்ச்சியோடு, குற்றத்தைக் குற்றம் என்று ஒப்புக் கொண்டு இந்த அறிக்கையை வெளியிட்டு இருப்பது தான் உண்மையான தைரியம், தீரம். எவன் ஒருவன் செய்த குற்றத்தை குற்றம் என்று ஒப்புக் கொள்ள முன் வருகிறானோ, அவனே வீரன். அற உணர்ச்சியால் தூண்டப் பட்டு செய்த செய்கை என்று கருதுகிறேன். இம்மாதிரியான ஓர் அறிக்கையானது வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது என்றே நான் கருதுகின்றேன். இதற்கு முன்பு இம்மாதிரியான ஓர் அறிக்கையை, எந்த அரசாங்கமும் தனது தவற்றை ஒப்புக்கொண்டு வெளியிட்டதே இல்லை. ஆனால், இதற்குப் பிறகு நாம் எந்த வகையான விசாரணையும் வேண்டியதில்லை என்று கருதுவதற்கும் இல்லை. நீதி விசாரணை செய்ய வேண்டும் என்று பலர் விரும்பினார்கள். இந்தச் சட்டசபையே எல்லாச் சட்டத்திற்கும் நிர்வாகத்திற்கும் நீதிக்கும் உறைவிடமாக இருக்கிறது. ஏன்? நீதி சபைக்கு மேலேயும் இந்த சபைக்கு அதிகாரம் வேண்டும் என்று நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த முறையில் இந்த சட்ட சபை என்ன தீர்ப்புக் கூறுகின்றதோ, அதுவே பெரிய நீதித் தீர்ப்பு என்பதற்குச் சற்றும் ஐயம் இல்லை. ஆனால், ஒன்று. இன்றைய போலீஸ் படையானது எப்படி இருக்கிறது என்றால், ஜனநாயகப் பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் அது அமையவில்லை என்றே நான் கருதுகின்றேன். பழைய காலத்து லா அண்டு ஆர்டர் ஆட்சியை நிலைநாட்டி வந்த மனப்பான்மையிலேயே இன்றைய போலீசு அமைந்திருக்கிறது என்றே நான் கருதுகின்றேன். ஆகவே, ஜனநாயகப் பண்பாட்டைக் காக்கின்ற வகையில், ஒரு போலீஸ் படையானது எப்படிச் செயல்படவேண்டும், அதற்கு எத்தகையோரை அந்தப் போலீஸ் படைக்குத் திரட்டவேண்டும், அவர்களுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும், என்ன என்ன பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்க வேண்டும், எந்த எந்த லட்சியங்களை அவர்களிடையே புகட்ட வேண்டும் என்பதை அறிந்து, அந்த வகையிலே இலாக்காவைச் சீர்திருத்துவதற்கு வேண்டிய ஒரு விசாரணைக் குழு அவசியம் என்றே நான் கருதுகின்றேன். அப்படி இல்லாது போனால்,

22nd January 1965] [டாக்டர் பா. நடராஜன்]

போலீசார் மக்களை அடிப்பதும் பிடிப்பதும், துன்புறுத்துவதுமே தங்களுக்கு வீரப் பதக்கம் தருவதாகக் கருதிவிடுவார்கள். மாணவர்களையும் ஆசிரியர்களையும் மதிப்பது என்பதே அவர்களுக்கு இராது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இன்றைய நிகழ்ச்சியானது நமக்குக் கண் திறந்தது போல் இருக்கவேண்டும். வருங் காலத்தில் இம்மாதிரியான நிகழ்ச்சி ஏற்படாத வகையில் போலீஸ் படையையே திருத்தியமைக்கவேண்டும்.

முதலமைச்சர் தனது அறிக்கையில், 'சிப்பந்திகள் கடமையிலிருந்து தவறிவிட்டார்கள், அந்த சிப்பந்திகளை மேற்பார்வையிடுகின்ற சிலரும் கடமையில்தவறிவிட்டார்கள்' என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

"நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்"

என்று வள்ளுவர் சொல்கிறார். சிப்பந்திகள் பெருந்திரளாக இருந்தால் கூட, அவர்களை நடத்திவைக்கின்ற தலைமை அதிகாரி சரியான முறையில் இல்லாவிட்டால், அந்தப் படையானது வெற்றி பெறாது என்று வள்ளுவர் கருதுகின்றார். அந்த முறையிலே சிப்பந்திகள் நன்றாகத் திரட்டப்பட்டு, அவர்களுக்குப் புது லட்சியங்களைத் தெரிவித்து, புது ஒழுக்கங்களை அவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஏற்ற போலீஸ் அதிகாரிகளை நியமிப்பதற்கும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்கும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதோடு, அதற்காக ஒரு கமிஷனையும் நிறுவ வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக எங்கள் மாவட்டத்தில் உணவுத் தானியக் கொள்முதல் விஷயத்தில் ஒரு புதுமையைச் செய்திருக்கிறார்கள். அதாவது, உற்பத்தியாளர்களும் கூட 'ரேஷன்' வாங்கிக்கொண்டு, அவர்களிடம் உபரியாக இருக்கும் தானியம் அனைத்தையுமே அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும் என்கிற Monopoly procurement முறையைக் கொண்டுவருவதாக இருக்கிறார்கள். இதற்குரிய காரணங்களை நான் நேற்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லக் கேட்டபோது, இந்த முறை தவிர்க்க முடியாதது போல் தான் தோன்றுகிறது. ஆயினும், முதலில் ஏன் Graded levy முறையைச் சோதனை செய்து பார்க்கக் கூடாது? 'கிரேடெட் லெவி முறை'யில் இவ்வளவு தான் வரும் என்று கண்டு, அது போதாது என்றால், பிறகு இந்த மனுபலி ப்ரொக்யூர்மெண்ட் முறையைக் கொண்டுவரலாகாதா? என்று நான் கேட்கிறேன். காரணம் என்னவென்றால், இந்த முறையில் ஒரு பெரிய ஆபத்து இருக்கிறது. அதாவது, ஒவ்வொரு நபரைப் பொறுத்தும், அவர் குடும்பத்தில் எத்தனை பேர், அவர் எவ்வளவு உட்கொள்ளுகிறார், அவர் எவ்வளவு செலவழிக்கிறார் என்பதையெல்லாம் விசாரணை செய்கின்ற ஒரு நுணுக்கமான வேலை ஏற்படுகிறது. அதைச் செய்கின்றவர்கள் யார்? சிப்பந்திகள். அந்தச் சிப்பந்திகளுடைய ஆதிக்கத்திலே மக்கள் வந்துவிடுகிறார்கள். இதனால் அதிகக் கொடுமை, லஞ்சம், அநீதி போன்ற தொந்தரவுகளுக்குரிய வாய்ப்புகள் அங்கு இருக்கின்றன. பணக்காரர்கள் தப்பித்துக் கொள்ளவும், ஏழைகளிடம் தகுதிக்கு மிகுந்தபடி வசூல் செய்

கின்ற நிலைமையும் வரலாம். ஆகவே, Graded levy முறையில், ஒரு ஏக்கராவுக்கு இத்தனை மூட்டை, இரண்டு ஏக்கராவுக்கு அதைவிட மிகுதி என்ற முறையைக் கொண்டுவந்து பார்த்து, அது எதிர்பார்க்கிற அளவுக்கு வெற்றியாக இல்லையென்றால் அதற்கு மேலும் தேவை என்றால், அடுத்தது என்ன செய்யலாம் என்று யோசிப்பது தான் முறை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், அரசாங்கம் ஒரு முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவை அவர்கள் நடத்துவதானால் கூட, மக்கள் பிரதிநிதிகளைக் கலந்து கொண்டு தான் செய்யவேண்டும். ஆங்காங்கே விவசாயிகள் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகளை யும், சட்டசபைப் பிரதிநிதிகளையும், பஞ்சாயத்துப் பெரும் தலைவர்

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

களையும் கலந்து தான் இதை அமுலாக்கவேண்டும். இல்லாமற் போனால், நாட்டிலே இயற்கையிலே புண்பட்டிருக்கிற ஒரு மாவட்டத்தை மேலும் புண்படுத்துவதாகவும், வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதாகவும் இருக்கும். அத்தகைய நடவடிக்கைகள் நடக்கலாகாது என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூன்றாவதாக நான் சொல்ல விரும்புவது இது தான். குடியரசு தினத்தையொட்டி, அதைத் துக்க நாளாகக் கொண்டாடவேண்டும் என்று இன்று ஒரு கிளர்ச்சி இருப்பதாகப் பத்திரிகையிலிருந்து அறிகிறேன். நமது கவர்னர் பெருமான் தமது உரையின் இறுதி யில், 'இந்த சட்டசபையானது மிகவும் ஒழுங்காகவும், கண்ணியத் தோடும், இந்தச் சபையின் உரிமைகளைக் காப்பாற்றுகின்ற முறை யிலும் நடந்து கொள்ளவேண்டும்' என்று வேண்டுதல் விடுத் துள்ளார். இதை இங்குள்ள ஒவ்வொரு கனம் அங்கத்தினரும் மனத்தில் வைத்து நடந்து கொள்வார்கள் என்று நான் நம்பு கின்றேன். குடியரசு தினத்தன்று அதைத் துக்க தினமாகக் கொண்டாடுவது உண்மையிலேயே தமிழர்களுக்குப் பெரும் இழுக்கு என்றே நான் கருதுகிறேன். கண்ணீர் விட்டு, செந்நீர் விட்டு வளர்த்த பயிர் சுதந்திரம். அதன் விளைவாக வந்தது குடி யரசு. அந்தக் குடியரசு தினத்தைத் துக்க நாளாகக் கொண் டாடுகிறவர்களை மறைமுகமாகவோ நேர்முகமாகவோ, தெரிந்தோ தெரியாமலோ, அறிந்தோ அறியாமலோ, சீனர்களுக்கும் பாகிஸ் தானியர்களுக்கும் உறவு கொண்டவர்கள் என்றோ, அவர்களுக்கு துணை நிற்கிறவர்கள் என்றோ கருதவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, தமிழர்கள் ஒவ்வொருவரும் உலக அரங்கில் வெட்கத்தோடு தலைகுனிய வேண்டிய இந்தச் செயலைச் செய்யவேண்டாம் என்று நான் இந்தச் சபையில், அந்தக் கருத்துடன் யாராவது இருப்பார் களானால், அந்த என்னுடைய தோழர்களுக்கு, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையின் அடியொட்டி நானும் வேண்டுதல் செய்துகொள்ளுகிறேன்.

இறுதியாக, இந்த மொழிப் பிரச்னையைப்பற்றி மீண்டும் மீண்டும் நாம் இங்கே பேசியுள்ளோம். மீண்டும் மீண்டும் நாம் தெளிவுபடக் கூறுவது கடமையாகவும் உள்ளது. ஹிந்தி என்பது இங்கே எங்கும் திணிக்கப்படவில்லை. திணிப்பது என்றால் என்ன பொருள்? ஹிந்தி இங்கே திணிக்கப்பட்டது என்றால்,

22nd January 1965] [டாக்டர் பா. நடராஜன்]

இங்கு சட்டசபை மெம்பர்களாகிய நாம் தமிழில் பேச முடியுமா? பள்ளிக்கூடங்களில் இன்று தமிழ் பாட மொழியாக இருக்க முடியுமா? அரசாங்கத்திலும் தமிழ் ஆட்சிமொழியாக இருக்க முடியுமா? 1975-ம் ஆம் ஆண்டு வரை ஹிந்தி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம், ஆங்கிலம் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். தொடர்பு மொழியாக ஹிந்தியையும் வைத்துக் கொள்ளலாம், ஆங்கிலத்தையும் வைத்துக்கொள்ளலாம். நாட்டுக்கு ஒரு தொடர்பு மொழி இருக்கத்தான் வேண்டும். அந்தத் தொடர்பு மொழியாக ஹிந்தியையோ ஆங்கிலத்தையோ, எது விருப்பமோ அதை வைத்துக்கொள்ளலாம். அப்படி 1975-ம் ஆண்டுக்குப் பிறகும் நமக்கு ஆங்கிலமேதான் வேண்டும் என்றாலும், அப்பொழுதும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. வழி அடைத்துவிடவில்லை. இப்படியிருக்க, 'திடீரென்று ஹிந்தியைத் திணித்து விட்டார்கள்' என்று சொல்லுவதில் பொருத்தமே இல்லை. ஆங்கிலத்தில் வந்த உத்திரவுகள், ஆங்கிலத்தில் வந்த அறிக்கைகள் ஆகியவற்றோடு ஹிந்தி மொழி பெயர்ப்பு ஒன்றும் தொடர்ந்து வரும் என்பதல்லாது, நமது நடவடிக்கைகள் தமிழிலே நடைபெறும். தமிழ் நாட்டில் ஆட்சி தமிழிலே நடைபெறும். ஆகவே, தமிழுக்கு எந்த வித ஆபத்தும் வந்துவிட்டது என்று கருதுவதற்கே இல்லை.

ஒன்று சொல்கிறேன். தமிழுக்கு ஆபத்து வந்துவிட்டது 10-30 a.m. என்று எப்போது கூற வேண்டுமென்றால், இன்று ஆங்கிலம் இல்லை, ஹிந்தி தான் பொதுமொழி என்று இந்தச் சட்டசபையிலோ, பார்லிமெண்டிலோ சொல்லியிருப்பார்களேயானால் அப்போது அது அஞ்ச வேண்டியது தான். குடைபோல ஆங்கிலத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்கள் என்றைக்கு இந்தியைக் கற்று அதை ஆட்சிமொழியாக ஏற்கத் தயாராய் இருக்கிறார்களோ அது வரை ஆங்கிலம் இருக்கும் என்பதாக காலஞ்சென்ற நமது மதிப்பிற்குரிய பிரதமர் நேருஜி கூறியிருக்கிறார்கள். அந்த வாக்கு காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்த உண்மை நிலையை எடுத்துக் கூறி மக்களுடைய ஐயத்தைப் போக்க நாம் கடமைப்பட்டு இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI A. KUNJAN NADAR: On a point of information, Sir. I want to know from the hon. Member whether he wants a judicial enquiry or not.

MR. DEPUTY SPEAKER: It is not necessary.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member should put that question to the Government.

* **திரு. எம். எஸ். மணி:** கனம் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே நம்முடைய ராஜ்யத்தின் தென்கோடி ராமேஸ்வரத்தில் ஏற்பட்ட புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும் விளைந்த நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புயலினால்

[திரு. எம். எஸ். மணி] [22nd January 1965

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பது பற்றிப் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த விளைவினால் சுமார் 250 பேர்கள் இறந்திருக்கலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் முதன் முதலில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் 500 பேர்களுக்கு மேல் இருக்கும் என்று அவர்களே குறிப்பிட்டார்கள். ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்கள் செயலாளர் இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் வரை இறந்தவர்களின் எண்ணிக்கை இருக்கலாம் என்று குறிப்பிட்டார்கள். நாங்கள் சொல்வதனால் அதில் ஏதோ தவறு இருப்பதாக ஆளும் கட்சியினர் சொல்லக் கூடும். அந்தப் பகுதியைப் பார்வையிடச் சென்ற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களான திரு. ஆர். வி. சுவாமிநாதன், திரு. கே. டி. கோசல்ராம் ஆகியவர்களே இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேலாக இருக்கக்கூடும் என்று சொல்லியிருக்கிறார்கள் உண்மையிலேயே அந்தப் பகுதிக்குச் செல்லாத பொதுமக்களுக்கு அங்கே எத்தனை பேர்கள் இறந்திருக்கக்கூடும், எத்தனை ரூபாய் மதிப்பு பொருட்சேதம் ஏற்பட்டு இருக்கக்கூடும் என்கிற உண்மையான விவரம் தெரியவில்லை. மற்றவற்றுக்கு எல்லாம் சரியான புள்ளிவிவரங்களைக் கொடுக்கிற இந்த சர்க்கார் இதுபற்றியும் சரியான விவரங்களைச் சேகரித்துக் கொடுத்திருக்கலாம். அப்படி அறிவிக்கத் தவறிய காரணத்தினால்தான் இத்தகைய குழப்பங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

அது மட்டுமல்ல. ஆண்டவனுக்குக் கோபம் ஏற்பட்ட காரணத்தினால்தான் அங்கே இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. என்பதாகப் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ராமேஸ்வரம் கோவிலில் உள்ள அர்ச்சகர்கள் ஒரு காரணம் சொல்கிறார்கள். இதுவரை நல்ல அரிசி கிடைத்து வந்தது. அதைக் கொண்டு ஆண்டவனுக்கு பொங்கல் நைவேத்தியம் செய்து வந்தோம். இப்போது அரிசி கிடைப்பது இல்லையாதலால் கோதுமையினால் தயாரிக்கப்பட்ட பூரியும், கிழங்கும் படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால்தான் ஆண்டவனுக்குக்குக் கோபம் ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்படுகிற நிலை ஏற்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள். ஆயினும் இத்தனை விளைவுகளுக்கும் ராமேஸ்வரம் கோவில் இடியவில்லை. ஆண்டவன் தன் கட்டிடத்தைக் காப்பாற்றிக் கொண்டான் என்று நேற்றைய முன்தினம் பேசிய திரு. சிதம்பரநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது நாம் கட்டிய கட்டிடம் அல்ல. நம் முன்னோர்கள் கட்டிய கட்டிடம். ஆதலாலே அது இடியாமல் தப்பி நிற்கிறது. நமது அரசாங்கம் கட்டிய கட்டிடமாக இருந்தால் நின்று இருக்காது. அந்தப் புயலில் அழிந்து இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இந்தப் புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் எந்த வகையில் நிவாரணம் அளித்து வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அந்த மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கவில்லையென்று சிலர் குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் சொல்கிற நோக்கில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினர் நந்தனார் கதையைப்போல நாம் ஒரே இரவில் அறுவடை செய்ய முடியுமா என்றார். நந்தனாரைவிட

22nd January 1965] [திரு. எம். எஸ். மணி]

நமது முதல் அமைச்சர் அவர்கள் பக்தியில் குறைந்துவிடவில்லை யென்று சொல்ல விரும்புகிறேன். எனவேதான் இப்படிப்பட்ட வாதங்களைச் சொல்லிக் கொண்டிருக்காமல் செய்ய வேண்டிய நிவாரண வேலைகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே பாதிக்கப்பட்ட பகுதியை நேரில் சுற்றிப் பார்த்துவரச் சென்ற திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் என்று செல்லிவிட்டு கையிலும் ஏராள பணத்தைக் கொண்டு போய் பொதுமக்களுக்குக் கொடுத்தார்கள். அப்போது தான் அவர்கள் சர்க்காரிடம் பணத்தைக் கொடுக்காது நீங்களே நேரிடையாகக் கொடுங்கள், அவர்கள் அளிக்கிற நிவாரணம் சரியாக எங்களிடம் வந்து சேருவதில்லை என்ருர்கள். அதற்கு திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களும் இணங்கினுர்கள். இன்று அவருக்கு ஏராள விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிருர்கள். அதை வரவேற்க வேண்டுமே தவிர தனிப்பட்டவர்கள் யார் கொடுத்தாலும் அதைத் தடுக்காமல் இருந்தால் அது இந்த நேரத்தில் அந்த மக்களுக்குச் செய்த நன்மையாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றையதினம் அரிசிப் பற்ருக்குறையைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். 17 ஆண்டு காலமாக நாம் இன்னும் அரிசியைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிருேம். ஆனல் பலர் அணு குண்டு செய்கிற அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கிருர்கள். நாம் அரிசி பற்றவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிருேம். அரிசி கேட்டால் அட்டை கொடுக்கிருர்கள். அட்டைக்கு அரிசி கொடுங்கள் என்ருல் கடைக்காரர் அரிசி இல்லை என்கிருன். கலெக்டரைக் கேட்டால் எல்லாக் கடைகளுக்கும் அரிசி கொடுத்தாகிவிட்டது என்கிருர். கலெக்டர் கொடுக்கவில்லை என்று கடைக்காரர் சொல்வதும், போதுமான அரிசி கொடுத்திருக்கிருேம் என்று கலெக்டர் சொல்வதும், கடைக்காரர் அரிசி கொடுக்கவில்லை என்று பொதுமக்கள் கடைக்காரர்களுடன் தகராறு செய்வதுமான குழப்பம் தான் நீடித்துக்கொண்டிருக்கிறது. அட்டையை வைத்துக்கொண்டு அரிசி கிடைக்காத நிலையில் பொதுமக்கள் அவதிப்படுகிருர்கள். சமீபத்தில் பொங்கல் சமயத்தில் திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்கள் சர்க்கரை கோட்டாவை பொங்கலுக்காக அதிகப்படுத்தியிருப்பதாகப் பத்திரிகையில் அறிக்கை கொடுத்தார்கள். ஆனல் அந்த மாவட்ட மக்களுக்கு அரிசி மட்டும் அல்ல, சர்க்கரையும் கிடைக்கவில்லை. இப்படி அரசாங்கம் அறிவிக்கின்றவற்றுக்கும், நடைமுறைக்கும் முரண்பாடு இருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றையதினம் அரசாங்கத்தினுல் கொடுக்கப்படுகிற அரிசி எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். இப்போது கொடுக்கப்படுகிற அரிசி ரெயின்போ கலரில் இருக்கிறது. அரிசி என்ருல் வெள்ளையாகத்தான் இருக்கும் என்று நாம் பார்த்து இருக்கிருேம். ஆனல் இன்று கொடுக்கப்படுகிற அரிசியைப்

பார்த்தால் ஒரு பக்கம் சிவப்பாக இருக்கிறது, ஒரு பக்கம் பச்சையாக இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு யார் காரணமாக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். சமீபத்தில் மத்திய சிறைக் கூடத்தில் இருந்த கைதிகளுக்கு பொங்கல் போடுவதற்காக திருச்சி மாவட்ட கலெக்டரிடம் 6 மூட்டை அரிசி வாங்கினேன். அதில் 3½ படி புழு இருந்தது. முதல் தரமான அரிசி என்பதிலேயே இத்தனை புழு இருந்திருக்குமானால் மற்றவற்றை நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டியதே இல்லை. இந்தக் குறைபாடுகளைக் களையவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். இங்கு பேசிய திருச்சி மாவட்ட அங்கத்தினர் திருச்சியில் அரிசி கிடைக்கிறது, அதுமட்டுமல்ல, இந்தப் பிரச்சினையை நாம் வெற்றிகாமாகச் சமாளித்துவிட்டோம் என்று சொன்னார்கள். அதே உறுப்பினர் திருச்சி மாவட்ட டி.டி.சி. கூட்டத்தில் கலெக்டரிடம் எங்கள் பகுதியில் அரிசி கிடைக்கவில்லை என்பதாக முறையிட்டு இருக்கிறார்கள். ஒரு மாதமாக அரிசியே கிடைக்கவில்லை என்று அங்கே முறையிட்டவர் இங்கே எல்லாம் நன்றாக இருக்கிறது என்பதாக எதிர்க்கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகப் பேசுவது என்றால் இது நிர்வாகத்தில் உள்ள ஊழலை நல்ல முறையில் களைவதற்குப் பயன்படாது. மாவட்டங்களில் உள்ள உண்மை நிலையை அமைச்சர்களுடைய கவனத்திற்குக் காண்டுவருவதற்காகத்தான் நான் இவற்றைச் சொல்கிறேன்.

அரிசிப் பற்றுக்குறை ஏன் ஏற்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்தப் பகுதியில் இருந்து எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் அரிசி போகலாம் என்பதாக ஓர் அறிக்கை கொடுக்கப்படுகிறது. ஆனால் அதேசமயம் புதுக்கோட்டையில் இருந்து திருச்சிக்கு அரிசி வந்தால் தடை செய்யப்படுகிறது. அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்து விற்றுவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல. சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். இந்த மன்ற உறுப்பினர் ஒருவர் அரிசியைப் பதுக்கி வைத்து இருந்தார் என்பதற்காக அதிகாரிகள் அந்த தானியத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். ஆனால் அதை இன்னமும் எடுத்து விநியோகிக்கவில்லை. இதுவே வேறு ஒருவருடையதாக இருந்தால் இந்நேரம் அது அப்பொழுதே பொதுமக்களுக்கு எடுத்து விற்பனை செய்ய அனுப்பப்பட்டு இருக்கும். ஆனால் இந்த மன்ற உறுப்பினர் ஒருவருடையது என்பதனாலே மறைமுகமாக மூடி வைக்கப்படுகிறது என்ற புகார் எல்லோருக்கும் கெட்ட பெயரை அளிக்கிறது. எனவே இப்படிப்பட்ட பதுக்கல் காரியத்தில் யார் ஈடுபட்டாலும் அதைக் கண்டுபிடித்து வெளிக் கொணர்ந்து மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையிலே பொற்கொல்லர்களைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கது. நான் சென்ற தடவையே 'ஏராளமான பொற்கொல்லர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய நல்வாழ்வுக்கு வழிவகை காணவேண்டும்

22nd January 1965] [திரு. எம். எஸ். மணி]

என்று கேட்டுக்கொண்டேன். அரசாங்கத்தினர் அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுப்போம் என்று சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு பொற்கொல்லருக்காவது இதுவரை நிலம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முதலிடம் தருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதுவரையில் 1,300 பேருக்கு மேல் மனுப் போட்டு 12 பேருக்குத்தான் வேலை வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல ; ஒவ்வொரு பொற் கொல்லருக்கும் 2,000 ரூபாய் தொழில் செய்வதற்காக கடன் உதவி செய்கிறோம் என்று சொன்னார்கள். அதைக் கேட்டு உள்ளபடியே பொற்கொல்லர்கள் ரொம்ப சந்தோஷப்பட்டார்கள். ஆனால் இன்றையதினம் 'இரண்டாயிரம் ரூபாய் வரை' தான் என்று டைரக்டர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒரு பொற்கொல்லருக்கு 200 ரூபாய் கொடுத்து அவன் ஒரு சைக்கிள் கடை வைக்க வேண்டுமென்று சொன்னால் அவன் அதைக் கொண்டு எத்தனை சைக்கிள் வாங்க முடியும் ? ஆகவே, கடன் கொடுப்பது போதுமான அளவுக்கு இருந்தால்தான் சிறிய தொழில்களைச் செய்ய முடியும் ; அதை விட்டு 200 ரூபாய் கொடுத்தால் அது அவர்களுடைய குடும்பச் செலவுக்குப் பயன்படுத்தக் கூடிய நிலைமைக்குப் போய்விடுகிறது. ஆகவே, அவர்களுக்கு அதிகப்படியான அளவுக்குத் தொழில் செய்வதற்காகக் கடன் கொடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இயற்கையின் காரணத்தாலே இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இன்னல் அடைந்த மக்களுக்கு நம்முடைய அரசாங்கம் செய்து வருகிற உதவியோடு நாம் எல்லோரும் அவர்களுக்காக அனுதாபம் தெரிவித்துக் கொள்ளகூடிய சூழ்நிலையில் இன்று நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை நானும் நேரிலே சென்று பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. நிலக்கோட்டை தாலுகாவிலே உள்ள சில நல்லவர்களும், சின்னாளம்பட்டியில் உள்ள சில நல்லவர்களும் நான் போய் அந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சேலை, வேட்டி வேண்டுமென்று சொன்னவுடனே 'நாங்களே செய்ய வேண்டுமென்று நினைத்தோம் ; அதை உங்கள் மூலமாகச் செய்கிறோம்' என்று சொல்லி 430 சேலைகள், 515 வேட்டிகள் 100 குழந்தைகளுக்குத் துணிமணிகள், ஏழு துண்டுகள், ஒரு போர்வை ஆகியவற்றைக் கொடுத்தார்கள். அவற்றை எடுத்துக் கொண்டு சென்று அங்குள்ள அதிகாரிகளை வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது அந்த மக்கள் 'நாங்கள் இவ்வளவு அவதிப்படும்போது அமைச்சர்கள் எல்லாம் நேரடியாக ஓடிவந்து தக்க சமயத்தில் உதவி செய்தார்கள் ; அதற்கு நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்' என்று சொன்னார்கள். அவர்கள் குறை சொல்லாமலும் இல்லை. என்ன குறை சொன்னார்கள் ?

மண்டபத்தில் வந்து இருந்தவர்கள், 'ஒரு நாளைக்கு 200 படி அரிசி சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்; கலெக்டர், மற்றுமுள்ள அதிகாரிகள் நல்ல முறையிலே கவனித்துக் கொள்கிறார்கள்; ஆனால் காலை நேரத்தில் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கிறார்கள்; குழந்தைகளுக்காகக் கஞ்சி வைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும்' என்ற குறையைச் சொன்னார்கள். அதைப் பற்றிக் கலெக்டர் அவர்களிடத்தில் சொல்லி கஞ்சி போட்டுக் கொடுக்க ஏற்பாடு செய்தால் இன்னும் அவர்களைத் திருப்தி செய்தவர்களாவோம்.

அவர்களுக்கு உதவி செய்வதற்காக அரசாங்கம் ஏராளமான பணத்தை ஒதுக்கி இருக்கிறது. அமைச்சர்கள் தங்களுடைய உயிரையெல்லாம் கூடத் தூக்கி வேறு இடத்தில் வைத்து விட்டு அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். குறிப்பாக ரெவின்யூ அமைச்சர் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியிலே படகிலே சென்றது அந்த மக்களுக்கு வியப்பாக இருந்தது. இவ்வளவு பெரிய கொந்தளிப்பில் பயம் இல்லாமல் வந்தார்களே என்று கூறினார்கள். அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து தொழில் வாய்ப்புகள் செய்து கொடுப்பது உடனடியாகச் செய்யப்பட வேண்டியதாகும். அந்த மக்களுக்கு அரசாங்கம் 30 ரூபாயும், துணிமணிகளும் கொடுத்திருக்கிறது. இந்தப் பணம் போதாது. அரசாங்கம் எவ்வளவோ செலவு செய்கிறது. ஆகவே, இந்த 30 ரூபாயை 100 ரூபாய் அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும். கனம் முதலமைச்சர் அவர்கள் மனது வைத்தால் நிச்சயமாக இதைச் செய்ய முடியும்.

கனம் திரு. வெ. ராமையா: தனுஷ்கோடியில் இருந்து வந்தவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கிறோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தெரியாமல் சொல்லி விட்டேன். தனுஷ்கோடியிலிருந்து வந்தவர்களுக்கு 100 ரூபாய் கொடுப்பது உண்மையிலேயே பாராட்டக்கூடிய அம்சமாகும். அதோடு கரையூர், வேர்க்கூடு போன்ற இடங்களில் இருந்து வந்தவர்களுக்கும் அந்தத் தொகையைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலக்கோட்டை தாலூகாவில் என்னுடைய தொகுதியில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் கவிழ்ந்து சில பேர் உயிரை இழந்தனர். அந்த விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளும் நிலைமையில் இருக்கிறோம். சோழவந்தான் போன்ற பகுதிகளில் கொடிக்கால் விவசாயிகள் நூற்றுக்கணக்கான பேர்கள் பாதிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதற்காக அனுப்பப்பட்ட மனுவைப் பார்த்துத்தான் தாசில்தார் கமிஷனர் ஆகியவர்கள் நேரடியாகப் பார்த்து கணக்கெடுத்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பத்து செண்ட், பதினைந்து செண்டில் விவசாயம் செய்யக்கூடிய கொடிக்கால் விவசாயிகள். முன்பு தஞ்சை பகுதியில் புயல் ஏற்பட்டபோது நிவாரணம் அளித்ததைப் போல் இவர்

22nd January 1965] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

களுக்கும் 50 ரூபாய் இனமாகவும், 204 ரூபாய் வட்டி இல்லாக் கடனாகவும் கொடுத்து உதவி செய்தால் நலமாக இருக்கும். இதன் காரணத்தால்தான் எங்களைப் போன்ற விவசாயிகள் அடிக்கடி இந்தச் சட்டசபையில் 'கிராப் இன்ஷூரன்ஸ்' திட்டம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வருகிறோம். இம்மாதிரி பாதகம் ஏற்படுகின்ற சமயத்தில் அது உதவிகரமாக இருக்கும். ஆகவே, அதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சோழவந்தான் பகுதியில் ரிண்டர்பெஸ்ட் என்ற காலரா போன்ற வியாதி மாடுகளுக்கு வந்து நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்து விட்டன. அதிகாரிகள் நல்ல முறையில் பார்த்து இனகுலேஷன் செய்து ஓரளவு அந்த வியாதியைத் தடை செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த வியாதி மீண்டும் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆகவே காட்டில் இன்ஷூரன்ஸ்' திட்டத்தைக் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். மாடுகள் இறந்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் கொடுத்து உதவினால் ஏழை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இராமேஸ்வரம் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிற அதிகாரிகள் மீது சில குறைகளை இந்தச் சபையிலே எடுத்துச் சொன்னார்கள். உண்மையில் அந்த அதிகாரிகள் பல நாட்கள் சரிவரச் சாப்பிடாமல், தூங்காமல் பாடுபட்டார்கள் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அவ்வாறு உற்சாகமாக வேலை செய்யக்கூடிய அதிகாரிகளைப் பார்த்து சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்னால் அவர்களுடைய உற்சாகம் குன்றி 'எதற்காக இப்படி வேலை செய்ய வேண்டும்' என்ற எண்ணம் ஏற்பட்டு விட வழி ஏற்படும். ஆகவே, அவர்கள் ஆற்றிய பணியைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள்கூட வியாபாரிகளை விட்டு விட்டு எதையும் செய்யப் போவதில்லை என்று சொன்னார்கள். கூட்டுறவு சொசைடிகள் மூலமாக அரசாங்கம் செய்ய வேண்டிய கொள்முதல் முழுவதையும் செய்ய முடியாது என்ற காரணத்தால் சிலருக்கு லைசென்ஸ் கொடுத்து கொள்முதல் பணியைச் செய்கிறார்கள். அந்த லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் எல்லோரும் அல்ல—சிலர் குறை சொல்லும்படி நடந்து கொள்கிறார்கள். 23 ரூபாய் 19 பைசா என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் 28 ரூபாய், 30 ரூபாய் கொடுத்து வாங்குகிற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. விவசாயிகள் யார் அதிக விலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு மறைமுகமாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்கி டிரான்ஸ்போர்ட் சார்ஜஸ் கொடுத்து அரிசியாக மக்கள் மத்தியில் விநியோகம் செய்யும்போது அதிகப்படியான விலைக்கு விற்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. சில வியாபாரிகள் செய்கிற

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [22nd January 1965

இந்தத் தவறுகளை உணவு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் பரிசீலித்து தவறுகள் ஏற்படாமல் தடுத்து விட்டால் நியாயம் கிடைக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்து என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பல திட்டங்கள் அந்தப் பகுதிக்கு சாங்ஷன் செய்யப்பட்டு விட்டன. நீர்ப்பாசனத் திட்டங்களில் பழனி ஆண்டவர் ஓடைத் திட்டம் சாங்ஷன் செய்யப்படவில்லை. மஞ்ச நதி திட்டம் வருகிறது. அதுவும் சாங்ஷன் செய்யப்படவில்லை. வத்தலகுண்டில் காமாட்சி அம்மன் அணை ஒன்றும் வந்திருக்கிறது. இம்மாதிரியான சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவற்றை பரிசீலனை செய்து இவற்றையெல்லாம் சாங்ஷன் செய்யவேண்டும். குளம் கண்மாய் தேக்க முடியாத பகுதிகளில், கிணற்றின் மூலம் பாசனம் செய்யும் சூழ்நிலை இருக்கும் பகுதிகளில் 20 ஏக்கர் அல்லது 30 ஏக்கர் என்று ஒரு அளவு வைத்து இவ்வளவு ஏக்கர்கள் தரிசு நிலங்களை ஒன்றாகச் சேர்த்து 5,000 அல்லது 10,000 ரூபாய் செலவில் ஒரு பெரிய கிணறு வெட்டி அதில் பம்ப் செட் வைத்துக் கொடுத்தால் நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதோடு கூட கிணற்றுப் பாசனத்தை மட்டும் நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு நலன் பயப்பதாக இருக்கும். அதோடு நம் உற்பத்தியின் அளவும் பெருக வாய்ப்பிருக்கிறது. கடைசியாக, கவர்னர் பெருமான் அவர்கள் தமிழக மக்கள் மீது நம்பிக்கை வைத்து இங்கு அமர்ந்திருக்கிற மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களிடமும் நம்பிக்கை வைத்து இருப்பதில் களங்கம் ஏற்படுத்தி விடக் கூடாது. தமிழ் நாடு உலகத்திலேயே வியக்கக் கூடிய அளவில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்று, இரண்டு, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் எல்லாம் வெற்றிகரமாக நடந்தேற காரணம், சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும், சர்வகட்சி அங்கத்தினர்களும் ஒத்துழைப்பு கொடுத்த காரணத்தினால்தான் என்பதை சொல்லாமலேயே நம் பெருமையை விளக்கியிருக்கிறார்கள். அதை நிலைநாட்டும் வகையில், நம் மீதுள்ள நம்பிக்கையை நிலைநாட்டும் அளவில் 26-ம் தேதி நடத்த இருக்கிற துக்க தின நாளை, நமது மதிப்பு மிக்க முதல் அமைச்சர் அவர்கள் சொன்னது போல் 25-ம் தேதி அல்லது 27-ம் தேதி வைத்துக் கொண்டு 26-ம் தேதியை எல்லோரும் குடியரசுத் தினமாகக் கொண்டாடினால் நமக்கு பெரும் பெருமை ஏற்படுவதோடு சர்வகட்சி அங்கத்தினர்களும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் அதை நிலைநாட்டியவர்களாவார்கள் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. மா. இராசாங்கம்:** மதிப்பிற்குரிய துணை தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் தமது உரையில் தனுஷ்கோடி பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உரை ஏதோ தூரத்து சொந்தக்காரர் சாவு வீட்டில் துக்கம் விசாரிப்பது போல்தான் தென்படுகிறதே தவிர ஆத்திரமான, ஆறுதலான, ஆழமான காரிய

22nd January 1965] [திரு. மா. இராசாங்கம்]

காரணங்கள் அதில் காணப்படவில்லை. இயற்கை அன்னையின் சீற்றத்தால் இது ஏற்பட்டது என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். பழங்காலத்தில் பருவ மழை தவறி விட்டால், பசி, பிணி ஏற்பட்டது என்றால், கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது என்றால் நாட்டை ஆளுகிற மன்னன் நீதியில் ஏதோ தவறு ஏற்பட்ட காரணத்தினால் அப்படி வரும் என்பது பழம் தமிழ் எழுத்துக்களின் சாரமாகும். அந்த அறிஞர்களின் சாரப்படி நான் அதை எடுத்துச் சொல்லும்போது இயற்கை அன்னையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவிற்கு எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்வதை விட்டு விட்டு இதைச் செய்வதற்கு எவ்வளவோ வழிவகைகள் இருக்கின்றன என்பதை நான் சொல்லியாக வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். இயற்கை தவறக் காரணம் அரசு தவறுவதே. அரசியல் தர்மம் கெட்டு விட்டதினால்தான் இயற்கை தவறியிருக்கிறது. இந்திய அரசியலில் அரசியல் தவறு ஏற்பட்டதன் காரணமாகத்தான் இந்தக் கடல் கோள் ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. இதற்கு நாம் என்ன செய்வது என்றால், புயல் ஏற்பட்டதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று கேட்டால், 20-ம் நூற்றாண்டில் அதை ஒரு கூற்றாக யாரும் ஒத்துக் கொள்ள முடியாது. இருபதாம் நூற்றாண்டு என்பது விஞ்ஞான உலகம். சுவர் எழுப்புவது போன்ற பல காரியங்கள் செய்ய வழிவகை இருக்கிறது. அப்படி சுவர் எழுப்பி இதைத் தடுத்திருக்கலாம் என்று எங்கள் கட்சி துணைத் தலைவர் அவர்கள் கூறியபோது அது குறித்து பெரிய அமைச்சர்களும், பெரிய தலைவர்களும் கேலியும் கிண்டலுமாகப் பேசினார்களே தவிர அதுபற்றி ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வரவில்லை. ஆகாயத்தில் கோட்டை கட்ட முடியுமா என்று ஒருவரும் சுவர் எழுப்ப முடியுமா என்று கேலி பேசிய மற்றொருவரும் கேலி பேசிக் கொண்டுதான் இருந்தார்கள். அது பனை அளவிற்கு உயர்ந்து வரும் என்று தெரிந்திருந்தும் சுவர் கட்டவில்லை என்றால், வருவது தெரிந்தே சுவர் கட்ட முடியாமல் போனதை வேதனையோடு சொல்ல வேண்டியிருக்கிறது. மக்களைக் காக்கும் அக்கறை அவர்களுக்கு உண்மையாகவே இருந்திருக்குமானால் அதைச் செய்து முடித்திருக்கக் கூடும். ஜப்பான் நாட்டில் அப்படி செய்து முடித்திருக்கிறார்கள். அவர்கள் இரும்புச் சுவரை எழுப்பியிருக்கிறார்கள். ஜப்பானில் செப்டம்பர் மாதம் அங்குள்ள மக்களுக்கு கொலை நடுங்கும் மாதமாகும். அந்த நாட்டில் செப்டம்பர் மாதம் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு அவர்களை வருடாவருடம் பாதித்துக் கொண்டிருந்தது. வருடாவருடம் இப்படி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கண்டு அங்கு இந்தச் சுவரை எழுப்பியிருக்கிறார்கள். கடல் கொந்தளிப்பில் இருந்து மக்களை காப்பாற்றியிருக்கிறார்கள். அப்படி அதை செய்து "ஃப்யூஜி" கம்பெனியின் விளம்பரத்தை இந்த மன்றத்தின் முன்பாக வாசித்துக் காட்ட விரும்புகிறேன். அமெரிகப் பத்திரிகையில், 'நியூஸ்வீக்' என்ற பத்திரிகையில் கடல் கோள் ஏற்பட்டுக் கொண்டிருந்த ஜப்பானில் அதிலிருந்து நாட்டைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பது பற்றி குறிப்பிடும்போது சொல்லியிருப்பதை வாசிக்கிறேன்.

[திரு. மா. இராசாங்கம்] [22nd January 1965

'An end to natural calamities: ' In Japan, September was considered the month of "disasters"—this was because of typhoons and stormy weather. In the past, these storms left destruction and devastation in their wake. However, this is no longer the case because break waters and shore protection facilities have been constructed throughout Japan, using Fuji's new steel piles, thus preventing landslides and resisting the impact of tidal waves.'

ஆக இந்த விஞ்ஞான உலகத்தில் இருபதாம் நூற்றுண்டில் பழங் காலத்தைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது சாலச் சிறந்ததல்ல என்பதை தங்கள் மூலம் முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்.

கனம் திரு வெ. ராமையா: அந்த விளம்பரத்தில் என்ன குறிப் பிட்டிருக்கிறுர்கள்? சுவர் கட்டியிருக்கிறுர்களா அல்லது பைல்ஸ் இறக்கி லான்ட் ஸ்லேட் ஆகாமல் செய்திருக்கிறுர்களா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. மா. இராசாங்கம்: ஜப்பானில் கடலில் தடுப்புச் சுவர் கட்டியிருப்பதற்கு என்னிடம் இதோ சான்று இருக்கிறது. அடுத்து, மகாபலிபுரத்தில் இதற்கு முன் கோவில்கள் பலவற்றை கடல் விழுங்கியிருக்கிறது. கடலோரத்தில் அலே நெருங்கிக் கொண்டிருக்கிறது. இருக்கிற கோவிலேயும் அது ருசி பார்த்து விடுவதற்கு முன்பாக அவற்றை நாம் காத்தாக வேண்டும். ஏனெனில் இதுவரை புதிதாக பெருமையான காரியங்களே அரசாங்கம் செய்து முடிக்கவில்லே என்றுலும் பழங்கால பெருமையையாவது நாம் காப்பாற்றியாக வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சுட் டிக் காட்டுகிறேன். அங்கு அழிவு ஏற்படாமல் தடுக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். தனுஷ்கோடியில் இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றி குறிப்பிட்டிருக்கிறுர்கள். 300 என்று குறிப்பிட்டிருக்கிறுர்கள். இப்படி இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றி குறிப்பிடும்போது மதுரையில் நடந்த பள்ளி நிகழ்ச்சியைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. மதுரையில் பள்ளி மாணவி கள் இறந்தபோது இறந்தவர்கள் 37 என்று கணக்கு கொடுத் திருந்தார்கள். தங்கள் மூலம் நான் சொல்லிக் கொள்வேன். உண்மைக் கணக்கு 95. ஆக சர்க்கார் புள்ளி விவரங்களில் எங்களுக்கு அவ்வளவு சரியான நம்பிக்கை உண்மையில் இல்லே என்பதை தங்கள் மூலம் தெளிவாக நான் சொல்லிக் கொள்வேன். மேலும் தனுஷ்கோடியில் இறந்தவர்கள் எப்படி புதைக்கப்பட் டார்கள் என்றுல் சோற்றுக்கு வழியற்று இருப்பவர்களே கூட இறந்தபின் மரியாதையோடு புதைப்பது என்பது தமிழ் பண் பாட்டில் ஊறிப்போன ஒரு பண்பாடாகும். தனுஷ்கோடியில் நாய்கள் கடித்துத் தின்று கொதறிப் போடுகிற அளவிற்கும், குப்பையைப் புதைப்பதுபோல்தான் புதைத்திருக்கிறுர்களே தவிர மனிதாபிமானத்தோடு நடத்துகிற வாய்ப்பு அங்கு இல்லாமல் போனது பற்றி வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். உயிர்களேத்தான் உங்களால் காப்பாற்ற முடிய வில்லே என்றுலும் பிணங்களேயாவது மரியாதையோடு முன் எச்சரிக்கையாக முன்கூட்டியே எடுத்து நல்ல காரியங்களே செய்திருக்க வேண்டும்.

22nd January 1965] [திரு. மா. இராசாங்கம்]

• • • •

மேலும் கவர்னர் அவர்களது உரையில், அரிசி பஞ்சத்தைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் அரிசி பஞ்சத்தை நல்ல முறையில் சமாளித்துவிட்டோம் என்று பெருமையாக சொல்லுகிறார்கள். இந்த அரிசிப் பஞ்சம் நகர் புறங்களில் தான் அதிகமாக ஏற்பட்டதைத் தொடர்ந்து, அதை காப்பாற்றுவதற்காக நாட்டுப் புறங்களிலுள்ளவர்களிடமிருந்து கொள்ளை அடிப்பது போன்று நெல்லை வாங்கினார்கள். பல வீடு களிலும் ஸீல் போட்டு வைத்தார்கள். இதை எதற்காக செய்ய வேண்டும் என்று அங்குள்ள கலெக்டர் அவர்களிடத்தில் கேட்டோம். நாங்கள் தெரிவித்த நேரத்தில் இதைப் பற்றியெல்லாம் நாங்கள் சர்க்காருக்கு தெரிவித்து விட்டோம் என்று எங்களிடம் சொல்லி விட்டார்கள். நாங்கள் சொல்வதை ஒன்றும் கேட்காமல் அங்குள்ள அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல் ஸீல் வைத்து விட்டதோடு மட்டுமல்ல, சாதாரணமான உபயோகத்திற்கு வைத்திருந்த நெல்லையும் அதிகாரிகள் அடித்து பிடித்து வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்கள். இதன் காரணமாக அங்குள்ள ஏழை மக்கள் இன்றைய தினம் தங்கள் உபயோகத்திற்கு அரிசியை விலை கொடுத்து வாங்கி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். . . 11-00 a.m.

(மணியடிக்கப்பட்டது)

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் மாநிலத்தில் தனுஷ்கோடி பகுதியில் ஏற்பட்ட சேதத்தைப் பற்றியும்; பயங்கரமான நிலைமையைப்பற்றியும் நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சவிஸ்தாரமாக தனது அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதில் அங்கு ஏற்பட்ட எல்லாவிதமான கஷ்ட நஷ்டங்களைப்பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அங்கு புயல் ஏற்பட்டது என்ற தகவல் அரசாங்கத்திற்கு தெரிந்ததும் மிகவும் பிரமிக்கதக்க அளவுக்கு எல்லோரும் பெருமையோடு எடுத்துக்கூறக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள். தங்களால் எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு மாக்ஸிமம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவிற்கு உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தை நான் மனமார பாராட்டுகிறேன். எனக்கு சிறு வயதிலிருந்தே என்ன பழக்கம் என்றால், எதை எடுத்தாலும் 'கிரிட்டிஸைஸ்' செய்து கொண்டிருப்பது பழக்கம். அது என்னுடைய ரத்தத்திலேயே ஊறிப்போய்விட்டது. எங்காவது தவறுதல் ஏற்பட்டிருக்குமா என்று பார்ப்பதே என் வழக்கம். அப்படியெல்லாம் பார்த்தும் கூட எந்த விதமான தவறுதலும் இல்லாமல் எல்லோரும் பாராட்டக் கூடிய வகையில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த மாதிரி கஷ்டங்கள் ஏற்படுகின்ற காலத்தில் மக்களுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யவேண்டும் என்கிற டிரெடிஷனை நமது முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் அமைத்துக்கொடுத்திருக்கிறார்கள். பத்து வருடங்களுக்கு முன்னால் ராமநாதபுரம் ஜில்லாவில் புயல் ஏற்பட்ட போது, திரு. காமராஜ் அவர்கள் அந்த ஜில்லாவிற்கு உடனே

*** Expunged as ordered by the Chair.

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [22nd January 1965

வந்து; புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் சென்று; கழுத்தளவு தண்ணீர் உள்ள இடங்களில் எல்லாம் நீந்தி சென்று மக்களுக்கு வேண்டிய நிவாரணங்களை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த முறையிலேயே நமது முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களும், முழு மூச்சுடன் தமது சகாக்களை அனுப்பி மக்களுக்கு உடனடியாக என்னென்ன உதவி செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அதிலும் குறிப்பாக ராமனுதபுரம் ஜில்லா வாசி என்ற முறையிலும்; அங்கு துன்பப்பட்ட மக்களின் சார்பிலும் எனது மனமார நன்றியை உண்மையிலேயே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனல் எதையும் நான் கிரிட்டிஸைஸ் செய்வது போன்று ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இதைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். இந்த ஜனநாயக ஆட்சியில் எந்த இடத்தில் யார் தவறுதல்களை செய்தாலும் அது அரசாங்கத்தைத்தான் சேரும். அது மந்திரிகளைத்தான் சாரும். அரசாங்கத்திலுள்ள சாதாரண ஒரு சிப்பந்தி ஏதாவது தவறு இழைத்தாலும்; அதற்கு பதில் சொல்ல வேண்டியது மந்திரி தான். அப்படி குற்றங்களை சொல்லும்போது அதிகாரிகளின் சார்பில் அப்படியல்ல என்று மந்திரிகள் மறுப்பதற்கு முயற்சி செய்வதும் வழக்கம் தான். இது வெள்ளைக்காரன் காலத்திலிருந்து நமக்கு டிரெடிஷனுக இருந்து வருகிறது. முக்கியமாக ஏதோ புயலை தவிர்க்கின்ற முறையில் தடுப்புச் சுவர் போன்றவற்றை எழுப்பியிருக்கலாம் என்றெல்லாம் அரசாங்கத்தின் மீது பழியை நமது நண்பர்கள் பலர் இங்கு சொன்னர்கள். இம்மாதிரி பழியைப் போட்டால் அது எந்த தர்மத்தை சேர்ந்தது என்று தெரியவில்லை. தனுஷ்கோடி போன்ற இடத்தில் தடுப்புச் சுவர் போடுவது என்பது மனதிலும் எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று தனுஷ்கோடி என்பது இப்போதுள்ள நிலைமையில் மூன்று பக்கத்திலிருந்தும் கடல் அரித்துக்கொண்டிருக்கிற ஒரு பகுதி. வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் கடல் அரித்துக்கொண்டிருக்கின்ற இடம். அந்த இடத்தையே கைவிட்டு விடவேண்டும் என்று முன்னல் இருந்தவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதில் தடுப்பச்சுவர் கட்டவில்லை என்று அரசாங்கத்தை குறை கூற முடியாது. ஏதோ வேண்டுமென்றால் ஃபோர்ஸ் பண்ணி அங்குள்ள மக்களை வேறு இடத்திற்கு போகச் சொல்லியிருக்கலாம், அதை அரசாங்கம் செய்யவில்லை என்று குறை சொல்லலாமே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை. இப்போது பார்த்தால் கூட தெரியும் அங்குள்ள தண்டவாளங்கள் இருந்த இடம், ராஃப்டர்கள் இவைகளை எல்லாம் பார்த்தால் கூட எவ்வளவு தூரம் தண்ணீர் அரித்துக்கொண்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும். அலை அந்த அளவுக்கு ஓங்கி எழுந்து அடிக்கக் கூடிய இடம். எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் தண்ணீர் அடித்து, அடித்து துருப்பிடித்திருப்பதை நம்மால் பார்க்க முடியும். அங்கிருந்த பங்களா, சத்திரம் இவைகள் எல்லாம் முன்னலேயே சிரழிந்து போய்விட்டது. 1939-ல் நான் டிஸ்ட்ரிக்ட் போர்ட் வைஸ்பிரஸிடெண்டாக இருந்த போது அங்கு ஒரு travellers bungalow இருந்தது. வேறொரு பங்களா இருந்தது.

இவை எல்லாம் இப்போது போய்விட்டது. இப்போது நல்லமுறையில் அங்கு எந்தவிதமான கட்டடமும் இல்லை என்று சொல்லலாம். அந்த நிலைமை அங்கு இருந்து கொண்டிருக்கிறது.

சேத விவரங்களைப்பற்றி சொல்லுகின்ற விஷயத்தில் ஒரு பிரச்னை என்னவென்றால், சாதாரணமாக ஏதாவது புயல் அபாயம் ஏற்படும் என்றால் அதை வானொலி மூலமாக அறிவிப்பார்கள், அதோடு பத்திரிகையிலும் செய்திகளை வெளியிடுவார்கள். நானும் பாதிக்கப்பட்ட இந்த இடங்களுக்கெல்லாம் போய் இருந்தேன். சில விவரங்களை அங்குள்ள அதிகாரிகளே சொல்லியிருக்கிறார்கள். அதாவது ராமநாதபுரம் ரெவின்யு டிவிஷனல் ஆபிஸர் முதுகளத்தூர் டி. எஸ். பி. அவர்கள் தான் முதலாவது இந்த இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். அதிகாரிகள் என்ற முறையில். They were the first official people to land in Dhanushkodi. நானும் நண்பர் கோசல்ராம் அவர்களும் இந்த இடங்களைப் போய் பார்வையிடுவதற்காக மண்டபத்திற்கு காலையில் போய் சேர்ந்தோம். அங்கு முகாம் செய்திருந்த கனம் ரெவின்யூ அமைச்சர் ராமையா அவர்களைப் பார்த்தோம். அவர்கள் செய்து கொண்டிருக்கின்ற வேலைகளை எல்லாம் பார்த்தோம். அவர்கள் எடுத்துக்கொண்டிருந்த நடவடிக்கைகளை எல்லாம் கவனித்தோம். எப்படியும் தனுஷ்கோடி பகுதிக்கு செல்ல வேண்டும் என்ற ஆவலில் வழி பார்த்துக் கொண்டிருந்தோம். முதலாவது வடதிசை வழியாகப் போன கப்பல் சரியானபடி போகமுடியாமல் இருந்தது. அந்த இடத்தில் மேடாக இருந்ததின் காரணமாக பின்னால் போட் வழியாக செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாங்கள் பின்னால் தனுஷ்கோடிக்குப் புறப்பட்ட 'ஐ.என்.எஸ். சாரதா' என்ற கப்பலில் புறப்பட்டோம். அந்தக் கப்பலில் 'டெவில் பாயின்ட்' அதாவது பேய் முனை என்று சொல்வார்கள், அந்த வழியாக போனோம். அதிகாரிகள் அல்லாதவர்களாக, நான் அபிஷியல் லெவலில் முதல் முதலில் போய் சேர்ந்தது நாங்கள் தான். We were first non-official people அங்குள்ள பீயரில் போய் எங்கள் கப்பல் போய் அணைவதற்கு முன்னாலேயே நான் கரையில் ஜம்ப் பண்ணினேன். பர்மா மற்றும் பல இடங்களுக்கு நான் அடிக்கடி கப்பலில் சென்றிருக்கிறேன். சாதாரணமாக கப்பல் அணைவதற்கு முன்பாக நான் ஜம்ப் பண்ணிவிடுவேன். அந்தப் பழக்கம் எனக்கு இருந்தது. அந்த முறையில் ஜம்ப் பண்ணினேன். ஒரு ராஃப்டரில் தான் நிற்க முடிந்தது. மிகவும் பயமாக இருந்தது. அங்கங்கே வெறும் போஸ்ட்-கள் தான் நின்று கொண்டிருந்தன. ராப்டரோடு ஒட்டிக்கொண்டிருந்த பீம் வழியாக கீழே விழுந்து விடாமல் மெதுவாக சென்றோம். கப்பல் அணைவதற்கு 10 நிமிடங்கள் ஆகிவிட்டது. அதிலிருந்து இறங்கி 2 பர்லாங் தூரம் வெறும் பள்ளமாக இருந்தது. அங்கிருந்த பீமில்தான் உட்கார்ந்து உட்கார்ந்து மெதுவாகப் போனோம். எங்களோடு ஹைவேஸ் சீப்-எஞ்சினியர் திரு. சிவசங்கர முதலியார் அவர்களும் வந்திருந்தார். அவருக்கு வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்று முன்பே சொல்லியிருந்தேன். இருந்தும் மிக ஆவலுடன் அவர்களும் எங்களுடன் வந்தார்கள். இந்த கஷ்டத்தோடு தனுஷ்கோடி

போய் சேர்ந்தோம். இந்த சந்தர்ப்பத்தில் ஹெலி காப்டரில் திரு. ராமையா அவர்களும் அங்கு வந்து இறங்கினார்கள். நாங்கள் போய்ச் சேர்ந்ததும், அங்கு இரண்டு நாட்களாக எந்தவிதமான தொடர்பும் இல்லாத நிலைமையில் இருந்த மக்கள், தங்களுக்கு மறுவாழ்வு கிடைக்குமோ கிடைக்காதோ என்று ஏங்கிக்கொண்டிருந்த மக்கள் எங்களைப்பார்த்ததும் தங்களுக்கு உயிர் வந்து விட்டது போன்ற உணர்ச்சியுடன் எங்களைப்பார்த்தனர். காங்கிரஸ் ஊழியர்கள், தொண்டர்கள் பலரும் அங்கு இருந்தனர். இவர்கள் எங்களிடம் முக்கியமாக சொன்னது என்னவென்றால், எங்களுக்கு வானொலி மூலமாக எந்தவிதமான அறிவிப்பும் செய்யவில்லை. வானொலியில் ஏதாவது அறிவிப்பு செய்திருந்தால் நாங்கள் சற்று உஷாராக இருந்திருப்போம். முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருப்போம். நாங்கள் ரேடியோவை கவனித்துக்கொண்டிருந்தோம், அன்றைய தினத்தில் நாகப்பட்டினம், தொண்டி போன்ற இடங்களைத் தான் ரேடியோவில் சொன்னார்களே தவிர தனுஷ்கோடியைப்பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்று அங்கிருந்த மக்கள் எங்களிடம் சொன்னார்கள். விசாரித்தேன். ஆஃபீசர்களைக் கேட்டேன். ரயில்வே அதிகாரிகளைக் கேட்டேன். அவர்களெல்லாம் சொல்லவில்லை என்று சொன்னார்கள். தனுஷ்கோடி, ராமேஸ்வரம் என்று சேர்த்து சொல்லி இருந்தால் நாங்கள் எச்சரிக்கையாக இருந்திருப்போம் என்று சொன்னார்கள்.

இதிலே அரசாங்கத்தைப் பாராட்டுவது மட்டுமல்லாமல்; அங்குள்ள ரேடியோ ஸ்டேஷன் இன் சார்ஜ்-ஆக இருந்த போலீஸ் அதிகாரி அவர் ஹெட் கான்ஸ்டபிள் என்று நினைக்கிறேன். அந்த அதிகாரி செய்த சேவை ரொம்பவும் பாராட்டத்தக்கது. இன்றைக்கு அந்த ஐலண்டில் சிலர் மிஞ்சி இருக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரியின் சேவையினால் தான். அதற்கு அரசாங்கம் பாராட்டக் கூடிய முறையில் ஏதாவது உயர்ந்த தொண்டு செய்தவர்களுக்குக் கொடுப்பது என்று இருக்குமானால், அது அந்த அதிகாரிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது பற்றி அரசாங்கத்திற்கு தகவல் வந்தது. அவருடைய சேவையைச் சீராக பாராட்ட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: அந்த எண்ணம் ஏற்பட்டது பற்றி ரொம்ப சந்தோஷம்.

மற்றப்படி ஆள் சேதம் எவ்வளவு என்ற விஷயத்திலே 500 பேர்கள் செத்திருக்கலாம் என்று கனம் முதல் அமைச்சர் சொல்லி விட்டார்கள். இருக்கலாம். அவருடைய அறிக்கையில் 100 பேர்களுடைய பெயர்கள் தான் தெரிகிறது, பிணங்களும் 100 தான் கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி இருக்கும்போது 500 பேர்கள் என்று சொன்னால் அது எஸ்டிமேட் தான். நான் என்னுடைய அறிக்கையில் 800 பேர்கள் என்று

22nd January 1965] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

சொல்லியிருக்கிறேன். துரதிருஷ்டவசமான ரயில் வண்டியில் பிரயாணம் செய்தவர்கள் 300 பேர்கள் என்று சொல்லுகிறோம். 110 பேர்கள் தான் அன்றைய தினம் டிக்கட் வாங்கியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சா. கணேசன் அவர்கள் ராமநாதபுரம் ஜில்லாவிலே இருக்கின்றவர்கள் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்வார்கள் என்று சொன்னார்களாம். நான் அப்படி போவது இல்லை. (ஒரு அங்கத்தினர்: அவரும் உங்கள் ஜில்லாதான்.) ஒரு விஷயம் மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அந்த ட்ரெயின் கடைசி ட்ரெயின். அந்த ட்ரெயினில் மாத்திரம் டிக்கெட் இல்லாமல் போகும் பழக்கம் இருக்கிறது. இராமநாதபுரம் ஜில்லா பூராவிலும் இல்லை. அந்த ஒரு ட்ரெயினில் மாத்திரம் உண்மை தான். அது வழக்கம் தான். அதனால் மண்டபம் பிளாட்ஃபாரத்தில் பார்த்தவர்கள் 300 பேர்கள் இருக்க முடியும் என்று சொல்லுகிறார்கள் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஐந்நூறு, எண்ணூறு, ஆயிரமா, மூவாயிரமா என்பதெல்லாம் ஏலம் போடுகிற மாதிரி தான். கனம் அங்கத்தினரும் ரொம்ப அதிகமாகச் சொல்லவில்லை. நான் சொன்னதற்கும் அவர் சொன்னதற்கும் 300 தான் வித்தியாசம். இறந்து போனவர்கள் டிக்கெட் இல்லாமல் போனார்கள் என்று சொல்லுவது முறையல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: இறந்து போனவர்கள் போய் விட்டார்கள். அவர்களுக்கு ஒன்றும் நிவாரணம் கொடுக்கவில்லை. இறந்து போனவர்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்லவேண்டும் என்றால் அதற்கு அரசாங்கத்திற்கு நல்ல பெயர் வந்து விடாது, அல்லது எண்ணிக்கையை அதிகமாகச் சொன்னால் நல்ல பெயர் போய்விடாது . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இறந்து போனவர்கள் டிக்கெட் இல்லாமல் போனார்கள் என்று சொல்லவேண்டாம் என்று தான் சொன்னேன்.

திரு. ஆர். வி. சுவாமிநாதன்: அது ஒரு பிரச்னை. ட்ரெயின் போவதற்கு யோசனை கேட்டார்களாம். அதற்கு கண்ட்ரோல் மதுரையில் இருக்கிறது. ரொம்பவும் அபாயமாக இருக்கிறது என்று சொன்னார்களாம். அப்போதும் கண்ட்ரோலிலிருந்து, 'ஓட்டு, ஓட்டு, மூவ் ஆன்' என்று சொன்னார்களாம். அந்த மாதிரி சொல்லுகிறார்கள். அது உண்மையா என்று விசாரணை செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ப்ரிட்ஜ் இன்ஸ்பெக்டர் பைலட் செய்கிறேன் என்று அவரும்போய் விட்டார். அதைப் பற்றி முடிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு இன்னும் ஒரே ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ரொம்ப பேர்கள் இங்கே பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பில் குடியரசு தினத்தன்று துக்க நாள் கொண்டாடுவதைப் பற்றி பலர் பேசினார்கள். நேற்று கூட காரசாரமாகப் பேசப்பட்டது. ஒரு வேண்டுகோள். நம்

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [22nd January 1965

நாட்டுக்குப் பெற்ற சுதந்திரம் தண்ணீரை விட்டா பெற்றோம்? இல்லை, கண்ணீரை விட்டுப் பெற்றோம். அது மட்டுமல்ல. நமது சுதந்திரக் கோட்டை எப்படிக் கட்டப்பட்டது என்றால், எங்களுடைய சதையையும் எலும்புகளையும் செங்கல்லாக வைத்து, ரத்தத்தை சாந்தாக்கி, கண்ணீரைத் தண்ணீராக ஊற்றி கட்டப் பட்ட கோட்டை சுதந்திரக்கோட்டை. நாங்கள்—பாடுபட்ட தொண்டர்கள் உயிரோடிருக்கிறோம். சுதந்திர தினத்தை துக்க தினமாகக் கொண்டாடுவது என்றால், எங்கள் மனது எவ்வளவு குமுறுகிறது, ரத்தம் துடிக்கிறது என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். இந்தி பற்றி ஆட்சேபிக்க வேண்டுமென்றால் ஆட்சேபிக்க லாம். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இந்தியை அவசியம் மக்கள் படிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்ய எங்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் சுதந்திர தினத்தன்று இந்த மாதிரி கொண்டாடக் கூடாது என்று பணிவோடு கூறி, இதைப் பற்றி அவர்கள் மறு பரிசீலனை செய்ய இன்னும் காலம் தாழ்ந்து விடவில்லை, இது வேண்டாம், இதனால் அரசாங்கத்தைப் புண்படுத்துவதாக நினைக்கக்கூடாது, சுதந்திரத்திற்காகப் பாடு பட்ட கோடிக்கணக்கான மக்களுடைய மனதைப் புண் படுத்து கிறது என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர் கள் ஆற்றிய உரையிலே என்னுடைய கருத்தையும் கூறுவதற்கு விரும்புகிறேன். இந்த உரையிலே நம்முடைய மாநில அரசாங்கத் திற்கு ஒரு புதிய பொறுப்பு ஏற்பட்டிருப்பதால் அதைப் பற்றியும் குறிப்பிட்டிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். நம் அரசாங்கத் தில் பணியாற்றக் கூடிய என்.ஜீ.ஓ.-க்களுக்கு, மறுபடியும் பாராளுமன்றத்தில் அறிவிப்பு வந்த காரணத்தினால் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு கிராக்கிப்படி உயர்வு ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், நம் அரசாங்கம் அதைப் பற்றி கவனித்து அது பற்றிக் குறிப்பிட்டிருக்கும் என்று நம்பினோம். ஒரு வேளை முதல் அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே இது பற்றித் தெரிவிக்கலாம் என்று இருந்து விட்டார் என்று நம்புகிறேன். பட்ஜெட்டிலாவது மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், மாநில சர்க்கார் ஊழியர்களுக் கும் கொடுக்கப்படும் கிராக்கிப்படியில் உள்ள வேறுபாட்டைக் குறைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

குறிப்பாக இந்த மன்றத்திலே இந்த விவாதத்திலே கன்னியா குமரி மாவட்டத்தில் ஏற்பட்ட போலீஸ் சூடு பற்றி எல்லோரும் தெரிவித்தார்கள். அரசாங்கம் நமது முதல் அமைச்சர் மூலமாக போலீஸார் செய்த தவறை ஒப்புக்கொண்டு இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க முன் வந்தது உண்மையிலேயே பாராட்டப் படவேண்டிய செய்தி ஆகும். ஆனால் அதே சமயத்திலே ஒரு வேண்டுகோளை அமைச்சருக்கு விடுக்க விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் என்ன என்று ஆராய வேண்டும். தூத்தூரில் ஏற்பட்ட நிகழ்ச்சிதான்—சமுதாயத்தில் மதிப்பு வாய்ந்த ஆசிரியர்களை விலங்கிட்டு அழைத்துச் சென்றது

22nd January 1965] [திரு. செ. மாதவன்]

தான் இதற்கு அடிப்படையான காரணம் என்று அமைச்சர் அவர்கள் உணர வேண்டும். நாங்கள் பல முறை இந்தச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொன்னோம். உறுப்பினர் ஒருவரை மருத்துவ விடுதிக்கு அழைத்துச் செல்லும்போது கூட விலங்கிட்டு அழைத்துச் சென்றது சட்ட விரோதம் என்று எடுத்துக் காட்டிக் கூட பேசினோம். அப்போது எதிர் கட்சிக்காரர்கள் பேசுகிறோம் என்ற அலட்சிய மனோபாவத்தில் பதில் சொன்னார்கள். சட்டத்திலுள்ள விதியை வாசித்துக் காண்பித்தோம். எந்த நேரத்தில் எந்த மாதிரிக் கைதிகளுக்கு விலங்கிடலாம் என்று விளக்கம் கொடுத்தோம். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் விலங்கிடப் பட்டார்கள் என்று அதற்கு அலட்சியமாக பதில் சொல்லப் பட்டதே யொழிய உண்மையை உணர மறுத்தார் அமைச்சர். இப்போது ஆசிரியர்களை விலங்கிட்டு அழைத்துச்செல்லும் நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதைக் கண்டு காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்களே வெறுப்பு அடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் டாக்டர் நடராஜன் அவர்கள் சொன்னது போல போலீஸ் விதிகளில் உள்ள குறைகளை நிவர்த்திக்க முன்வர வேண்டும். கைதிகள் பற்றி ஒரு விதி இருக்கிறது. அதைப் பற்றி தக்க பரிசீலனை செய்து வெள்ளைக்காரன் ஆட்சிக்கும் ஜனநாயக ஆட்சிக்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டவேண்டுமென்று நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். கன்னியாகுமரி மாவட்ட நிகழ்ச்சியின்போது மாவட்ட கலெக்டர் இருந்திருக்கிறார், எஸ். பி. இருந்திருக்கிறார், சட்ட மன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வளவு பேர்கள் இருந்து நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கும்போது நீதி மன்ற விசாரணை வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம், காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கே கேட்பதற்கு பயந்து, வெளியே பேசுகிறார்கள். . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர்கள் பேசும்போது சபையிலே என்ன சொல்லுகிறார்களோ அதுதான் சரியானது வெளியே வேறு விதமாகப் பேசுகிறார்கள் என்று சொல்லுவதானது ஒரு கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களைப் பற்றி குறையாகச் சொல்லுவதாக இருக்கிறது. அந்த மாதிரிச் சொல்லாமல் நிறுத்திக்கொண்டால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. மாதவன்: அதற்காகத்தான் இந்த மன்றத்தில் திரு. குஞ்சன் நாடார் அவர்கள் தெளிவாகக் கேட்டார்கள், நீதி விசாரணை வேண்டுமா, வேண்டாமா என்று. என்னுடைய அடிப்படை கருத்து, இது போன்ற நிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது ஆர்.டி.ஓ. விசாரிக்க வேண்டும் என்பதெல்லாம் வெள்ளைக்காரர்களால் அவர்கள் ஆட்சியில் வகுக்கப்பட்ட சட்டம். ஜனநாயகத்தில் அது போன்ற நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது நீதி விசாரணை வேண்டும். அதை மறுப்பது அவ்வளவு பொருத்தமாகாது என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ராமேசுவரத்தில் வீசிய புயலைப்பற்றி நாம் இங்கே புயல் போல வாதங்களைக் கேட்டோம். மற்ற அங்கத்தினர்களும் பேசினார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் பேசினார்கள். அவர்

[திரு. செ. மாதவன்] [22nd January 1965

பேசியது தான் எங்களுக்கு வருத்தம் தருகிறது, அவர் மிகுந்த ஆத்திரத்தோடு பேசினர்கள், அவர்கள் யாரைப் பார்த்து அப்படி பேசினர்களோ எங்களுக்கு புலப்படவில்லை. கொடி கட்டப் போனீர்களா? என்று கேட்பது நியாயமா? தர்மம் செய்யப் போனவரை கொடிகட்டப் போனீர்களா என்று கிண்டல் செய்வது நியாயமா? அத்துடன் நிற்கவில்லை. ஈகைப் பண்பு வாய்ந்த ஒரு நண்பரைப் பற்றி பல சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசினர்கள். அவரைக் கிண்டல் செய்வதற்கு இந்த மன்றம் தானு கிடைத்தது? நாங்கள் சென்றோம், நிகழ்ச்சியைப் பார்த்தோம், மக்களைப் பார்த்தோம். சட்ட மன்றத்தில் பேசுகிறோம். தனுஷ் கோடியில் எத்தனை ஜனத்தொகை என்று இதுவரையில் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறதா? எந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்? 3,200 பேர்கள் அங்கு ஜனத்தொகை என்று பஞ்சாயத்து போர்டு தலைவர் சொல்கிறார். மண்டபம் காம்பில் 1,450 பேர்கள் இருக்கிறார்கள் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மகன் அங்கு அதிகாரியாக இருப்பவர் புள்ளிவிவரம் தந்தார். மீதிப் பேர் என்ன ஆனார்கள்? இதைக் கேட்பது தவறு? அந்த ட்ரெயின் செல்லும்பொழுது அதிலே 500 பேர்கள் இருந்ததாக அங்குள்ள அதிகாரி சொல்லுகிறார். என்ன ஆனார்கள் அத்தனை பேர்களும்? நிவாரண வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஒத்துக் கொள்கிறேன். இதைப்பற்றி யெல்லாம் எடுத்துக் கூறுவது கூட தவறு? நாங்கள் கொடி கட்டப் போனேம், விளம்பரம் தேடப் போனேம் என்று சொல்வது பொருத்தமா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எங்கள் பேரில் கோபப் படுவதில் பொருள் இல்லை. நாங்கள் நேரடியாகப் பார்த்ததைச் சொல்லுகிறோம். அரசாங்க அதிகாரிகள் கூறுவதைத் தான் நாங்கள் வெளியிடுகிறோம். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் கூறினர்கள். எங்களைச் சந்தித்துக் கூறினர்கள். கம்யூனிஸ்டு தலைவர் அவர்களையும் சந்தித்தார்கள். ராமேசுவரத்தில் சந்தித்தார்கள். அந்த ஊர் பஞ்சாயத்து போர்டு தலைவர் காங்கிரஸ் காரர் தான் சொன்னர். நல்ல கதர்ச்சட்டை போட்டுக் கொண்டிருந்தார். நானும் பார்த்தேன். அவர் அரசாங்க அதிகாரிகள் சரிவர நிவாரண வேலைகளைச் செய்வதில்லை, கொடுக்கக்கூடிய உதவியை நேரடியாகக் கொடுங்கள்' என்று சொன்னர். எங்களைச் சார்ந்த ஒருவரை, தானம் கொடுக்க வந்தவரை, முதல் அமைச்சர் அவர்கள் தாழ்த்திப் பேசுவது பற்றி எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. கொடி கட்டப் போனீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கிறார்கள். நானும் அப்படியே திருப்பிக் கேட்கலாம். அரசாங்க செலவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அங்கே போனது நியாயமா? 'உங்கள் கொடியைக் கட்ட சென்றீர்களா' என்று நானும் கேட்கலாம். ராமனுதபுரம் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பிளேனில் போனது சரிதானு? ராமனுதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தைச் சேர்ந்த சாதாரண ஒரு அலுவலரும் கூட சென்றது நியாயமா? காங்கிரஸ் கொடி கட்டப் போனீர்களா? ' என்று ஏன் கேட்கக் கூடாது? இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மண்டபம் காம்பில் உணவு சரியாகக் கொடுக்கப்பட

22nd January 1965] *[திரு. செ. மாதவன்]*

வில்லை என்று சொன்னார்கள். எப்படி உணவு சமைக்கப்படுகிறது என்று பார்த்தால், கல்லும், மண்ணும் கலந்த உணவாகத் தான் இருந்தது. நாங்கள் பார்த்து வந்ததை வெளியே பேசுவது தவறா? இது ஜனநாயகத்திற்கு விரோதமா? டெப்யூடி கலெக்டர் ராங்கில் இருக்கும் ஒரு அதிகாரியை சந்தித்து அவரோடு விவாதித்தோம். எங்களுடைய உதவியை எப்படிக் கொடுக்கிறது என்று கேட்டோம். அவர்களும் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அரசாங்கத்தைக் கலந்து ஒரு முடிவு செய்யவேண்டும் என்று புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் சொன்னது உண்மை தான். நாங்கள் அங்கு சென்று விசாரித்தோம். எங்கள் கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லுகிறோம். அதற்காக 'கொடி கட்டப் போனீர்களா'? என்று கேலி பேசுவது அவ்வளவு பொருத்தமல்ல. பொதுவாக புயலால் பாதிக்கப்பட்ட ராமேசுவரத்தில் நிவாரண வேலைகளுக்காக அரசாங்கம் நல்ல முயற்சி எடுத்திருந்தால், எடுத்த வரைக்கும் நாங்கள் அவர்களை பாராட்டுகிறோம், மனப்பூர்வமாக பாராட்டுகிறோம். இருப்பினும், அதிலே சிற்சில குறைகள் அமைச்சர் அவர்கள் அறியாமலே நடந்திருப்பதை எடுத்துக் கூறினால், அதற்காகக் கோபப்படுவதில் பொருள் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஜனவரி 26-ம் தேதி என்ன செய்யப் போகிறது என்பதைப் பற்றி எல்லோரும் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்களும் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கோபமாகப் பேசினார்கள்.

* * * *

சர்க்கார் குறிப்பிட்ட இடங்களில், போலீஸார் அறிவிக்கின்ற இடங்களில் நாங்கள் அமைதியாக கூட்டம் போடுகிறோம் என்றுதான் சொன்னோம். காங்கிரஸ் கட்சித் தலைவர், அதுவும் சாதாரணத் தலைவர் அல்ல, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் 'கொடியை அறுப்போம்' என்று சொல்லுகிறார்.

திருமதி டி. என். அனந்தநாயகி: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார். விலைவாசிப் போராட்டம் நடத்தியபொழுது, கலெக்டர் ஆபீஸ் முன்பு மறியல் செய்வோம் என்று சொல்லி விட்டு, என்னுடைய தொகுதியில் சௌகார்பேட்டையில் புகுந்து விட்டார்கள்.

MR. DEPUTY SPEAKER: That is not a point of order.

திரு. செ. மாதவன்: அமைதியாக எங்கள் கருத்தை தெரிவிக்கப் போகிறோம் என்றுதான் சொல்கிறோம். இன்றைக்கு ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒழிப்பதற்கு திட்டம் போடுகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இன்னொரு உதாரணம் சொல்லுகிறேன். பஞ்சாயத்து சட்டத்தில் ஒரு விதி போடப்பட்டிருக்கிறது. செக்ஷன் 25—

Disqualification of members contesting for panchayats.

*** Expunged as ordered by the Chair.

[திரு. செ. மாதவன்] [22nd January 1965

இன்றைக்கு ஏன் இதை பயன்படுத்துகிறார்கள்? இந்த அரசாங்கம் 1962-ல் ஒரு ஜி.ஓ. போட்டது. ஜி.ஓ: 2260, 17—11—1962-ம் தேதியிட்டது. 'பிகெட்டிங்' செய்தவர்கள் எலெக்ஷனுக்கு நிற்கலாம் என்பதுதான் அந்த ஜி.ஓ. 1962-ல் இந்த காங்கிரஸ் அரசாங்கம் போட்ட ஜி.ஓ. இப்படி இருக்க திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை தேர்தலுக்கு நிற்க விடக்கூடாது என்பதற்காக இந்தப் புது விதியா? அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் சொன்னால் அவர்கள் பார்ப்போம் என்று கூறுகிறார்கள். உண்மையில் அதற்கு பரிகாரம் தேடுவதற்கு முன்வரவில்லை. ஜி.ஓ.-வை எடுத்துக் காட்டினோம். அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னோம். அவரும் பராமுகமாக இருக்கிறார். ஏன் இந்த நிலை? எலெக்ஷன் முடிந்தபிற்பாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தினரை போட்டியிட முடியாமல் செய்தபிற்பாடு இந்த அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருமா? இந்த அரசாங்கமே போட்ட ஜி.ஓ.-வை இந்த அரசாங்கம் மதிக்கவில்லை. உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிடுவதற்கு சதி செய்கிறார்கள் இந்த அரசாங்கம் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு எஸ். ராமசாமி நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மேன்மைதாங்கிய கவர்னர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், நன்றி தெரிவிப்பதற்கு நாம் கடமைப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு, நன்றி செலுத்துவதிலே தங்களுக்கு இருக்கும் சில தடங்கல்களைச் சொல்லிய மாற்றுக் கட்சி அங்கத்தினர்களுக்கு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

முதலாவதாக அவர்கள் மனத்தாங்கல் கொண்டது தனுஷ்கோடி புயலைப்பற்றி. தனுஷ்கோடியில் புயல் வந்தது. இயற்கை உத்பாதம் அலையாக எழுந்தது, எங்கும் புயல் அடித்தது, அதனால் பல சேதங்கள் விளைந்தன என்று நாம் கண்டோம். அன்று அபயக் குரல் கேட்டபொழுது பெருமான் கருட ஊர்தியில் சென்றார். அதுபோல, மறுநாள் 3 மணிக்கு அபயக் குரல் கேட்டதும், சென்னை அரசாங்கம் தங்களுடைய மந்திரி ஒருவரை ஸ்ரீமான் ராமையா அவர்களை வான் ஊர்தியில் அனுப்ப பிரயத்தனப்பட்டார்கள். அவரை ஏற்றிச் சென்ற வான் ஊர்தி அன்றைக்கு திரும்பிவந்து விட்டது. மறுநாள் ரயிலில் பல சங்கடங்களுக்கிடையே சென்னை அரசாங்கப் பிரதிநிதி தனுஷ்கோடிக்குப் போய்ச் சேர்ந்தார். வந்த புயலை தடுத்து நிறுத்தியிருக்கலாம், தண்ணீரை தடுத்திருக்கலாம் என்று இன்றைக்கு பரவலாகச் சொல்லப்படுகிறது. ஜப்பான் நாட்டில் அம்மாதிரி கரை போட்டு தண்ணீரை தடுத்து இருக்கிறார்கள் என்று ஒரு கனம் அங்கத்தினர் படித்துக் காட்டினார்கள். 'டைடல் வேவ்' என்பதற்கும், தினசரி கடல் பொங்கி வருகிற ஒரு நிதானத்திற்கும் இம்மாதிரி உத்பாதமாக எழுந்து வருகிற பெரிய அலைக்கும் உள்ள வித்தியாசத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று
11-30 a.m. நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன். ராயபுரம் பகுதியிலே கடல் அலைகளை கல்லை வைத்துத் தடுத்திருக்கிறோம். 70 அடி உயரத்திற்கு அலைகள் வந்தால், ராயபுரத்தைக் காப்பாற்ற யாரால் முடியும்?

22nd January 1965] *[எஸ். ராமசாமி நாயுடு]*

தனுஷ்கோடியிலும் வருஷா வருஷம் 10 அடி 20 அடி தூரத்திற்கு கடல் அரித்துக்கொண்டுதான் வந்தது. ஆனால் இப்போழுது ஏற்பட்ட கொந்தளிப்பை தடுப்பது முடிகிற காரியமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 18 அடி உயரமுள்ள ஒரு ரயிலே பூராவாகத் தண்ணீரில் மூழ்கியது. 140 டன் கனமுள்ள தண்டவாளங்களைத் தூக்கி எறியும் வேகத்திலே, உயரத்திலே அலைகள் வரும்பொழுது அதை எப்படித் தடுக்க முடியும்? மனக்கோட்டை கட்டி, மண் சுவர் இட்டு, வாய்ப்பந்தல் போட்டால் தடுக்க முடியுமா? தடுக்க முடியாத காரியத்தை தடுத்திருக்கலாம் என்று சொல்லுவது ஒப்புக்குச் சொல்வதே தவிர, உண்மைக்குச் சொல்வதல்ல. நம்முடைய அரசாங்கம் செய்தி வந்ததும் ஓடோடிச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்து வருகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கையைப் பற்றி நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். புயலில் இறந்தவர் எத்தனை பேரோ, சொற்புயலால் அதை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நாளுக்கு நாள் நூற்றுக் கணக்கில் அதைக் கூட்டிக்கொண்டு போகிறோம். சொற்புயலும் தனுஷ்கோடி மக்களைக் கொன்று கொண்டிருக்கிறது. உண்மை என்னவென்று தெரியவில்லை. சர்க்கார் எடுத்திருக்கும் நிவாரண வேலைகளைப் பற்றிக் குறை சொன்னார்கள். சொல்லட்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் பேசும்பொழுது, சர்க்கார் இன்றைக்கு தன்னுடைய இரக்கத்தைக் காட்டுவது யாரோ ஒருவர் இறந்துபட்டவர் வீட்டில் துக்கம் காட்ட வந்தது போல் இருக்கிறது என்று சொன்னார். நல்ல ஒரு உதாரணம் அல்ல என்றாலும், அதைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. தனுஷ்கோடியில் பல மக்கள் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் முகத்தான் நாம் இரண்டு நாட்கள் எடுத்திருக்கிறோம். நண்பர் வீட்டிலோ அல்லது சொந்தக்காரர் வீட்டிலோ ஒருவர் இறந்து பட்டு விட்டால், அங்கே கூடியுள்ள பெண்கள் சிலிச் சிங்காரித்துக் கொண்டு, "அடிபாவி, கொன்று விட்டாயே" என்று மாரடித்துக் கொண்டு அழுவார்கள். ஏரிக் கரைக்குப் போகவேண்டும் என்று சொல்லுகிற நிமிஷத்திலே அழுகையை நிறுத்திவிட்டு வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு போவார்கள். அது போலவா நாம் இரக்கம் தெரிவிக்கிறோம் என்று பார்க்க வேண்டும். உண்மையிலே இதிகேல இறந்துபட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து விட்டு, இதுவரைக்கும் சர்க்கார் செய்திருக்கும் நிவாரண வேலைகளில் எது எதைக் கூட்டலாம், எது எதைக் குறைக்கலாம் என்று நல்ல யோசனைகளைச் சொல்லுவதற்குப் பதிலாக, ஊரார் வீட்டிற்கு வந்து அழுவதுபோல் அழுதுவிட்டு மணி அடித்ததும் அழுகையை நிறுத்துவதில் பிரயோசனம் இல்லை. தடுக்க முடியாத காரியம் நடந்துவிட்டது. யார் நினைத்திருந்தாலும் இதைத் தடுத்திருக்க முடியாது. நம்முடைய சர்க்கார் செய்யும் காரியங்களிலே நாமும்கூட ஒத்துழைத்து மக்களின் துயரைத் துடைக்க வேண்டும். துன்பம் கண்ட இடத்திலே துயரைத் துடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் நம்முடைய சர்க்கார் அதன் கடமையைச் செய்து வருகிறது. "நாங்களும் அந்தப் பகுதிகளுக்குச் சென்றோம், யாரோ இரண்டு மந்திரிகள்

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [22nd January 1965

வந்தார்கள் என்று அங்குள்ள மக்கள் சொன்னார்கள், அதற்காக நாங்கள் அவர்களைப் பாராட்டுகிறோம்" என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். யாருடைய இழிப்பையும் எடுத்தேத்தையும் பொருட்டாகக் கொண்டு சர்க்கார் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாவிற்கு நல்ல உணவுவைக் கொடுக்கிறது கை என்றால் நாவின் புகழ் பெறுவதற்காகவல்ல. நெருக்கடி சமயத்தில் ஓடோடிச் சென்று செய்ய வேண்டியதைச் செய்த சர்க்காருக்கு நாம் தெரிவிக்கும் நன்றி இதுவல்ல. இன்னும் பல நிவாரண வேலைகளைச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. இந்தக் கோரப் புயல் அடித்த வேகத்திலே, அலைகள் எழுப்பிய வேகத்திலே, அங்கு என்ன நடந்தது என்று இரண்டு நாட்களுக்குப் பின்னருங்கூட உள்ளூர்க்காரர்களுக்கே சரியாகத் தெரியவில்லை. பாம்பன் பாலம் அடிபட்டுப்போனது யாருக்கும் தெரியவில்லை. பாம்பனிலிருந்து தனுஷ்கோடிக்குப் போன ரயிலின் கதி என்னவாயிற்று என்பது மூன்று நாட்களுக்குப் பிறகுதான் தெரிய வந்தது. இப்படியெல்லாம் நடந்திருக்கிற பொழுது, செய்தி வந்தவுடனே ஓடோடிச் சென்ற சர்க்காருக்கு இதுதான் நாம் காட்டும் நன்றியறிவிப்பு என்றால், அது வருந்தத்தக்க விஷயம். தமிழிலே வளர்ந்த நாம் தமிழ் பண்பாட்டிலும் வளர வேண்டுமென்று மிக மரியாதையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக உணவுப் பஞ்சத்தைப்பற்றி இங்கே சொன்னார்கள். பாரதியார்,

'கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே'

என்று சொன்னதுபோல அதற்குரிய காரணத்தை நாம் சிந்தித்துப் பார்க்காமல் இருக்கிறோம். நம்முடைய மாநிலத்திலே நெல் அதிகமாக விளைந்தும் மக்களுக்குக் கொடுப்பதற்கு அரிசியில்லையென்று சொல்லப்படுகிறது. சர்க்கார் அரிசி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் அப்படி வாங்கிக் கொடுக்கிற அரிசி நல்ல முறையில் செலவிடப்படுகிறதா என்பதை கண்காணிக்கும் அதிகாரம் சர்க்காருக்கு உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மக்கள் இடையே நன்மதிப்பைப் பெற வேண்டுமென்பதற்காக விவசாயிகளிடம் போய் இவ்வளவு வாங்கக்கூடாது, அவ்வளவு வாங்கக்கூடாது என்று சொல்கிறோம். அதே சமயத்தில் மக்களுக்கு அதிகமாக அரிசி கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். இப்படி முன்னுக்குப்பின் முரண்பட்ட செயல்களை, சர்க்காரிடம் குறை காணவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்வதாக இருந்தால் அதைப்பற்றி என்ன சொல்வதென்று தெரியவில்லை. நன்றிகெட்ட செயல் என்றுதான் சொல்ல வேண்டும். தைரியம் இருந்தால் நமக்கு வாக்களித்த மக்களிடம் சென்று நீங்கள் சர்க்காருக்குப் போதுமான உணவுப்பொருள்களைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லவேண்டும். அதை விட்டு விட்டு ஒரு ஏக்கருக்கு ஒரு மூட்டை அளவுங்கள், இரண்டு மூட்டை அளவுங்கள், தராதரம் பார்த்துச் செய்யுங்கள், நேரம் பார்த்துச் செய்யுங்கள் என்று சொல்லி மக்களிடம் போய் சர்க்கார் கொள்முதல் செய்யமுடியாத ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டு அப்புறம்

22nd January 1965] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

மக்களுக்குப் போதுமான உணவுப் பண்டங்கள் கிடைக்கவில்லை யென்று சொல்வது முறையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டிலே வருகிற 26-ஆம் தேதியை இந்தி திணிக்கப் படுவதன் காரணமாக துக்க நாளாகக் கொண்டாடவேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள். எங்கிருந்தோ வந்து நம்மை அடக்கி யாண்டவனிடமிருந்து ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டிருக் கிறோம். நம்முடைய நாட்டிலே உள்ள ஒரு பாஷையான இந்தியை நம்முடைய குழந்தைகள் மிகவும் சுலபமாகக் கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கும்பொழுது அதை அவர்கள் படிக்க வேண்டாம் என்று சொல்லி வருகிறார்கள். நம்முடைய மாணவர் களுக்கு இந்தியை மிகவும் சுலபமாகக் கற்றுக்கொள்ளும் ஆற்றலும் சக்தியும் இருக்கிறது. அவர்கள் இந்தியைக் கற்றுக்கொண்டால், ஒரு காலத்தில் அதாவது, 1975-இல் இந்தி பொதுமொழியாக வந்தாலும்கூட அதைச் சுலபமாக மேற்கொள்ள முடியுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தமிழ்நாட்டை விட்டு வெளியே சென்றால் பெருவாரியான மக்கள் இலக்கியமில்லாத இந்தியையோ அல்லது இலக்கணமில்லாத இந்தியையோ இந்தி என்ற பாஷை யைத்தான் பேசி வருகிறார்கள். அவர்களோடு நாம் பழகவேண்டு மென்று சொன்னால் இந்தி மிக மிக அவசியமாக இருக்கிறது. வாழ்க்கைக்கு உபயோகமாக இருக்கும் இந்தியை சுலபமாகக் கற்றுக்கொள்வதற்கு நம் மாணவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டும், ஆங்கிலத்தை நாம் கற்றதுபோல் இந்தியையும் கற்கவேண்டும் என்று பிரசாரம் செய்வதை விட்டு விட்டு குழந்தைகளின் உள்ளத்திலே இந்தி படிக்கக்கூடாது என்ற ஒரு கெட்ட எண்ணத்தை உண்டாக்குவது சரியல்ல. அதற்காக வருகிற 26-ம் தேதியை துக்க நாளாக கொண்டாடப் போகிறோம் என்று சொல்வது ஒரு விதத்திலும் பொருந்தாது.

கடைசியாக, கவர்னர் பெருமான் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு சர்க்கார் செய்துவரும் எல்லாக் காரியங் களுக்கும் ஒத்துழைப்புக்கொடுக்கும் செயல்களை நாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. செ. கோ. விஸ்வநாதன்: சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, மூன்றாவது தினமாக நடைபெறும் இந்த விவாதத்தில் நானும் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் ஏற்பட்ட பெரும் புயலின் காரணமாக தனுஷ்கோடி, ராமேச்வரம் முதலிய இடங்களில் ஏற்பட்ட பெருத்த உயிர், பொருள் சேதங் களுக்கு சர்க்கார்தான் காரணம் என்று எதிர்த்தரப்பில் இருந்து நாங்களும், இல்லை, இல்லை, அது இயற்கையின் சீற்றத்தால் ஏற் பட்டது என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கூறும் இந்த சந்தர்ப்பத்தில், பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், சர்க்கார் கடமையில் தவறி விட்டார்கள் என்றுதான் எண்ணுகிறார்கள். அரசாங்கத்தில் வானிலை ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் செய்தித் தொடர்பு கொள்ளும் சாதனங்கள் இருக்கின்றன. அத்தனை வசதிகள் படைத்து இருந்தும், சர்க்கார் முன் எச்சரிக்கை செய்யாத கார

[திரு. செ. கோ. விஸ்வநாதன்] [22nd January 1965

ணத்தால், தடுப்பு நடவடிக்கை எடுக்காத காரணத்தால், அதிகச் சேதம் விளைந்து விட்டது என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள். அப்படிக் கடமையிலிருந்து தவறிவிட்டதற்குக் காரணம், சர்க்காரின் சில இலாக்காக்கள் சரியாகச் செயல்படவில்லை. அதன் காரணமாக முன் எச்சரிக்கை விடுக்கவில்லை என்பதைப் பொது மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். அப்படி முன் எச்சரிக்கை எடுத்திருந்தால் வெகுவாக சேதம் அடைந்த உயிர்களையும் பொருள்களையும் காப்பாற்றி இருக்கமுடியும்.

அடுத்து, பர்மாத் தமிழர்கள் நிலைமை பரிதாபமாக இருக்கிறது. பர்மாவிலிருந்து வந்து தங்கிய தமிழர்கள், ஒரு குறிப்பிட்ட நாளில் வெளியேற்றப்பட்டு, ஒரு சிறு தொகை கொடுக்கப்பட்டு அனுப்பப் பட்டு இருக்கிறார்கள். பலர் கும்மிடிப்பூண்டி, தஞ்சாவூர், சாத்தனூர் முதலிய பகுதிகளிலிருந்து செங்கல்பட்டில் வந்து தங்கி இருக்கிறார்கள். அவரவர்களுடைய காம்பில் ரூ. 200 மட்டும் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த அந்த மாவட்டங்களுக்குச் சென்று அங்கே கலெக்டரிடம் தொழிலுக்கு வேண்டிய பணத்தைக் கடனைப் பெறவேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். கலெக்டரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றால், விண்ணப்பத்தோடு கடை வைக்க ஒரு அக்ரிமென்ட் ஏற்பாடு செய்து அனுப்பவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்படி அக்ரிமென்ட் பத்திரம் இருந்தால்தான் பணம் கொடுக்க முடியும் என்கிறார்கள். முதலில் 200 ரூபாய் கொடுத்தவர்களுக்கு இப்பொழுது தொழில் செய்ய அதிகப்படியான பணம் கொடுக்க அக்ரிமென்ட் வேண்டுமென்றால் அவர்கள் எப்படிக் கொடுக்க முடியும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு வாழ்வு அளிப்பதில் இருக்கும் சிரமத்தையும் சிக்கலையும் சர்க்கார் உணரவேண்டும். அவர்களை நம்பித் தான் செய்யவேண்டும் அப்பொழுதுதான் அவர்களுக்கு புனர் வாழ்வு கிடைக்கும். சர்க்கார் அவர்களுக்கு உடனடியாகப் பண உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓரளவு பெரிய நீர்பாசனத் திட்டங்களை வெகு வேகமாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றியுள்ள இந்த சர்க்கார் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில் வேண்டிய கவனம் செலுத்தவில்லை என்பதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. பெரிய பெரிய ஏரிகள் தூர் வாராமல் இருப்பதன் காரணமாக, அதிகமாக தண்ணீரை கொள்ளமுடியாத நிலையில் இருக்கின்றன. மதுராந்தகம் ஏரிகள் தூர்ந்திருக்கும் காரணத்தால் ஆறுமாதம் கூட தண்ணீர் பாயாத நிலையில் இருக்கின்றன. இது பற்றி அந்த வட்டார மக்கள் அமைச்சர்களிடம் நேரிலும், மகஜர் மூலமும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாதிரியான சிறிய நீர்ப்பாசன திட்டங்களை உடனடியாக எடுத்துச் செய்வதில் ஏற்படும் கால தாமதத்திற்கு சர்க்காரிலே இருக்கும் சில அதிகாரிகள்தான் என்பதைச் சொல்ல முடியும். நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்து துரிதமாக வேலை செய்ய வேண்டும் என்று. கேட்டுக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில், ஏரிகள் பராமரிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் விவசாய உற்பத்தி பெருக முடியும்.

22nd January 1965] *[திரு. செ. கோ. விஸ்வநாதன்]*

அடுத்தபடியாக, உணவுப் பொருள் நெருக்கடி, இன்றைய தினம் அரிசி மட்டும் பஞ்சம் இல்லை. ஆனல், சாதாரணமாக குழந்தைகளுக்கு வேண்டிய பால் பவுடர் கூட கடைகளில் கிடைப்பதில்லை. அதிகமான விலை கொடுத்தால்தான் அதுவும் கிடைக்கிறது. இம்மாதிரியான உணவுப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்க வசதி செய்து அவை குழந்தைகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. சி. பொன்னுசாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் பேருரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் பெருமான் சிறுகச் சொல்லி, பெருக அர்த்தம் படக்கூடிய நிலையில் தங்கள் உரையை சமர்ப்பித்திருக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக தமிழ் நாட்டிலே, தனுஷ்கோடி, பாம்பன், மண்டபம் முதலிய இடங்களில் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைக் கண்டு, நம் நாட்டவர்கள் மட்டுமின்றி, ஏனைய நாட்டவர்களும் கவலையும் வருத்தமும் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த நிலையைக் கண்டறிந்து, சர்க்கார், கனம் அமைச்சர்களும், அதிகாரிகளும், ஊழியர்களும் அவர்கள் தங்கள் சக்திக்கும், அதிகப்படியாக அங்கே சென்று உடனடியாக நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டார்கள். இதைக் கண்டு பெருமைப்படுகிறோம். கனம் அமைச்சர் ராமைய்யா 24 மணி நேரமும் உத்தியோகஸ்தர்கள் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னர்கள். அதே போன்று உத்தியோகஸ்தர்களும் பணியாற்றி இருக்கிறார்கள். 1,500 பேர்கள் இறந்தவர்கள் போக மேற்கொண்டும் இறக்க இருந்தவர்களை படகுகள் மூலமும், கப்பல் மூலமும், ஆகாய விமானம் மூலமும் காப்பாற்றி இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஆகாய விமானத்தின் மூலம் உணவுகள் போடப்பட்டன. அப்படிப் போடப்பட்ட போது, மக்களுக்குச் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்வதற்கு இல்லை அது போக, தோணிகள் மூலமும் உணவு கொண்டு போகப்பட்டது. தூத்துக்குடியிலிருந்து தோணியில் கோதுமை ரொட்டிகளும், துணி முதலியவைகளும் கொண்டு கொடுக்கப்பட்டன. தோணிக்குச் சொந்தக்காரர்கள் அதற்கெல்லாம் வாடகை இல்லாமல் தோணிகளைக் கொடுத்தார்கள். அங்கு மக்களுக்கு ஏற்பட்ட இன்னலைக் களைய நம்நாட்டு மக்கள், எல்லாக் கட்சிக்காரர்களும், காங்கிரஸ் கட்சிக்காரர்கள் என்று மட்டும் சொல்லவில்லை, தலைவர்களும் தொண்டர்களும் பெரியோர்களும், பொதுமக்களும் வேண்டிய உதவிகள் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், லைன்ஸ் க்ளப், ரோடரி க்ளப் போன்ற ஸ்தாபனங்களும், வியாபாரிகளும், எல்லோரும் சேர்ந்து அந்த மக்களைக் காப்பாற்ற வழி செய்திருக்கிறார்கள். போக்கு வரத்து சாதனங்களும் கொடுத்து உதவியிருக்கிறார்கள். இந்த நிலையில் வெகு துரிதமாக, வேகமாக மக்கள் எல்லோரும் வந்து உதவியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதே சந்தர்ப்பத்திலே, ஒருவர் ஒரு லட்சம் கொடுக்கிறேன் என்றார் என்பதற்காக பெருமைப்படுத்திப் பேசுவது நியாயம் இல்லை. அவர் ஒரு லட்சம் கொடுப்பதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ரூபத்தில் கொடுத்தாலும் சரி.

[திரு. சி. பொன்னுசாமி] [22nd January 1965

கோடிக்கணக்கான ரூபாய்களை சர்க்கார் செலவழிக்கும்போது, மக்கள் சர்க்காரிடம் கொடுத்து இருக்கும்போது, ஒருவர் மட்டும் நம்பிக்கை இல்லாமல் இருந்தார் என்றால், அதைக் கேட்டு என் மனது வேதனைப்படுகிறது.

சேது சமுத்திரம் சம்மந்தப் பட்டவரை, ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்கு மூன்றாவது திட்டத்திலேயே இந்த திட்டத்தை எடுத்துச் செய்ய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களை அதை எடுத்து செயல்படுத்த வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், சேது சமுத்திரம் கால்வாயைக் கட்டிக் கொடுத்தால், அன்னிய நாட்டுக் கப்பல் காரர்களுக்கு 3,000, 5,000 ரூபாய் லாபம் கிடைக்கும். அவர்கள் இலங்கையைச் சுற்றி சென்றால் இரண்டு நாட்கள் அதிகமாக ஆகும். அதனால் அவர்களுக்கு ரூ. 10,000 நஷ்டம் ஏற்படும். ஆகவே, அவர்கள் ஸெஸ் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நாம் எத்தனையோ பெரிய பெரிய திட்டங்களை, பின்னால் லாபம் வரும் என்று கருதி, கடன் வாங்கி நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். இந்த திட்டத்தின் மூலம் கட்டாயமாக, கண்டிப்பாக லாபம் கிடைக்கும், அப்படி அமையக்கூடிய திட்டம் இது. ஆகவே, இந்த சந்தர்ப்பத்திலே, உடனடியாக இந்த சேது சமுத்திர திட்டத்தை இந்த மூன்றாவது திட்டம் முடிவதற்குள்ளாகவே அமுல் நடத்த வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். இன்றைக்கு இந்த திட்டத்தின் ஆரம்ப கட்டமாக, லான்ட் அக்விசிஷன் தொடங்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில், அந்த திட்டத்தை இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக நிறைவேற்றுவதற்குப் பணம் வேண்டுமென்று சொன்னாலுங்கூட, கள்ளப் பதுக்கல்காரர்களிடமிருந்து பணங்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் அரசாங்கத்திற்குக் கோடிக்கணக்கான பணம் வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பணத்தை உடனடியாக இந்தத் திட்டத்தில் போட்டு, இதை நிறைவேற்றவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் முதலில் சொன்னது போல, ஸூயஸ் கால்வாய் வழியாகக் கப்பல் போவதற்கு ஸெஸ் விதிப்பதைப் போல, சேதுகால்வாய் வழியாகப் போகக் கூடிய கப்பல்களுக்கும் ஸெஸ் விதிக்கப் போகும் வகையில் பல கோடிக்கணக்கான ரூபாய் சர்க்காருக்குக் கிடைக்கும். ஆகவே, இதையெல்லாம் அனுசரித்து, இந்தத் திட்ட காலத்திலேயே இதை எடுத்து நிறைவேற்றவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயுள்ள கப்பல் போக்குவரத்தைத் தூத்துக்குடியிலிருந்து மறுபடியும் நடத்த வேண்டும் என்று மத்திய சர்க்கார் கப்பல் கம்பெனிகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளுகிறார்கள். அதை வேகமாக அமுல்

22nd January 1965] [திரு. சி. பொன்னுசாமி]

நடத்தவேண்டும் என்று மாநில சர்க்கார் அவர்களுக்கு மறுபடியும் எடுத்துச்சொல்லி, ஆவன செய்யவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றுள்ள உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு நமது மாநில சர்க்கார் மட்டுமல்ல, மத்திய சர்க்காரும் அக்கறை எடுத்துக்கொண்டு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற உணவுப் பொருட்களுக்கு விலைக் கட்டுப்பாடு செய்யலாம் என்ற வகையிலும், விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் வகையிலும் மிகவும் அக்கறை காட்டுகிறார்கள் என்பது வரவேற்கத்தக்க தாகும். இருந்தாலும்கூட, என்னுடைய சிறிய யோசனை ஒன்றையும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்தில் இயற்கை பொய்த்துவிட்டால் உணவுப் பற்றுக்குறை ஏற்படுவதும், இயற்கை பொய்க்காவிட்டால் அதிகப்படியாக உற்பத்தி ஆவதும் ஆகிய நிலையில் நாம் இருக்கிறோம். இப்பொழுது நாம் ஓரளவு உணவு உற்பத்தி செய்து கொண்டிருக் கிறோம். இப்பொழுது நாம் போட்டிருக்கும் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதன் மூலமும், புதிதாக இயந்திர சாதனங்களைக் கொண்டு, தரிசாக இருக்கும் இடங்களில் எல்லாம் லீஸ் முறையைக் கையாண்டு அதிகமான நிலப்பரப்பில் விவசாயம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உணவுப் பொருள்களை அதிகப்படியாக நாம் உற்பத்தி செய்தால் கள்ள மார்க்கெட் நடக்காது, உணவுப் பொருள்களும் நல்ல முறையில், கட்டுப்பாடான விலையில் கிடைக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கேரளா நமக்குப் பக்கத்து மாநில மாக இருப்பதால், நாம் அதிகப்படியாக உணவு உற்பத்தி செய்து அவர்களுக்குக் கொடுப்பது மட்டுமல்ல, அங்கே பற்றுக்குறை ஏற்படுகிறபோது, மத்திய சர்க்கார், நம்முடைய ராஜ்ய சர்க்கார் மூலமாக அவர்களுக்குத் தானியங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்தால், இதுபோன்ற கள்ளக் கடத்தல் ஏற்படுவதற்கு வசதிகள் ஏற்படாது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இப்பொழுது நீர்ப்பாசன இலாகா, பொறுக்கு விதைகள் கொடுக்கும் இலாகா, கடன் கொடுக்கும் இலாகா, உரம் கொடுக்கும் இலாகா, பயிர்களுக்குப் பூச்சி பிடித்தால் மருந்து தெளிக்கும் இலாகா ஆகியவைகளில் உள்ள பெரிய உத்தியோகஸ்தர்களை நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அவ்வப்போது, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூப்பிட்டு, அவர்களோடு விவாதித்து, அதிகப்படியாக என்ன சத விகிதம் உணவு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்புகள் இருக்கின்றன என்று தெரிந்து, உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக் கோளாக இருக்கவேண்டும். அதற்கு சர்க்கார் வேண்டுவன செய்துகொண்டு வருகிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பத்து கோடி டன் உணவு உற்பத்தி செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள். நான் சொல்வது என்னவென்றால், இந்தப் பத்து கோடி டன்னை 11 கோடி டன்னாக

[திரு. சி. பொன்னுசாமி] [22nd January 1965

உற்பத்தி செய்யவேண்டும் என்று டார்ஜெட் வைத்து, உபரியாக உற்பத்தி செய்யும் ஒரு கோடி டன் தானியத்தைக் கையிருப்பில் வைத்துக்கொண்டு இருந்தால், நம் நாட்டில் ஏற்படும் பற்றுக் குறையைப் போக்கிக்கொள்வதோடு, அன்னிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து, அதன் மூலம் அன்னிய நாட்டுச் செலாவணி யையும் பெற முடியும். இதன் மூலம் விலையும் குறைவதற்கான சந்தர்ப்பமும் இருக்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத அளவுக்கு விலை குறைந்ததென்றால், உற்பத்தியாளர்களிடமிருந்து தானியங்களை அரசாங்கம் கட்டுபடியான விலைக்கு வாங்கிக் கொண்டு சேமித்து வைப்பதற்கும் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறைக்கு முதல் இடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கவர்னர் பெருமான் பேரு ரைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. பழனிசாமி: கனம் உதவித் தலைவர் அவர்களே, நமது நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிற்பாடு பல தொல்லைகள், கஷ்டங்கள் வந்தாலுங்கூட, சமீபத்தில் இயற்கையன்னை நமது மக்களுக்கு ஒரு பெரிய கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, தனுஷ்கோடியில் புயல் எத்தனையோ தடவை வந்திருந் தாலுங்கூட, சமீபத்தில் வீசியது போல் அவ்வளவு வேகமாக இதற்கு முன்னால் வீசியதில்லை என்று தான் சிலர் அபிப்பிராயம் கூறுகிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள், 'இதற்கு சுவர் எழுப்ப வில்லை' என்று அரசாங்கத்தின் மீது குற்றம் சொன்னார்கள். அதற்கு உதாரணமாகச் சொன்ன போது, ஜப்பானில் கடல் சுவர் கட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அலையின் வேகத்தைத் தடுக்கக்கூடிய சக்தி தடுப்புச் சுவருக்கு இருக்குமா என்பதை நன்றாக பரிசிலித்துப் பார்க்கவேண்டும். சுவர் கட்டித் தடுத்துவிடலாம் என்று வாயால் அழகாக சொல்லிவிடலாம். ஆனால் காரியத்தில் செய்வது மிகவும் கடினமாக இருக்கும். ஏதோ பொதுக்கூட்டங்களில் பேசுவது போல் இங்கேயும் அப்படிச் சொல்வது அவ்வளவு சரியல்ல என்று நான் அவர்களுக்கு தெரி வித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் கடற்கரையோர கிராமங் களும், நகரங்களும் அநேகம் இருக்கின்றன. அவையெல்லாம் என்றைக்காவது ஒரு நாள் பாதிக்கப்படத்தான் செய்யும் என்ப தையும் நாம் தெரிந்திருக்கிறோம். தனுஷ்கோடி இடத்தை மாற்ற வேண்டும் என்று நிபுணர்கள் முன்பே சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். இருந்தாலுங்கூட, அங்கு விளைந்த சேதத்திற்குப் பிறகு நமது அரசாங்கமும் பொதுமக்களும் உடனடியாக எல்லா விதமான நடவடிக்கைகளும் தீவிரமாக எடுத்து, உயிர்ச்சேதம் அதிகமாகாமலும், பொருட்சேதம் ஆகாமலும் கவனித்து ஆவன செய்திருக்கிறது. அது மட்டுமல்ல. நல்லமுறையில் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் அத்தனை பேர் உள்ளத்திலும் ஏற்பட்டது. நம் நாட்டில் மட்டுமல்ல, பல நாடுகளிலிருந்தும் உதவி வருகிறது. இப்படி மக்களும், நாடுகளும் தாங்களாகவே

22nd January 1965] [திரு. கே. பி. பழனிசாமி]

உதவி செய்து, அவதிப்படும் மக்களை வாழ வைக்கவேண்டுமென்று கருதுகிற நிலையில், இதை இந்த அரசாங்கம் கவனிக்கவில்லை என்று ஒரு சாரார் சொல்வது மிகவும் வருந்தத்தக்கது.

குறிப்பாக, தமிழ்நாட்டிலே இராமேஸ்வரம் ஒரு புண்ணிய ஸ்தலமாகும். இந்த நாட்டிலுள்ள அத்தனை பேரும் அந்த ஸ்தலத்திற்குச் சென்று நல்ல முறையில் கடவுளைத் தரிசிக்கிறார்கள். அந்தக் கோயில் மாத்திரம் இன்னும் ஒரு சேதமும் அடையாமல் இருக்கிறது. அங்கே யாத்திரிகர்கள் செல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் எடுத்துக் கொண்டிருக்கின்றன. அது அத்தனை பேரும் பாராட்டவேண்டிய விஷயமாகும்.

உணவுப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், குறிப்பாக வருஷா வருஷம் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் விலைவாசி கொஞ்சம் உயரத்தான் செய்கிறது. அதுவும் நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. சுதந்திரம் வந்த பிறகு, 17 ஆண்டுகளாக உணவுப் பிரச்னை அவ்வளவாக மக்களைப் பாதிக்கவில்லை. அதற்கு முன்பு அநேகமாக ஒவ்வொரு வருஷமும் பஞ்சம், பட்டினி என்று வருஷத்தில் ஒன்றிரண்டு முறை வரும். இந்த 17 வருஷ காலத்தில் பஞ்சம் பட்டினி என்பதே நமக்குத் தெரியாது. ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள் வேண்டுமென்றே பிரசாரம் செய்கிறார்கள். குறிப்பாக, விலைவாசி ஏறிஇருக்கிறது என்று சொன்னார்கள். விலைவாசி ஏறிவிட்டது என்றால், அதைத் தடுக்க வேண்டும், அதைக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதை மறுக்க முடியாது. ஆனால் தானியத்தின் விலையைக் கட்டுப்பாடு செய்து, குறைந்த வருமானக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நினைத்தால், 'இதை ஏன் கட்டுப்பாடு செய்கிறீர்கள்?' என்று ஒரு சிலர் சொல்கிறார்கள் என்றால், அதுதான் எனக்குப் புரியவில்லை. இதற்குக் காரணம் என்ன? ஜனத்தொகை பெருகிவிட்டது. அதற்கேற்ற அளவுக்கு விளைச்சலின் டார்ஜெட்டை எட்டிப்பிடிக்க வேண்டும். தமிழ் நாடு தன்னிறைவு கொண்ட மாநிலம் தான், உணவைப் பொறுத்த வரையில் அப்படி இருந்தும், ஏன் பஞ்சம் வந்தது? அரிசிப் பற்றாக்குறை ஏற்படும் என்று தெரிந்த போது, வசதியுள்ளவர்கள், தங்கள் தங்கள் வசதிக்கேற்ப அரிசி மூட்டைகளை வாங்கி வைத்துக்கொண்டார்கள். பிறகு லாபம் அதிகம் சம்பாதிக்கலாம் என்றும் சிலர் வாங்கி வைத்துக் கொண்டார்கள். இப்படி ஸ்டாக்கை ப்ளாக் செய்துவிட்டார்கள். அதனால், ஜனங்களிடத்திலே உணவுத் தானியங்கள் ஸர்குலேட் ஆக முடியாமல் போய்விட்டது. விலை அதிகமாக இருக்கிறது என்று, சர்க்கார் தலையிட்டார்கள். கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்கிற கோபம். விவசாயிகள் என்ன நினைக்கிறார்கள்? கரும்பு, சிக்கரி போன்ற வியாபாரப் பொருள்களை உற்பத்தி செய்தால் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்கிற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு ஏக்கரில் நெல் பயிர் செய்தால், ரூ. 600 அளவுக்குக்கூட 'ஈல்டு' இருக்காது. அதில் செலவு 100, 200 ரூபாய் போய்விடும். ஆனால்

[திரு. கே. பி. பழனிசாமி] [22nd January 1965

கரும்பு, வெங்காயம் போன்ற வியாபாரப் பொருள்கள் உற்பத்தி செய்தால் ஒரு ஏக்கருக்கு நாம் போடக்கூடிய இன்வெஸ்ட்மென்ட் ரூ. 500 என்று வைத்துக்கொண்டால், ரூ. 3,000 அளவுக்கு 'ஈல்டு' கிடைக்கிறது. அதனால், அத்தகைய பயிர்களைத்தான் வைக்க விவசாயிகள் பிரியப்படுகிறார்கள். அதைத் தடுக்க முடியாது. அதற்கெல்லாம் கட்டுப்பாடு செய்யவும் முடியாது. ஏனென்றால் நமக்குச் சர்க்கரையும் வேண்டும். சர்க்கரையை உற்பத்தி செய்து அன்னிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்து, அங்கிருந்து வேறு பொருள்களை வாங்கவேண்டுமென்று நினைக்கிறோம். இதிலெல்லாம் விவசாயிகளும், வியாபாரிகளும் எல்லோருமே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்து நல்ல முறையில் இயங்கவேண்டும். ஒரு வருஷத்திலே லாபம் வராவிட்டால் அதனால் ஒன்றும் குறைந்து போகாது. குடும்பம் ஒன்றும் அழிந்து போகாது, ஏழைகள் முன்னுக்கு வரவேண்டும், வயிறார சாப்பிட வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லாக் கட்சியில் உள்ளவர்களுக்கும் பூமி இருக்கிறது, எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சர்க்காரே ப்ரொக்யூர்மென்ட் செய்து வைத்துக்கொண்டு எல்லா மக்களுக்கும் வழங்கவேண்டும் என்ற எண்ணத்தில் செய்கிறார்கள். ரேஷன் கொண்டுவந்ததன் நோக்கமே குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், ஏழைகளுக்கும் நல்ல முறையில் உணவுப் பொருள்கள் கிடைக்கவேண்டும் என்பது தான். சென்னை நகரம், கோவை, சேலம் போன்ற பட்டணங்களில் தானியங்களைக் கொண்டுவந்து சிலர் சம்பாதிக்கிறார்கள். சென்னையில் ஜனத்தொகை சுமார் 20 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். கோவையில் 6 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். டவுன்களில் உள்ளவர்கள் சம்பாதிக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

12-00 noon நகரத்தில் உள்ள ஒரு சாதாரண தொழிலாளி, செருப்பு தைக்கும் தொழிலாளி ஐந்து, ஆறு ரூபாய் சம்பாதிக்கிறான். ஆனால் கிராமத்தில் இருக்கிறவனுக்கு 1½ ரூபாய் கூடக் கிடைப்பதில்லை. கிராமத்தில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதாக நாம் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் உயரவில்லை ஆகவேதான் நான் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் உள்ள இன்னொசென்ட் பீப்பிள்—பாமர பாட்டாளிகளுடைய கூலி நியாயமான முறையில் அவர்களிடத்தில் போய்ச் சேரும்படியாக நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு நாள் சரியான முறையில் சாப்பிடாவிட்டால் அவர்களால் வேலை செய்ய முடியாது. அதுவும் கடந்த பதினைந்து நாட்களாக அறுவடை விழுந்த காரணத்தினால் தான் அவர்கள் ஓரளவு உணவுப் பிரச்சினைக்கு உள்ளாகாமல் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் அநேக பட்டினிச் சாவுகள் வந்துவிடும்.

"எதற்காகக் கொள்முதல் செய்கிறீர்கள்? நான்கு லட்சம் பஃபர் ஸ்டாக் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன?" என்பதாக எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லலாம். சென்ற இரண்டொரு மாதங்

22nd January 1965] [திரு. கே. பி. பழனிசாமி]

களுக்கு முன்பு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு போல இனிமேல் ஏற்படாது இருக்கவேண்டும் என்றால் சரியான முறையில் அரசாங்கம் கையில் ஸ்டாக் வைக்க வேண்டும். கிராமத்தில் உள்ள பாமர மக்களுக்கு உணவு கிடைக்கவில்லையென்றால் உடனடியாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஸ்டாக் கெட்டுப் போய்விடாதா என்று சொல்வார்கள். நம் வீட்டில் ஒரு மரக்கால், இரண்டு மரக்கால் என்று சோளம் வைத்து இருந்தால் கூட செல்லு அடித்துவிடுகிறது. அரசாங்கம் அந்தமாதிரியாக ஸ்டாக் கெட்டுப் போகவிடமாட்டார்கள். மேலும் புது அறுவடை ஆனவுடனே பழைய ஸ்டாக்கை ரிலீஸ் செய்து புது தானியங்களை ஸ்டாக் செய்யவேண்டும். கோடவுனில் மூவ்மென்ட் இருந்து கொண்டே இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. இரா. நாராயணன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின் மீது பேசுவதற்கு எனக்கும் வாய்ப்பு அளித்ததற்காக நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொண்டு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நாடு விவசாய நாடு, இந்த நாட்டில் நாம் விவசாய விளைபொருள்களைப் பெருக்கவேண்டும் என்பதற்காகப் பலவகையில் பிரசாரம் செய்து வருகிறோம். அதுமட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு உணவு, உடை, குடியிருப்புக்கு வீடு ஆகியவை தருகிறோம் என்று சொல்லி வருகிறார்கள், நம் சர்க்காரில் ஆனால் இன்றைய தினம் அந்த மூன்றுக்காகவும் விவசாயிகள் படுகிற கஷ்டத்தைச் சொல்ல முடியாது. அவர்களுடைய கஷ்டத்தை அறிந்து சர்க்கார் ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். விவசாய மக்களுடைய உதவியின்றி யாரும் வாழ முடியாது. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்கள் நல்ல முறையில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்க நாம் வகை செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் சில பகுதிகள் புன்செய் நிலப் பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் நீர்பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவும் தவறியதோடு சின்ன ஏரிகள், வாய்க்கால்கள் கூட ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. உதாரணமாக நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் திட்டகுடி வந்தபோது அங்கே கிராமப் பொதுமக்கள் வீமனேரிக்கு வரத்து வாய்க்கால் இல்லாமல் கஷ்டப் படுவதைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களும் ஆவன செய்வதாகச் சொல்லி வந்தார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள ஏரிகள் சம்பந்தப்பட்டவரையில் உடனடியாக அங்கங்கே வரத்து வாய்க்கால்கள் வெட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டும்.

[திரு. இரா. நாராயணன்] [22nd January 1965

அடுத்து கிராமத்தில் உள்ள மக்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் அவர்களுக்குக் காலாகாலத்தில் நல்ல உரம் விநியோகிக்கப்படவேண்டும். அவர்கள் உரம் கிடைக்க வில்லை என்று திண்டாடினார்கள். கலெக்டரிடம் சொன்னேன். அவர்கள் கொடுத்த உரத்தைக் கொண்டுபோனால் அது உரம் கெட்டு இருந்தது. உற்பத்தியைப் பெருக்கவும் தரத்தை இழந்த தாக இருந்தது. காரணம் வந்த உரம் காலத்தில் விநியோகிக்கப் படாமல் ஸ்டாக் செய்யப்பட்டு வைத்திருந்தது தான். இப்படி யின்றி நல்ல உரம், தரமான உரம் கெட்டுவிடாதபடி காலா காலத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல. பசுந்தாள் உரத்தை பெருக்கினால்தான் உண்மையிலேயே விவசாயத்தைப் பெருக்க முடியும். ஆனால் இன்றைய தினம் உணவு உற்பத்தி என்ற பெயரால் இன்றைய தினம் ஏரி புறம்போக்கு, ஆற்றுப்புறம் போக்கு ஆகியவை எல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வர பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. விவசாயமும் சரியான முறையில் நடைபெறவில்லை. பசுந்தாள் உரமும் கிடைப்பதில்லை. அதோடு நான் நிச்சயமாகச் சொல்வேன். சாணி உரம் தான் விவசாயத்திற்கு மிகவும் சிறந்தது. சாணி உரம் வேண்டுமென்றால் கால் நடைகள் சரியான முறையில் வளர்க்கப்படுவதற்கு மேய்ச்சல் நிலம் வேண்டும். இன்றைக்கு புறம்போக்கு மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் அடைக்கப்பட்டு விட்டன. அந்த இடத்தில் சாகுபடி செய்வதனால் போதுமான வருமானம் வருகிறதா என்றால் அதுவும் இல்லை. ஆகவே அவற்றை மேய்ச்சல் தரையாக பசுந்தாள் உரம் பயிரிடும் இடமாக ஆக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய போதுமான கடன் வசதி காலாகாலத்தில் கிடைப்பது இல்லை. அவர்களுக்குக் கடன் வசதி செய்து தரவேண்டும். அதுபோலவே மின்சார பம்பு செட்டு கள் வைக்கவும் கடன் வசதி செய்து தரவேண்டும். இன்றைய தினம் எங்கள் பகுதியில் உள்ள மேட்டுப்பாங்கான இடங்களில் மின்சார பம்பு செட்டுகள் வைத்துச் சாகுபடி செய்வது என்றால் சாதாரண விவசாயிகளினால் முடியவில்லை. அவர்களுக்கு சர்க்காரே மின்சார பம்பு செட்டுகளைக் கடன் வசதியில் கொடுத்து உதவவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சொந்த நில மாக இருந்தாலும், அதை ஈடுவைத்து புறம்போக்கு நிலத்தில் விவசாயிகளுக்கு மின்சார பம்பு செட்டுகள் வைக்க கடனில் கொடுத்து உதவவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது தான் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். முக்கியமாக இன்று விவசாயிகளுக்குப் போதுமான கடன் வசதி கிடைப்பது தான் கஷ்டமாக இருக்கிறது. பணக்காரர்களிடத்தில் ஒரு மூட்டை விதை கடனாக வாங்கி வந்தால் ஒரு மூட்டைக்கு ஒரு மூட்டை வட்டியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே விவசாயிகளுக்கு கடன்வசதி செய்துதரவேண்டும். கடன் வசதியில்

22nd January 1965] *[திரு. இரா. நாராயணன்]*

மின்சார பம்பு செட்டுகள் வைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மாதிரி உதவி செய்தால் தான் நாம் முன்னேற முடியும்.

பத்து ஏக்கரா, இருபது ஏக்கரா வைத்து இருக்கக் கூடியவர்களுக்கு கரும்புக்குக் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது. நான் கரும்புக்குக் கட்டுப்பாடு வேண்டும் என்று சொல்கிறேன். கரும்புக்குக் கட்டுப்பாடு விதித்தால் தான் உணவு தானியத்தை நாட்டில் அதிகப்படுத்த முடியும். இப்போது கரும்புக்கு அதிக வருமானம் கிடைப்பதால் பணக்காரர்கள் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கராவில் உணவு தானியத்தைப் பயிர் செய்து கொண்டு மற்றவற்றில் கரும்பு வைத்துவிடுகிறார்கள். ஆகையால் தான் உணவு தானியக் கட்டுப்பாடு கொண்டுவர வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதையும் அவசியம் கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக, ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருப்பவர்கள் நெல் சாகுபடிதான் செய்யவேண்டும்; அதற்கு மேல் உள்ளவர்கள் கரும்பு சாகுபடி செய்யலாம் என்ற ஒரு கட்டுத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அதோடு கூட விவசாயிகளுக்குக் கால்நடைகளை இனமாகக் கொடுப்பதோடு, கால்நடைகள் மேய்வதற்கும் இடங்களைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். இப்போது உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பஞ்சாயத்து யூனியனுக்கு சில அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடம் ஒரு ஏரியை மராமத்து செய்து தர வேண்டுமென்று சொன்னால் சரிவரக் கவனிப்பதில்லை. அரசாங்கத்திலே கூடப் பல இலாக்காக்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். டி.டி.சி. கூட்டத்தில் கூட 'அந்த ஏரியை ஆழப்படுத்திக் கட்டினால் பாசனத்திற்கு வசதியாக இருக்கும், உணவு உற்பத்தி பெருக வழி ஏற்படும்' என்று எடுத்துக் கூறினோம். ஆனால் அதிகாரிகள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே ஏதோ கணக்குகளைக் காட்டி அந்த ஏரியைக் கட்டுவதால் அதிகப் பலன் ஏற்படாது என்று கூறிவிடுகிறார்கள். அவர்கள் நேரடியாக வந்து விவசாயிகளுடைய நிலத்தையும் பார்த்து, அந்த ஏரியையும் பார்த்து சிறு ஏரிகளைப் பழுது பார்த்துக் கொடுப்பார்களானால் உணவு உற்பத்தி பெருக வழி ஏற்படும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் சட்டமன்ற உபதலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய கனம் தண்டாயுதபாணி பிள்ளை அவர்களுடைய தீர்மானத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே சமீபத்தில் நம் தமிழ் மாநிலத்திற்கு ஏற்பட்ட, ஆறுதல் அளிக்கக்கூடாத வகையிலே நெஞ்சத்திலே என்றென்றும் நிரந்தரமாக இருக்கக்கூடிய,

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [22nd January 1962

புண்படுத்தக்கூடிய புயலாலும், கடலின் கொந்தளிப்பாலும் ஏற்பட்ட கொடுமையைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். இந்தக் கொடுமையின் காரணமாக மக்களின் மனக் கசப்பு அதிகமாக வளர, இது இயற்கையின் சீற்றமோ, கடவுளின் செயலாக இருக்குமோ என்றெல்லாம் நினைக்கும் வகையில். மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட செயலாக இந்தக் கொடுமை ஏற்பட்டு விட்ட நேரத்தில், நம்முடைய அரசு பல விதத்திலே, தன்னால் இயன்ற அளவுக்கு ஒரு விதத்திலும் குறை கூறாத அளவுக்கு அந்த மக்களுக்கு நிவாரணம் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதைக் கண்டு பெருமைப்படுவதோடு அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு விட்டது, புயல் கடுமையாக வீசுகிறது, அந்தப் பகுதி மக்கள் தவிக்கிறார்கள் என்று அறிந்தவுடனேயே நமது அமைச்சர்கள் அங்கே விரைந்தோடிச் சென்றார்கள். 'கோட்டையிலே கோலோச்சுகிற கோமான்கள்' என்று எதிர்க்கட்சியினர் அழைப்பதற்கு இடம் கொடுக்காத வகையிலே அவர்கள் துரிதமாக அந்த இடத்திற்குச் சென்று வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். தனிப்பட்டவர்கள் ஆங்காங்கு இயன்ற அளவு உதவி செய்திருக்கிறார்கள். தர்ம ஸ்தாபனங்கள் உதவி செய்திருக்கின்றன. சுயநலம் விரும்பாத பொதுநலம் விரும்புகிறவர்கள் எல்லாம் அக்கறை கொண்டு உதவி செய்தார்கள். அயல் நாடுகளில் இருந்தெல்லாம்—அமெரிக்கா, உலக செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய இடங்களில் இருந்தெல்லாம் அந்த மக்களுக்கு உதவி செய்ய நிதி கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது இந்த நாட்டிலே பிற நாட்டவர்கள் அக்கறை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இந்த ஆட்சியிலே இருப்பவர்கள் மிகுந்த நிர்வாகத் திறமையும் பொறுப்பும் மிக்கவர்கள் என்பது நன்றாகத் தெரியும். அமைச்சர் கனம் ராமையா அவர்கள் ராமேஸ்வரம் சென்றார்கள். புயல் பாதிக்கப்பட்டவரைப் பார்த்தார்கள், பரிகாரம் தந்தார்கள்; மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். கனம் திரு. கக்கன் அவர்கள் கட்டுமாத்தில் இருந்து கொண்டே அவர்களுடைய குறைகளைக் கேட்டு ஆவன செய்து வந்தார் என்பதைப் பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்தோம். அமைச்சர்கள் அத்தனை பேரும் அங்கு சென்றார்கள். மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமா? அந்தத் துறை அமைச்சர் அங்கே சென்றார். மின்சார உதவியா, அந்த இலாகா அதிகாரிகள் அங்கு சென்றார்கள். இப்படி எல்லாப் பிரிவினரும் அங்கே சென்று அந்த மக்களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்தார்கள். அங்கே நம்முடைய மாநில அமைச்சர்கள் மட்டுமா சென்றார்கள்? நம்முடைய இந்திய நாட்டின் கஜானாவே, நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களே நேரில் சென்று நிவாரண ஏற்பாடுகளைக் கவனித்தார்கள். 'பரிகாரம் கொடுப்பதிலே நிதி தடங்கலாக இருக்கக் கூடாது' என்று கூறி எத்தனை கோடி ரூபாய் ஆனாலும் அள்ளி அள்ளித் தருவதற்கு அஞ்சவில்லை. அதோடு ஒரு நல்ல திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். 'ப்ளெஸ்ஸிங் இன் டிஸ்கைஸ்' என்று சொல்வார்கள். புயலில் கொடுமை தூங்கிக் கிடந்த சேது சமுத்திரத் திட்டத்தை துரிதமாக மேற்

கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. அந்தத் திட்டத்தை அவசரமாக ஆரம்பிக்க வேண்டுமென்று திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் உத்தரவிட்டார்கள் என்று சொல்லும்போது நாம் எல்லாம் சந்தோஷப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆரம்பக் கட்டமாக, நில ஆர்ஜிதம், தொழிற் துறையில் பரிசீலனை, நிர்வாகத் துறையில் பரிசீலனை முடுக்கி விடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி விபத்து சமயத்தில் நம்முடைய திறமை வாய்ந்த அமைச்சர்கள் தக்க நேரத்தில் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டதை மூலை முடுக்குகளில் இருக்கக்கூடிய மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிக்கைகளை இந்தச் சபை முன் சமர்ப்பித்தார்கள். கவர்னர் பெருமான் அவர்கள் உரையிலே காணப்பெறாத சில விஷயங்களைப் பற்றி அறிக்கையின் மூலமாகக் கூறியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட போலீஸ் நிர்வாகத்தில் அவர்கள் மனக் கஷ்டப்பட்டவர்கள் என்ற காரணத்தினால் நிலைமையை அவர்களுக்கு விளக்கும் வகையில் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அதேபோன்று இராமேஸ்வரத்தில் புயல் நிவாரண நடவடிக்கைகள் என்னென்ன எடுத்துக் கொள்ளப்பட்டன என்றும் விளக்கி இருக்கிறார்கள். அதற்காக நாம் முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கவர்னர் அவர்களுடைய உரையில் புயலின் கொடுமையைச் சொல்லி அதற்கு அடுத்தபடியாக நெருக்கடியான விஷயமாகிய உணவுப் பிரச்சினைப் பற்றிக் கூறி இருக்கிறார்கள். உணவு கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருப்பது பற்றியும், ஒவ்வொரு மாவட்டத்திலும் என்னென்ன நிலையிலே 'பஃபர் ஸ்டாக்' வைத்திருக்கிறார்கள் என்ற திட்டத்தைப் பற்றியும் மிக அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் உபரியாக இருக்கும் தானியத்தை அரசாங்கமே கொள்முதல் செய்வது போற்றத்தக்கது. திருநெல்வேலியில் கடந்த காலத்தில் நெல் அறுவடையானவுடனேயே நம்முடைய விலையைக் விடக் கேரளாவில் அதிக விலை கொடுக்கிறார்கள் என்ற காரணத்தால் லாரியில் ஏற்றி அங்கே அனுப்பி விட்டார்கள். கலெக்டர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் என்ன கஷ்டம் இருந்தது என்றால் காவல் பிரிவுக்கு அந்தப் பக்கம் செல்வதைக் கண்டு பிடிப்பதும் தடுப்பதும் முடியாத நிலைமை இருந்தது. அந்தக் கஷ்டத்தை உணர்ந்து அதை நிவர்த்தி செய்யும் வகையில் கன்னியா குமரியில் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று மேற் கொள்ளப்பட்ட திட்டம் மிக நல்ல திட்டம். இன்னொரு குறை எங்களுடைய மாவட்டத்திலும், மற்ற பல மாவட்டங்களிலும் இருக்கிறது என்று கருதுகிறேன். சில்லரை வியாபாரிகளுக்கு அரிசி விற்க லைசென்ஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பழம் பெருமையோடு பல காலமாக அரிசி வியாபாரம் செய்து வந்த பெரும் வியாபாரிகளுக்கு, நிதி வசதி உள்ளவர்களுக்கு, நாணயம் பெற்றவர்களுக்கு அனுமதி கொடுக்காமல் மறுக்கப் படுகிறது. இவர்கள் அரிசி வியாபாரத்தைத் தவிர வேறு வியாபாரம் எதுவும் செய்யாதவர்கள். ரீடைல் டீலர்ஸ்-களை

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [22nd January 1965

இவர்கள் ஏதோ தாயில்லாக் குழந்தைகளைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர்கள் புயல் நிவாரணத்திற்காக மேற்கொண்ட காரியங்களைப் பற்றி எதிர்க்கட்சியினர் ஏதேதோ பேசினார்கள். ஏதோ சோற்றைக் கொண்டு போட்டார்கள்; ஊசிப் போன சோற்றைப் போட்டார்கள், பொட்டலத்தில் போட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அங்கு போக பாதைகள் கிடையாது. வானத்தில் இருந்துதான் போடக் கூடிய நிலைமை இருந்தது. அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு வாயிலே கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தால் அதைக்கூட அமைச்சர்கள் செய்திருப்பார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதிலே ஆர்வம் குறைவாக இல்லை. நிவாரணப் பணிகளைப் பிரமாதமாகச் செய்திருக்கிறார்கள் என்று மக்கள் எல்லாம் போற்றக்கூடிய வகையிலே செய்திருக்கிறார்கள்.

அங்கு நம் ஒருமைப்பாட்டின் சின்னமாக இருக்கும் ராமேஸ்வரம் கோவில் சிறிதளவாவது அலைகளால் பாதிக்கப்படாத அளவிற்கு இருப்பதைப் பார்த்தால் இந்நாட்டில் தெய்வீகத் தன்மையும் அதோடு சேர்ந்த தேசியமும் எவ்வளவு சிறந்தது என்பதைக் காட்டுவதோடு ஜனநாயகத்திற்கும், அமைதிக்கும் முன்னோடியாக இருக்கக் கூடிய நாடு நம் நாடு என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. அங்கு கோவில் சிறிதளவு கூட பழுதுபடாமல் நம் ஒருமைப்பாட்டின் சின்னமாக விளங்குகிறது. காசிக்குப் போய் கங்கையில் குளித்து விட்டு தெற்கே வந்தால் கன்னியா குமரிக்குப் போவதற்கு முன்னால் ராமேஸ்வரம் கடலில் நீராடி விட்டுச் சென்றால்தான் புனித யாத்திரை பூர்த்தியாகிறது என்பது தொன்றுதொட்டே இருந்து வரும் ஒரு பழக்கமாகும். ஆகவே என்ன புயல் வந்தாலும் சரி, பூகம்பம் வந்தாலும் சரி நம் தேசத்தின் ஒருமைப்பாடாக விளங்கும் அந்தக் கோவிலுக்கு ஒரு நாளும் அழிவு கிடையாது என்பதற்கு எடுத்துக் காட்டாக இது அமைந்திருக்கிறது. கவர்னர் பெருமான் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "இச்சட்டப் பேரவையின் புகழுக்கே உரித்தான அடக்க உணர்ச்சியுடனும், கண்ணியத்துடனும் இந்த விவாதங்களை நீங்கள் நடத்துவீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை" என்று பெருமைப்படத் தக்க அளவில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் புறம்பான முறையில் இருந்தது, சட்டசபையில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பாக எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சிலர் பேசியது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மரபு பற்றி அதிகமாகக் கவனிப்பார்கள். பண்பாடு பற்றி அதிகமாக பேசுவார்கள். பண்பாட்டோடும், கண்ணியத்தோடும் நடந்து கொள்ளக் கூடியவர். அவர் கட்சியைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பற்றி மிகவும் கண்ணியக் குறைவாகப் பேசினார்கள் என்று சொன்னால் அதை இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. முதலமைச்சர் அவர்களைப் பற்றிப் பேசும்போது வயதானவர், வயதான மனிதன் இருந்து விட்டு போகிறார் என்ற வார்த்தையை

22nd January 1965] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

இரண்டு மூன்று தடவை சொன்னார்கள். மனிதன் என்று சொன்னால் என்ன என்று கேட்கலாம். ஹானரபில் மெம்பர்ஸ், ஹானரபில் மினிஸ்டர் என்று சொல்லும் பண்பாடு நமக்கிருக்கிறது. வயதானவர் இருந்து விட்டுப் போகிறார் என்று சொன்னால் அவர் யார் தர்மத்தில் இருக்கிறார்கள்? அருள் கூர்ந்து இது சம்பந்தமாக வேண்டியதை செய்வதை நாங்கள் வரவேற்கிறோம் என்று திரு. அரங்கண்ணல் அவர்களும் திரு. மதியழகன் அவர்களும் கேட்டுக்கொண்டார்கள். இம்மாதிரி கேவலப் படுத்தும் பேச்சுக்களைப் பேசினால் வருங்கால சந்ததியினர் நம் சட்டசபை நிகழ்ச்சிகளை உயிரோவியமாக மதித்து வாசித்துக் கொண்டிருக்கும் போது என்ன நினைப்பார்கள்? ஆகவே நம் கௌரவத்தை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள், பஞ்சாயத்துச் சட்டத்தை வைத்து தேர்தலில் எதிர்க்கட்சியினர் வர முடியாமல் பார்க்கிறார்கள் என்று சொன்னார்கள். ஒரு பஞ்சாயத்து சட்டத்தினால் ஆளும் தரப்பி லுள்ளவர்கள் மற்றவர்கள் வருவதை நிறுத்தி விட முடியுமா? அதுவும் வழக்கறிஞராக இருக்கும் அவர்கள் இப்படிச் சொல்வது பரிதாபத்திற்குரியது. எதிர்தரப்பில் உள்ளவர்கள் வெற்றி அடைந்து விடுவார்கள் என்ற பயத்தால் செயல்பட வேண்டுமென்றால் ஆட்சி கையில் இருக்கிறது, அமைச்சர்கள் இருக்கிறார்கள், அதிகாரம் இருக்கிறது, இவ்வளவையும் வைத்துக் கொண்டு சட்டசபையில் சட்டம் இயற்றிக் கொண்டு தடங்கல் செய்ய வேண்டியதில்லை. நாம் இயற்றும் சட்டத்தை நாமே இழிவு படுத்தக் கூடாது. இம்மாதிரிப்பட்ட பேச்சுக்கள் இல்லாது நம் சட்டசபையின் கௌரவத்தை நாம் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கவர்னர் பெருமான் அவர்கள் உரைக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ர. ஜீவரத்னம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சமீபத்தில் தென்னாட்டில் தனுஷ்கோடி-ராமேஸ்வரத்தில் புயல் ஏற்பட்ட போது அங்கு நம் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களும் ரெவன்யூ அமைச்சர் திரு. ராமையா அவர்களும், காங்கிரஸ் தலைவர் அவர்களும் சென்று மக்களுக்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று பார்த்து அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்ததற்காக நான் அவர்களை மிகவும் பாராட்டுகிறேன். தமிழகம் முழுவதுமே அவர்களைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறது. குறிப்பாக நம் முதல் அமைச்சர் அவர்கள் வயதைப் பாராமல் கூட அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றார்கள். மக்களின் தேவைகளை உடனுக்குடன் ஆராய்ந்தார்கள், ஆராய்ந்து ஓரளவு அதை நிவர்த்தி செய்தார்கள். எவ்வளவு உயர்தரமாக மக்களுக்குச் சேவை செய்ய முடியுமோ அவ்வளவு உயர்தரமாகச் சேவை செய்யக் கூடியவர்கள் நம் முதல் அமைச்சர் அவர்கள். அவர்கள் செய்த காரியத்தில் நம் எல்லோருக்கும் பூரிப்பு உண்டு. அந்தப் பூரிப்பில் இந்தச் சபையில் உள்ள எல்லோருமே பங்கு கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சமீபத்தில் உணவு நெருக்கடி செயற்கையாக சிருஷ்டிக்கப்பட்டது. வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன், எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரை உணவு நெருக்கடி ஏற்படக் காரணம் இல்லை. உணவு நெருக்கடி வட ஆற்காடு ஜில்லாவில் வட பகுதியில்தான் உண்டு. தென் பகுதியில் நெருக்கடி ஒன்றும் இல்லாமல் இருந்தது. வட பகுதியில் உணவு நெருக்கடி ஏற்பட்டபோது முதலமைச்சர் அவர்களிடமும், உணவு அமைச்சர் அவர்களிடமும் நானும் சில சட்டசபை அங்கத்தினர்களும் சேர்ந்து வற்புறுத்தினோம் எங்கள் தேவை குறித்து. எங்கள் தேவைகளை உடனுக்குடன் கவனித்து வேண்டியவற்றைச் செய்தார்கள் முதல் அமைச்சர் அவர்கள் 1942 சுதந்திரப் போராட்ட காலத்தில் போராட்டம் நடத்தி காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் சிறை சென்றார்கள். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் எல்லாம் அன்று ஆங்கிலேய அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தேசத்தில் பெரிய உணவு நெருக்கடி ஏற்பட்டது. அந்த உணவு நெருக்கடியில், ஆங்கிலேய அரசாங்கம் ஆண்ட காலத்தில், சுமார் 40 லட்சம் மக்கள் இறந்தார்கள். அந்த அரசாங்கத்தை, அப்போதிருந்த அரசாங்கத்தை இப்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது வங்காளத்தில் பெருத்த பஞ்சம் ஏற்பட்டது. வங்காள மக்கள் வீரத்தோடு தங்களை எதிர்த்துப் போராடுகிறார்கள் என்ற காரணத்திற்காக அப் பஞ்சத்தை உருவாக்கி அவர்களைக் கொன்றார்கள் என்றால் அது மிகையாகாது. அத்தகைய அரசாங்கத்தை இப்போது தி.மு.க. தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆதரித்து வந்தார்கள். அந்நிலை நம் பகுதியில் ஏற்படாமல், ஒருவர் கூட உணவு நெருக்கடி காரணமாக இறந்தார் என்ற வார்த்தை இல்லாமல் அரசாங்கம் காப்பாற்றியது. அதற்காக நாம் அரசாங்கத்தையும், முதலமைச்சர் அவர்களையும் மிக மிகப் பாராட்ட வேண்டும். வடாற்காடு ஜில்லாவின் வட பகுதியில் ஓரளவு உணவு நெருக்கடி தலை காட்டியது. அப்போது நாங்கள் கேட்ட நேரத்தில் தக்க உதவிகளை உடனுக்குடன் செய்து தந்தார்கள். அதற்காக எங்கள் ஜில்லா மக்களின் சார்பாக முதல் அமைச்சர் அவர்களுக்கும், உணவு அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்தி ஏதோ திணிக்கப்படுகிறது என்று இங்கு இரண்டு மூன்று நாட்களாகப் பேசப்படுகிறது. இந்தியின் வரலாறு இந்திய தேச சுதந்திரத்தின் வரலாறு. சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக இந்த தேசத்திற்கு ஒரு பொது மொழி வேண்டுமென்று தீர்மானம் செய்தோம். அந்தப் பொது மொழி இந்த தேசத்தில் உள்ள பெரும்பான்மை மக்கள் பேசக்கூடிய மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து இந்தி மொழி தேர்ந்தெடுக்கப்பட்டது. அது காந்தி அடிகளாலும் காங்கிரஸ் மகாசபையினாலும் வரவேற்கப்பட்டது. அப்போது முதற்கொண்டு இந்த நம் தேசத்தின் சுதந்திரத்திற்கு யார் யார் விரோதிகளாக இருந்தார்களோ, யார் யார் ஆங்கிலேயர்களின் அடிவருடிகளாகயிருந்தார்களோ, யர் யார் நம் தேசத்திற்கு சுதந்திரம் கொடுக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தார்களோ, சுதந்திரம் கொடுத்தால் ரத்த ஆறு ஓடும்

22nd January 1965] [திரு. ர. ஜீவரத்னம்]

என்று கூறி யார் யார் ஆங்கிலேயர்களிடம் காவடி எடுத்துச் சென்ருர்களோ அவர்கள்தான் இன்றும் இந்தி வேண்டாமென்று சொல்கிருர்கள். வேறு யாரும் சொல்லவில்லை. அரசியல் நிர்ணய சபையில் அரசியல் சட்டம் இயற்றும்போது நம் தேசத்திற்கு ஒரு பொது மொழி வேண்டுமென்று நிர்ணயம் செய்தோம். அது இந்தி என்று தேச மக்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். அப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் அமைக்கப்பட்டது. அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் பேரில்தான் நாம் இன்று இந்தச் சபையில் வீற்றிருக்கிருேம், இங்கு ஏதேதோ பேசுகிருேம். அந்தச் சட்டத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை, என் கட்சியின் கோரிக்கையும். அந்தச் சட்டத்தின் பேரால் எப்படி எப்படியோ தப்பித்துக் கொள்கிருேம். உதாரணமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த தேசத்தைத் தவிர வேறு எந்த தேசத் 12-30 p.m.
திலாவது சுதந்திரத்தை இப்படி எதிர்த்துப் பேசுவார்களா? என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த தேசத்தைத் தவிர வேறு எந்த தேசத்திலாவது சட்டத்தைக் கொளுத்துவதை அனுமதித்திருக்கிருர்களா, அனுமதி தான் கொடுப்பார்களா என்பதை எதிர்க்கட்சிக்காரர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டசபை எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் பேசியதாக நான் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். அவர்கள் 'துக்க தினம் கொண்டாடினுல் இவர்கள் தலையைக் கிள்ளிவிடுவார்களா?' என்று பேசியிருப்பதாகப் பார்த்தேன். இந்த அளவுக்குப் பேசுவதற்கும் இந்த நாட்டிலுள்ள சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது. நாம் அமைத்துக் கொண்ட நம்முடைய சுதந்திரத்தின் பாதுகாப்புச் சட்டம் இவைகளை எல்லாம் அனுமதிக்காவிட்டால் எந்த நாட்டிலாவது இம்மாதிரி பேசுவதை மக்கள் அனுமதிப்பார்களா? என்பதை அவர்களே சிந்தித்துப் பார்த்துக்கொள்ளட்டும். இந்த தேசத்தினுடைய சுதந்திரம் எளிதாகக் கிடைத்ததல்ல. மிகவும் கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரம். சுதந்திரப் போராட்ட காலத்தில் நடந்த ஒரு சிறு சம்பவத்தை நான் இச்சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். 1944-ம் வருடம் ஜனவரி மாதம் 26-ம் தேதி, அதாவது அன்றையதினம் ஜனவரி 26 என்பது குடியரசு தினமாக இல்லை, சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட வேண்டும் என்பது காங்கிரஸ் மகாசபையின் தீர்மானமாக இருந்தது; அந்த முறைப்படி சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும் என்று, அன்றைக்கு தஞ்சை சிறையில் இருந்த நாங்கள் எல்லோரும் முடிவு செய்தோம். அன்றையதினம் எங்களோடு அமைச்சர்களாக இருந்த பலர், சட்டசபை அங்கத்தினர்களாக இருந்த பலர் சிறைக்குள் இருந்தார்கள். அப்போது இருந்த ஆங்கிலேய அரசாங்கம் சிறைக்குள் சுதந்திர தினம் கொண்டாடுவதை நாங்கள் அனுமதிக்க முடியாது, கொடியேற்றக் கூடாது, கொடி வணக்கம் செய்யக் கூடாது என்றெல்லாம் உத்தரவு போட்டிருந்தார்கள். இருந்தும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது என்று நினைத்து நாங்கள் காலையில் எழுந்து, குளித்துவிட்டு கொடி வணக்கம் செய்தோம். இதற்குள் போலீஸ்காரர்கள் சிறைக்குள்

[திரு. ர. ஜீவரத்னம்] [22nd January 1965

வந்து எங்களை எல்லாம் அடித்து நொறுக்கினார்கள். இவ்வாறெல்லாம் சிறைக்குள் அடிபட்டு, உதைபட்டு கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தை, இப்போது எதிர்க் கட்சியினர் நையாண்டி செய்வதும், இதற்காக இயற்றப்பட்டிருக்கும் சட்டத்தைக் கொளுத்துவதும், குடியரசு தினத்தைத் துக்கதினமாகக் கொண்டாடுவதும் இப்படியாகச் செய்து கொண்டிருந்தால் இதை எத்தனை நாட்களுக்குத்தான் இந்த அரசாங்கம் அனுமதித்துக் கொண்டிருக்கப் போகிறது என்பது சுதந்திரத்திற்காகக் கஷ்டப்பட்ட என்னைப் போன்றவர்களுக்கு விளங்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற முறையில், சுதந்திரத்தை இவ்வாறு நையாண்டி செய்வதையும், துக்கதினம் கொண்டாடுவதாகச் சொல்வதையும் இன்னும் இதுபோன்ற செய்கைகளில் ஈடுபடுவதையும் பார்த்து என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை, இதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும் என்று உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு அதிசயம் என்னவென்றால் இது போன்ற செயல்களுக்கெல்லாம் நமது சட்டம் பாதுகாப்பு கொடுக்கிறது. இதைப்பற்றியும் நாம் கவனிக்க வேண்டும்.

இன்னொன்று, நம்முடைய சட்டத்தின் பாதுகாப்பிலேயே இருந்துகொண்டிருப்பது முஸ்லீம் லீக். இந்த தேசம் பிளவு பட்டதற்கே காரணம் இந்த முஸ்லீம் லீகின் வகுப்புவாதத் தன்மைதான். நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்டதற்குக் காரணமாக இருந்ததே இப்பேர்பட்ட வகுப்புவாதம் தான். அப்பேர்ப்பட்ட வகுப்பு வாதம் இப்போது பல ரூபத்தில் தலைகாட்டத் துவங்கியிருக்கிறது. குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் அதிலும் என்னுடைய நகரத்தில் இந்த வகுப்புவாதத் தன்மை தலைதூக்கியிருக்கிறது. இதற்குத் தூபம் போடுகின்ற முறையில் முஸ்லிம் லீக்கும், அதற்குத் துணை செய்வது போல், 1942-ல் தேசத் தலைவர்கள் எல்லாம் சிறையில் இருந்த நேரத்தில் ஆகஸ்ட் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை எல்லாம் குண்டர்கள் என்று சொன்னவர், பின்னால் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், கவர்னர் ஜெனரலாக பதவி வகித்தவர், அதற்குப் பின்பும் பல பெரிய பதவிகளை வகித்தவர், தனக்குச் சக்தி யில்லை என்ற காரணத்தினாலோ என்னவோ தனக்குப் பின்னால் இருப்பவர்களை வைத்துக்கொண்டு வகுப்பு வாதத்தை மிக உயர்ந்த அளவில் என்னுடைய நகரத்தில் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய நகரத்தைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். வகுப்பு வாதத்திற்கு மிகவும் பெயர் போன நகரம், இப்போதுதான் கொஞ்ச காலமாக எந்த விதமான தொல்லையும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் முஸ்லீம் மகாநாட்டை அங்கு கூட்டுவித்ததன் காரணமாக, அதில் கலந்து கொண்ட திரு. ராஜாஜி அவர்கள், திரு. அண்ணாத்துரை அவர்கள் இவர்கள் எல்லாம் பேசிய பேச்சின் மூலமாக வகுப்பு வாதத் தன்மை மிக உயர்த்த அளவில் இப்போது அங்கே தலை தூக்கியிருக்கிறது, அவர்கள் பேசியது என்னவென்றால், கதர் சட்டையைக் கண்டால் கிட்டவே அணுக விடாதீர்கள், கதர் சட்டையைக் கண்டால் பிய்த்துப்போடுங்கள்

22nd January 1965] [திரு. ர. ஜீவரத்னம்]

என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். சட்டம் உங்களை ஒன்றும் செய்யாது, சட்டம் ஒன்றும் பிரமாதமல்ல, இந்தச் சட்டங்களை எல்லாம் செய்தவர்கள் நாங்கள்தான் என்று பேசியிருக்கிறார்கள். இந்த நிலைமை இருந்து கொண்டிருந்தால் என்ன ஏற்படும்? இந்த நாட்டில் எப்படிப் பேசினாலும் நம்முடைய சட்டம் பாதுகாப்பு கொடுக்கிறது என்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். . . (மணியடிக்கப்பட்டது).

திரு. ஆ. துரையரசன்: கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைமீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தில் என்னுடைய தொகுதி சம்பந்தமாக சில கருத்துக்களைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த திங்கள் தனுஷ்கோடியிலும் பிற இடங்களிலும் அடித்த கோரப் புயலின் காரணமாக ஏற்பட்ட கொடுமையான சம்பவங்களைப்பற்றியும் அதற்கடுத்தபடியாக தஞ்சை மாவட்டத்தில் அதிராம்பட்டினத்திலிருந்து அறந்தாங்கி தாலுகா எல்லை வரையில் ஏற்பட்ட கொடுமைகளைப்பற்றியும் கவர்னர் பெருமான் அவர்கள் தனது உரையில் பொதுவாகக் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, குறிப்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. சுமார் 1,000-க்கு மேற்பட்ட குடிசைகள் கடல் கொந்தளிப்பின் காரணமாகச் சேதம் அடைந்திருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவலின்படி அதிராம்பட்டினத்திலிருந்து கடற்கரை ஓரமாக அதாவது புத்துக்கிடா வரையிலும் 1,200-க்கு மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்திருக்கின்றன. கோபாலப்பட்டினம் என்ற கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்றவர்களில் இரண்டு பேர்களும் இன்னொருவரும் இறந்து போயிருப்பதாகவும் தெரிகிறது. அங்கு ஏற்பட்ட புயலின் கொடுமை இரவோடு இரவாக அதிகரித்து, பகலில் தஞ்சை மாவட்டத்தில் வந்ததும் தணிந்து விட்டதன் காரணமாக ஏராளமான உயிர்ச்சேதம் இல்லாமல் போனது என்று அந்த வட்டாரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த நமது தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதில் சர்க்கார் தந்திருக்கின்ற நிவாரணம், குடிசை ஒன்றுக்கு 15 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை கொடுக்கப் போவதாகத் தெரிகிறது. இந்த 30 ரூபாய், வீழ்ந்து போன குடிசைகளுக்குக் குச்சிகள் வாங்குவதற்குக்கூட போதாததாக இருக்கிறது. இந்தத் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கடந்த திங்கள் 29-ம் தேதி கேட்டோம். அதற்கு அவர்கள் இதற்குமேல் தங்களால் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள். இந்த நிலையில் நான் இந்த மன்றத்தின்மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது, குடிசைகளை இழந்து நிற்கும் ஏழை மீனவ சமுதாயத்திற்குக் குடிசை ஒன்றுக்கு 100 ரூபாயாவது கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அவர்களுக்கு இருந்த வலைகள், படகுகள் இவைகள் எல்லாம் சேதமடைந்திருக்கின்றன. அம்மாப்பட்டினம் கடற்கரை யோரமாக ஏற்பட்டிருக்கின்ற சேதம், சர்க்கார் மதிப்பீட்டின்படி கிட்டத்தட்ட 2½ லட்சத்திற்கு இருக்கும் என்று

[திரு. ஆ. துரையரசன்] [22nd January 1965

சொல்லப்பட்டிருக்கிறது. புதுப்பட்டினம் என்ற ஊரில் 250, 300 வீடுகள் சேதமடைந்து இருந்த இடமே தெரியாமல் இருக்கிறது. சர்வேயர்களைக் கொண்டு வந்து தான் கண்டுபிடிக்க வேண்டிய பரிதாபகரமான நிலைமையில், தங்களுடைய சொத்து சுகங்களை எல்லாம் இழந்து அத்தனை பேரும், எப்படி இனி வாழ்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மேலும் தங்கள் தொழில் நடத்துவதற்குத் தகுந்தபடி வலைகள், படகுகள் இவைகளை எல்லாம் தருவதற்கு வழிசெய்து கொடுக்க வேண்டும். முஸ்லீம் சமுதாயத்தினர்கள் அதோடு நூற்றுக்கணக்கானவர்கள் வீடுகள் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக் கெல்லாம் வேண்டிய கடன் உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது அது சாத்தியமில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். இதைப்பற்றி நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கூடுமான வரை வசதி படைத்தவர்களுக்கென்று நீண்ட காலத் தவணைகளில் கடன் கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் பொதுவாக பருவ மழை தவறியிருந்தாலும் கூடுமான அளவுக்கு மழை பெய்திருக்கிறது என்று குறிப்பிட்டார் கள். என்னுடைய வட்டாரத்தில் பருவ மழை பெய்யத் தவறியதின் காரணமாக, இந்த ஆண்டு, அறந்தாங்கி பகுதியில் சுமார் 1,000 ஏக்கர் சாகுபடிக்கு வரி வஜா செய்யவேண்டிய நிலைமையில் இருக் கிறது. கடல் தண்ணீர் உட்புகுந்த சுமார் 2,000 ஏக்கர் வரை உப்புத் தண்ணீரில் அகப்பட்டு, விவசாயம் பாழடிக்கப்பட்டிருக் கிறது. முக்கியமாக அறந்தாங்கி, பொன்வேத்தி, வெள்ளூர் இந்த மூன்று ரேஞ்சுகளில் பொன்வேத்தி, வெள்ளூர் இந்த இரண்டு ரேஞ்சுகளிலும் பருவ மழை தவறியதின் காரணமாக சுமார் 80 சத விதம் விவசாயம் பாதிக்கப்பட்டு, அதிலுள்ள விவசாயிகள் எல்லாம் இன்றையதினம் வெளியில் வாங்கிச் சாப்பிடக் கூடிய நிலையிலுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய விவசாயத்திற் கெல்லாம் வரி வஜா செய்து கொடுத்தாக வேண்டும். அதற்கான உத்திரவுகளை உடனடியாக அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வசிக்கின்ற பகுதி தஞ்சை மாவட்டத்தின் கடைக்கோடி; இராமநாதபுரம், திருச்சி மாவட்டங்களின் எல்லையாக இருக்கின்ற காரணத்தினால், நெல்லை அடுத்த தாலூகாவிற்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று சௌக்கி போடப்பட்டு கண்ட்ரோல் செய்யப்பட்டி ருக்கிறது. ஆனால் அங்கிருந்து சௌக்கி வழியாக எடுத்துச்செல் லப்படுவது தடுக்கப்பட்டாலும், பக்கத்திலே உள்ள இராமநாதபுரம் மாவட்டத்திலேயும், திருச்சி மாவட்டத்திலேயும் சற்று அதிகமான விலைக்கு விற்கிற காரணத்தினால் இங்கிருந்து எப்படியாவது கள்ளத் தனமாக எடுத்துச் செல்லுவது என்ற நிலைமை இருக்கிறது. அதி காரிகளைச் சந்தித்துக் கேட்டால், வியாபாரிகளைக் கேட்டால், உணவு அமைச்சர் அவர்களுடைய தொகுதியில் வேண்டுமானாலும் விற்றுக்கொள்ளலாம், ஆனால் தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் மூட்டை 25 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டும் என்று சொல்லு கிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமென்று சொல்லும்போது,

இரண்டு மாவட்டங்களில் அதிக விலைக்கு விற்கலாம், ஆனால் ஒரு மாவட்டத்தில் மட்டும் கூடாது என்ற நிலைமை இருப்பதால்தான் இங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நமது உணவு அமைச்சர் அவர்களுடைய தொகுதி, திருமயம் தொகுதி, தாயற்ற பிள்ளை போல மூன்று நான்கு மாதங்களாகக் காட்சி அளிக்கிறது. எனது தொகுதியிலிருந்து கள்ளத்தனமாக அரிசி, நெல் எடுத்துச் சென்றால்தான் அங்குள்ளவர்கள் சாப்பிடலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. படி அரிசி 1¾ ரூபாய்,
என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. படி அரிசி 1¾ ரூபாய்
முதல் செய்வதிலே, 5 ஏக்கர்களுக்குக் குறைந்து இருக்கிறவர்களிடத்தில் கொள்முதல் செய்யக்கூடாது. . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஐந்து ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் யாரிடமும் விற்பதில்லை என்று ஒப்புக் கொள்வார்கள் என்றால் பரிசிலனை செய்யலாம். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் கூட விளையக்கூடிய நெல்லை தங்களுடைய உபயோகத்திற்கு என்று, அப்படியே சாப்பிடுவதற்கு மாத்திரம் வைத்துக்கொள்வதில்லை. ஒரு பகுதியை விற்றுத்தான் மற்ற தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். வெளியில் விற்பதை அரசாங்கத்திற்கு நியாயமான விலைக்கு விற்க வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். அதுதான் நம் கொள் முதல் கொள்கை.

திரு. ஆ. துரையரசன்: நன்றி செலுத்துகிறேன். கொள்முதல் செய்வதிலே, நான் குறிப்பிட வந்தது, அறந்தாங்கிக்குக் கிழக்கேயிருந்து வண்டியில் நெல் ஏற்றி வருகிறது. குறிப்பிட்ட விலைக்கு விற்பதற்காகவே எடுத்து வந்தால் கூட, இடையில் அதிகாரிகள் ஜீப் காரில் வருகிறார்கள். பக்கத்தில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லுகிறாய் என்று உடனே தாலுகா அலுவலகத்திற்குக் கொண்டு வந்து பறிமுதல் செய்வதா என்று திட்டமான உத்திரவு எதுவும் இல்லை என்று அங்கே பறித்துப் போட்டு விடுகிறார்கள். அதை வியாபாரிகளிடத்தில் போட்டும் விடுகிறார்கள். அதே நேரத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டு, 4,000 மூட்டைகள், 5,000 மூட்டைகள் வெளியில் எடுத்துச் செல்லப்படுகிறது என்றால் அவைகளைப் பிடிக்க அதிகாரிகள் அஞ்சுகிறார்கள், பயப்படுகிறார்கள். பெரும் பெரும் பணக்காரர்களாக இருக்கிறவர்கள் அத்தனை பேர்களும் ஆளும் கட்சிக்காரர்களாக இருப்பதால் அந்த நெல்லைப் பிடிக்க அஞ்சுகிறார்கள். அதே நேரத்தில் ஏழைகள் துன்புறுத்தப்படுகிறார்கள். நெல்லை எடுத்துச் செல்லும் சைக்கிள்கள் கூட பிடித்துச் செல்லப்படுகின்றன. 'அன்க்ளெயிம்ட் ப்ராபர்டி' என்று ஆக்ஷன் செய்யப்படுகிறது. இரண்டு அல்லது நான்கு லாரிகள் திருட்டுத் தனமாக எடுத்துச் செல்லப்படுகிறது என்று பிடிக்கப்பட்டாலும் அவர்களுக்கு நியாயமான விலை கிடைத்து விடுகிறது. இந்த நிலைமையை மாற்ற அமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆ. துரையரசன்] [22nd January 1965

சாதாரணமாக மில்களில் எவ்வளவு அரிசி ஸ்டாக் இருக்கிறது என்று அதிகாரிகளிடம் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அதிகாரிகளைக் கேட்டால் கட்டாயமாக எதுவும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம் என்று சொல்லு கிறார்கள். சாதாரணமாக 200, 300 மூட்டைகள் ஸ்டாக் வைத்திருக் கிறவர்கள்கூடக் கணக்குத் தரவில்லை. மில்லில் எத்தனை மூட்டை அடிக்கிறார்கள் என்று கணக்குப் புரியவில்லை என்று சொல்லுகிறார் கள். நான் விசாரித்த வரையில் ஒரு யூனிட் காண்டுக்கு ஒரு மூட்டை நெல் அடிக்கப்படலாம் என்று சொல்லுகிறார்கள். எத்தனை மூட்டை அடிக்கப்பட்டது, பக்கத்து மாநிலத்திற்கு எவ்வளவு மூட்டை எடுத்துச் செல்லப்படுகிறது என்று கண் காணிக்க அதிகாரிகள் அஞ்சுகிறார்கள். மில்காரர்கள் பெரும் பாலும் ஆளும் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள் என்று அச்சப் படுகிறார்கள். இந்த நிலை நீடித்தால் சாதாரண மக்கள் பாதிக்கப் படுவார்கள் என்று சொல்லி, ஏழைகள் பாதிக்கப்படாத அளவுக்கு சர்க்கார் கொள்முதல் செய்வதிலே கண்காணிப்பாக இருக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்** : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களால் ஆற்றப்பட்ட உரைக்கு நண்பர் திரு. தண்டாயுதபாணி பிள்ளை அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்ல முற்படுகிறேன்.

இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவடத் தோளு மேயலால்
முந்தி அவ்விள நகை முறுவல் உண்டதே.

என்று அவதார வாயிலாகவும்,

வான்நின்றிழுந்து மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும் உணர்வும் போல் உள்ளும் புறமும் உளன் என்பு
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக்கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்தே.

என்றும் ஆண்டவனுடைய பிரதிபலிப்பாக உள்ள இயற்கையின் வாயிலாகவும், கம்பனால் புகழப்பட்டவனும், சிறந்த சிவபக்தனும், குணம் என்னும் குன்றேறி நின்றவனும் ஆகிய இராமச்சந்திரனால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு ஆற்றப்பட்ட லிங்கத்தைத் தன்பால் கொண்டது இராமேச்சரம் என்னும் தீவு. இந்த நாட்டு மக்கள், வடபுலம் தென்புலம் என்றோ, குணக்கு குடக்கு என்றோ, மேல் கீழ் என்றோ வேற்றுமை உணர்ச்சி பாராமல் ஒன்று கலந்த உணர்வோடு "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்ற ஆன்றோர் மொழிக்கு இணங்க வழிபாடு ஆற்றுகின்ற ஸ்தலம் இராமேச்சரம். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய தண்டமிழ் நாட்டின் பெரும் பகுதியைக் கடல்

கொண்டது என்பதை வரலாற்று வாயிலாக நாம் அறிந்திருக்கிறோம். இப்போது நம் கண் முன்னால் மீண்டும் நம்முடைய தமிழகத்தின் ஒரு பகுதியைப் புயலும் கடலும் கொண்ட துக்க நிகழ்ச்சியை நாம் சில தினங்களாகக் கண்டு அனுபவித்து வருகிறோம். இந்த துக்ககரமான ஒரு நிகழ்ச்சியைக் கேட்டவுடனே நம்முடைய தமிழக அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஓடோடி அங்கே சென்று காலத்திலே, விரைவிலே, மனித ஆற்றலுக்கு உட்பட்டு செய்ய வேண்டியவைகளைச் செய்தார்கள் என்பதைப் பற்றி நான் தினத் தாள்களின் வாயிலாகத் தினம் தினம் படித்துக் கொண்டிருந்தேன். குறிப்பாக நமது உணவு அமைச்சர் கனம் ராமைய்யா அவர்களும், உள்நாட்டு இலாகா அமைச்சர் கனம் கக்கன்ஜி அவர்களும் தனுஷ்கோடியிலேயேகூட இருந்து பணியாற்றினார்கள் என்றும், முதலமைச்சர் அவர்களும் பிற்பாடு சென்று அதற்கு ஆவன செய்தார்கள் என்றும் செய்தித் தாள்களில் படித்தேன். இந்த ராமேசுவரத்திலே திருக்கோயில் கொண்டு எழுந்திருளியிருக்கின்ற இராமநாதன் சார்பாக அவர்களுக்கு என்னுடைய மனம் கலந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்லாண்டும் கூறிக் கொள்கின்றேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அமைச்சர்களுக்கு இராமநாதேச்வரர் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வது இருக்கட்டும். அந்த இராமநாதேச்வரர் மீதே ஒரு குற்றம் சாட்டப்பட்டது எதிர்க் கட்சிக்காரர்களால். 'அந்த இராமநாதேச்வரர் சுய நலத்தோடு இருந்தார், எல்லோரையும் காப்பாற்றவில்லை' சொன்னார்கள். அதற்கும் ஒரு சமாதானம் சொல்லிவிட்டால் நல்லது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: சென்ற மூன்று தினங்களுக்கு முன்பு இந்த மன்றத்தில் பேசிய எதிர்க்கட்சி நண்பர் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் சொன்னார்கள். ஒரு அறிவிப்பிலே இயற்கையினுடைய சீற்றம் என்றும், மற்றொரு அறிவிப்பிலே கடவுளுடைய நிகழ்ச்சி அல்லது திருவிளையாடல் என்றும் கூறியிருக்கிறதே என்று அன்பார்ந்த முதல் அமைச்சர் அவர்களைப் பார்த்து சற்று ஏளனச் சிரிப்போடு கூடக் குத்தலாகக் கேட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். அந்த மாதிரி என் மனதில் ஒரு ஊறு விளைவித்துக் கொண்டிருக்கிறது. சாதாரணமாக, இயற்கையும், ஆண்டவனும் ஒன்றுதான் என்பதை பற்றி நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் தங்கள் மூலமாக. திருவாசகத்தில் உள்ள "திரு அண்டப்பகுதி" என்ற தலைப்பையும், பட்டினத்தடிகள் பாடலில் உள்ள "ஒருபா ஒருபது", என்ற தலைப்பில் உள்ள "மன்னிய அண்டமநின் சென்னியன் வடிவே", "ஒழியாது ஓடிய மாருதம் உயிர்ப்பே", என வருகின்ற அடிகளையும், இன்னும் மற்றை ஆன்மீகத் துறை நூல்களையும் மதியழகன் அவர்கள் ஊன்றி படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறு படித்தால், ஆண்டவனும், இயற்கையும் ஒன்றுதான் என்பது புலப்படும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'ஆண்டவனும், இயற்கையும் ஒன்றுதான் என்று கருத்துக் கொண்டுதான் இப்படி

[திரு. வ. எஸ் தக்ஷிணமூர்த்தி கவுண்டர்] [22nd January 1965

அறிக்கை சமர்ப்பித்திருக்கிறேன்' என்று சேக்கிழார் மரபில் வந்தவர் ஆதலின் தன் மேலான குடிப்பிறப்பின் வழிவந்த அமைதியோடும், ஆன்மீக அறிவோடும், சொன்னார்கள். கனம் அங்கத்தினர் சாதாரணமாக, இந்தப் புயலினால் பாதிக்கப் பட்ட இராமேசுவரம் தீவை ஒரு பெரிய மதில் சுவர் எழுப்பிப் பாதுகாத்திருக்கலாம் என்றுகூட சொன்னதாக ஞாபகம் இருக் கிறது. புறநானூற்றுப் பாடல் ஒன்றை இங்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"நீர்மிகின் சிறையும் இல்லை, தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை."

என்பது நாவலர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். நீர், அதாவது தண்ணீரானது அதிகமாகக் கொந்தளித்துப் பொங்கி வருகிறபொழுது அதைத் தடுத்து நிறுத்துகின்ற சுவர் அல்லது அரண் இதுவரையிலே இல்லை. அதுபோலவே, தீ மிகுந்து எழும் பொழுது, அதைத் தடுத்து நிறுத்த, தன்மையுடையதாகச் செய்யக் கூடிய ஆற்றல் மனிதனுக்கு இன்னும் எட்டவில்லை. அதேபோல் காற்று பெருகி அடித்துவரும்பொழுது, அதைத் தடுத்து நிறுத்தக் கூடிய வலிவும் மனிதனுக்கு இன்னும் கிட்டவில்லை என்று புறநானூறு பாடலிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஒத்து, பெரிய நீண்ட கடற்கரையைக் கொண்ட நமது நாட்டில் கடற்கரை பூராவும் மதில் சுவர் எழுப்பி; புயலைத் தடுத்து நிறுத்துவது மனித சக்திக்கு உட்பட்டது அல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. மதியழகன் பேச்சைக் கேட்டபொழுது நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே இதை ஒரு ஷரத்தாகச் சேர்த் துப் பேசினாரோ என்றுகூட நினைக்கிறேன். சர்க்கார் மேலே பழி யைப் போடுகிறார். இயற்கையின் சீற்றத்திற்கு சர்க்கார் என்ன செய்ய முடியும்? அதற்குக்கூட ஒரு பாட்டு உண்டு, சொல்லு கிறேன்.

"ஆவிற்கு அரும்பனி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவலன் என்று உலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட்கு எனல் வேண்டா தீங்கு உரைக்கும்
நாவிற்கு நல்கூர்தல் இல்"

என்பது அந்தப் பாட்டு. அதாவது, மழை மிகுதியாகப் பெய்த பொழுது, அந்த மழையிலிருந்து பசுக் கூட்டங்களைக் காக்க வேண்டி கோவர்த்தன கிரியைக் குடையாகத் தாங்கிய கண்ணனைக் கூட மாடு மேய்க்கிற இடையன் என்று உலகம் பழித்திருக்கிறது. தியாகம் செய்தவரைக்கூட, அவதார புருஷரைக்கூட, கண்ணனைக் கூட 'இவன் இடைப் பயல்' என்று உலகம் பழித்தது. ஏன் என்ப தற்குக் காரணம் கூறினார். "தேவர்க்கு மனிதற்கு எனல் வேண்டாம்" தியாகம் செய்திருந்தாலும் சரி, நல்லவராக இருந்தாலும் சரி, கண்ணனாக இருந்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலையில்லை. தீங் குரைக்கும், பழிச் சொல்லையே சொல்லிப் பழகிவிட்ட நாக்குக்கு,

22nd January 1965] [திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்]

தீங்கையே பேசி வழக்கமுடைய நாக்குக்கு தரித்திரமே கிடையாது. எது எப்படி வந்தாலும் சரி, இயற்கையால் விளைந்தாலும் சரி, அரசாங்கத்தின்மீது பழி சுமத்தக்கூடிய நிலைமை இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : 'காவலர் பழிக்கும் கண்ணகன் ஞாலம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: நாவலர் அவர்கள் சொல்லுவதை நான் உணர்ந்திருக்கிறேன், வரவேற்கிறேன், பொறுப்போடு உணர்கிறேன். 'கண்ணகன் ஞாலம்' என்று சொன்னால், சாதாரண மக்கள் பேசுவது இயற்கை. சட்ட மன்றத்தில் அமர்ந்து, இங்கு வந்த பிறகு, மக்கள் பிரதிநிதியாக வந்து அமர்ந்த பிறகு இப்படிச் சொன்னால், அந்தப் பாட்டுக்கு பொருள் ஆகாது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்பது தொல்காப்பியம். உலகம் என்பது உயர்ந்தோரைச் சார்ந்தது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : நாவலர் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். உலக மக்களை இரு கூறாகப் பிரித்தார்கள். மாக்கள் என்றும், மக்கள் என்றும் பிரித்தார்கள். மக்கள் என்பது பகுத்தறிவு உள்ள, ஆறு அறிவு படைத்தவர் என்றும், மாக்கள் என்பது மனிதப் பண்பு இல்லாதவர்கள் என்பதும் நாவலர் அவர்களுக்குத் தெரியும். மக்களை உயர்திணையாக வைத்து இலக்கணம் பேசினார்கள். 1-00 p.m.

"மக்கள், தேவர், நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"

என்று இலக்கணத்தில் கூறப்பட்டிருக்கிறது. மக்கள் சமுதாயத்தை பூராவாக உயர் திணைக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டது பிற்பாடு ஆராய்ச்சிக்குரிய விஷயமாகிவிட்டது. மனித சமுதாயத்தை இரு கூறாகப் பிரித்தார்கள். மக்கள் என்றும், மாக்கள் என்றும் பிரித்தார்கள். மாக்கள் என்பவர்களை ஐயறிவு படைத்த விலங்கினங்களோடு சேர்த்து வைத்தார்கள் தமிழ் அறிஞர்கள். மக்கள் என்பது ஒரு கூறு. மனித சமுதாயத்திலே சிறப்பாக உள்ள, பகுத்தறிவைப் பயன்படுத்துகிற ஆற்றல் பெற்றவர்கள் மக்கள். 'கண்ணகன் ஞாலம்' என்று கூறப்பட்டிருப்பது ஒரு பொதுமுறையில். சட்ட மன்றத்தில் வீற்றிருக்கிற மக்கள் பிரதிநிதிகளை அந்த இனத்திலே வைக்க முடியாது. மக்கள் இனத்திலே வைத்து நோக்குகிறபொழுது, பொது இலக்கணத்தை வைத்து நோக்குவதற்கில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்.

சட்ட மன்றத்தைப்பற்றிக் கூட பழந் தமிழ்ப் புலவர்கள் எப்படி ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள் என்பதை நான் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். ஒரு புலவர் சொன்னார் :

"கல்வி அகலமும் கட்டுரை வாய்ப்பாடும்
கொல்சின வேந்தன் அவை காட்டும்"

என்று கூறியிருக்கிறார். அந்த நாட்டின் அரசனுடைய கல்வியின்

[திரு. ஏ. எஸ் தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [22nd January 1965

ஆழத்தையும், கட்டுரைத்துப் பேசுகின்ற ஒரு வாய்ப்பையும் எது புலப்படுத்துமென்றால், அவனுடைய சபைதான் அதைப் புலப் படுத்தும் என்று கூறுகிறார். அந்த முறையிலே பார்க்கும் பொழுது தமிழக சட்டமன்றத்திலே, இம்மாதிரியான உரைகள் வருவது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அந்த முறையில் நம்முடைய தமிழக அரசாங்கமானது, அரசாங்கத்தினுடைய பிரதிநிதிகளாக உள்ள அமைச்சர்கள் நம் கண் முன்பு நடக்கக் கூடாத ஒரு விஷயம் நடந்து விட்டது என்று தெரிந்தவுடனே விரைவாகச் சென்று ஆவன செய்தார்கள் என்பதையும் தமிழக மக்கள் அதை நன்கு போற்றுகிறார்கள் என்பதையும் மட்டும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்குமேலே ஆண்டவனும் இயற்கையும் ஒன்று என்ற ஒரு கூற்றை கனம் மதியழகன் அவர் கள் கிளப்பினார்கள். அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பதில் சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய மரபு சேக்கிழார் மரபு. அந்த மரபுக்கென்றே உரித்தான அடக்கமும், ஆத்ம உணர்வோடுகூடிய அறிவும் கலந் திருப்பதால் இயற்கையும் ஆண்டவனும் ஒன்று என்று அவர் சொன்னதை நான் மனமாரப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: அன்புமிக்க துணைத்தலைவர் அவர் களே, கவர்னர் உரைமீது நடக்கும் இந்த விவாதத்தில் இன்றைய நிகழ்ச்சியில் எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் தக்ஷிணா மூர்த்தி கவுண்டர் அவர்கள் சங்க கால இலக்கியங்களை மேற் கோள் காட்டவும் அதற்கு எங்களுடைய கட்சித் தலைவர் நாவலர் மறுத்துக் கூறவும் கேட்டு நாம் எல்லோரும் மகிழ்ந்தோம். இத்தனை நாள் சூடு ஏறியிருந்த இந்த அவையை இன்று குளிர வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது தமிழினால்தான் முடியும் என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற அளவிலே திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் எடுத்துப் பேசினார்கள். தமிழின் பெருமையைப் பற்றி நினைக்கும் பொழுது, தமிழைத் தவிர வேறு எந்த மொழிக்கும் அத்தகைய ஆற்றல் இல்லையென்பதை நான் நிச்சயமாகக் கூறமுடியும். இதையெல்லாம் சொன்னவர்கள், நமக்கு தீங்கு வருகிற நேரத்தில் எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிப் புலவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள் என்பதை என்ன காரணத்தினாலோ தமிழறிந்த பெரியார் சொல்லாமல் விட்டுவிட்டார். கட்சிக் கட்டுப்பாடோ என்னமோ தெரியவில்லை.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர் களுக்குத் தெரிந்தால் அதை அவர்கள் சொல்லிவிடலாம்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்தத் தமிழுக்குத்தான் நாங்கள் எங்களைத் தியாகம் செய்துகொள்ளுகிறோம் என்று சொல்கிற நேரத் தில், நாங்கள் துரோகிகளாக ஆக்கப்படுகிறோம், துரோகிகள் என்று தூற்றப்படுகிறோம். * * *

*** Expunged as ordered by the Chair.

22nd January 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

என்னைப் பொறுத்த வரையில் இதைப்பற்றியெல்லாம் நான் கவலைப்படுவதில்லை. எங்களுடைய தலைவர் மாபெரும் அறிஞர் அண்ணா அவர்கள், மிகப் பெரிய மனிதர்கள் மிகச்சிறிய தவறுகளைச் செய்துவிட்டால் அவற்றை மறப்போம், மன்னிப்போம், என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்ன அதைத்தான் நான் தியானமாகக் கொண்டிருக்கின்றேன்.

ஆண்டவன் அருளைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. 'ஆண்டவன்' என்று சொன்னால் ஒரு அங்கத்தினர் கூறியது போல நாங்கள் வெள்ளைக்காரர்களைப் பற்றிச் சொல்கிறோம், அவர் களுக்காகப் பரிந்து பேசுகின்றோம் என்று சொல்வார்கள். அடிக் கடி எங்களைப்பற்றிச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளில் ஒன்று நாங்கள் வெள்ளைக்காரர்களோடு இணைந்தவர்கள் என்பது. என்னைப் பொறுத்தவரையில், வெள்ளைக்காரர்கள் காலத்தில் நான் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்ததில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் இருந்த பலர் இன்று ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்களாக ஆனது மாத்திரம் அல்ல, அந்த ஜஸ்டிஸ் கட்சியின் மிகப் பெரிய தலைவராக இருந்த பெரியார் இராமசாமி அவர்கள், சுதந்திரநாளை துக்க நாளாகக் கொண்டாடுங்கள் என்று சொல்லிய இராமசாமி அவர்கள் இன்றைக்கு அவர்களுக்கு வேண்டியவர்களாக இருப்பதால், அவர் துரோகியாக இல்லை. நல்லவராக ஆகி விட்டார். வெள்ளைக் காரன் வெளியேறியதும் இந்த நாட்டின் அடிமைத் தளை நீங்கிற்று. அப்படி அந்த வெள்ளைக்காரன் வெளியேறிய நாளைக் கொண்டாட வேண்டுமென்று சொன்ன நமது அறிஞர் அண்ணா இப்பொழுது துரோகி என்று சொல்லப்படும் பொழுது நல்லவர் கள் வேதனைப்படாமல் இருக்க முடியாது. ஆண்டவனைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்து கொண்ட ஆண்டவன் ஏன் தனுஷ்கோடியில் உள்ள இளம் குழந்தைகள் கடலிலே தூக்கியெறியப்பட்ட நேரத்தில் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை என்ற வினா எழுகிறபொழுது, ஏதாவது நல்ல காரியங்கள் நடந்தால் அது ஆண்டவன் செயல் என்றும் இம் மாதிரி புயல் வந்துவிட்டால் அது இயற்கையின் சீற்றம் என்று ஆண்டவன்மேல் ஏன் பழியைப் போடுகிறீர்கள் என்றும் கேட்கும் பொழுதுதான் ஆண்டவனைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. ஆண்டவனைப்பற்றி எனக்கு நிச்சயமாகக் கவலையில்லை.

முக்கியமாக இன்று கவர்னர் பெருமான் உரையின்மீது விவாதம் நடந்து நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இந்தச் சபையிலே கொண்டு வரப்பட்டு இங்கே விவாதம் நடைபெறுகிறதைப் பார்க் கிற பொழுது அதிகமாக அடிபடுவது நாட்டிலே ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சம், அதை நிவர்த்திப்பதற்கு அமைச்சர்கள் எடுத்துக் கொண்டுள்ள பெரு முயற்சி, இராமேஸ்வரத்தில் குடிகொண்டிருக் கின்ற ராமச்சந்திரனும், ஒரு லட்ச ரூபாய் தருகிறேன் என்று சொன்ன புரட்சி நடிகர் ராமச்சந்திரனும்தான். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்குத்தான் இந்தச் சபையில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனவரி 26-ஆம் தேதி நடைபெறப் போகும் துக்க நாள், கருப்புக்கொடி, என்ற இந்த மூன்று பிரச்னை கள் தான் இந்த விவாதத்தில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1965

கவர்னர் ஆற்றிய உரைக்கு நன்றி செலுத்துவதோ, அல்லது கவர்னர் உரைக்குப் பதில் சொல்வதோ முக்கியத்துவம் பெற்றிருக்கிறதா என்று பார்த்தால் உண்மையில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். நமது நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மிகக் கடுமையான நிலைமை ஏற்பட்டபிறகு உணவு அமைச்சரிடமிருந்து இந்த இலாகா வேறொரு அமைச்சருக்கு மாற்றப்பட்டுவிட்டதினால் இந்த உணவுப் பஞ்சம் தீர்ந்துவிட்டதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு இந்த நாட்டிலே பல தடவைகள் ரெயில்கள் கவிழ்ந்திருக்கின்றன, வெள்ளம் வந்திருக்கிறது, துப்பாக்கிச் சூடுகள் நடந்திருக்கின்றன, உணவுப் பஞ்சம் ஏற்பட்டு இந்த அளவுக்கு மேல் போக முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. புயலின் கொடுமையினால் ஏற்பட்ட சேதம், இவ்வளவையும் பார்த்த பிறகு இந்தப் பதவி ஏன் வேண்டும், அரியலூர் விபத்து ஏற்பட்ட பொழுது திரு. லால் பகதூர் சாஸ்திரியவர்கள் ராஜினமா செய்தது போல், அவரும் ராஜினமாச் செய்வார் என்று நாடு எதிர் பார்த்தது. ஆனால் நடந்தது என்ன? உணவுப் பஞ்சம் வந்த பிறகு உணவு அமைச்சர் அவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார், என்ன காரணமோ தெரியாது. அமைச்சர் அவர்கள் ஒரு தடவை இங்கே குறிப்பிட்டார்கள், "காங்கிரஸ் கட்சி இந்த நாட்டை ஆளுகிறது, சர்க்காருடைய காரியதரிசிகளும், மற்றவர்களும் நாங்கள் கூப்பிடுகிற இடத்திற்கு வரவேண்டும், எங்கள் கட்சி அரசாட்சி நடக்கிறது" என்று சொன்ன பிறகு ஆண்டவனுக்கே பொறுக்காமல், கடலைப் பொங்கவிட்டு, இத்தகைய விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன போலும்.

அடுத்தபடியாக, நீதியைப் பொறுத்த வரையில் அஞ்ச வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில் இருந்த நீதிக்கும் இப்பொழுது இருக்கிற நீதிக்கும் மிக மிக வேறுபாடு இருக்கிறது. இப்படிச் சொல்லும் பொழுது நீதிக்கோ அல்லது உயர்நீதிபதிகளுக்கோ களங்கம் கற்பிக்க நான் விரும்பவில்லை. வாதத் திறமை உள்ள முதலமைச்சர் அவர்கள் எதையாவது வளைத்துக் காட்டி, நீதிபதிகளைப் பற்றி இப்படிப் பேசலாமா என்று சொல்லுவார்கள். நீதிபதிகளையோ, நீதியைப் பற்றியோ குறைவாகப் பேசவில்லை. குறைவாக மதிக்கவும் இல்லை. ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆளுங் கட்சியிலே இருப்பவர்கள் அவர்களை அரசியல் வாதிகளாக ஆக்கிவிடக் கூடாது. அரசியல் ஆசைகளை ஏற்படுத்தி விடக் கூடாது. அரசியலிலே ஆசையை ஏற்படுத்தி விட்டால், நீதி நீதியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதிகள் ஓய்வு பெற்ற பிறகு மந்திரிகளாகலாம், வேறுபல சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்ற நிலைமை ஏற்படுமேயானால், நீதி நீதியாக இருக்க முடியாது. இப்பொழுது நடைபெற்று வருகிற ஊராட்சி மன்றத் தேர்தல்களைப் பற்றிக் கூறிப்பிடுகிற நேரத்தில், சென்ற மூன்று நாட்களும் கூட, ஊராட்சித் துறை அமைச்சரிடம் மாத்திரமல்லாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் இப்பொழுது நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பற்றி நாங்கள் சொல்லி வருகிறோம். பொன்னமராவதி என்ற

22nd January 1965] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இடத்தில் நல்லமணி என்பவரின் நாமினேஷன் ரிஜக்ட் செய்யப்பட்டது. குளித்தலையில் முத்துக்கிருஷ்ணனின் நாமினேஷன் ரிஜெக்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் எங்கள் கட்சியைச் சேர்ந்த, தென்னாற்காடு நெல்லிக்குப்பம் தொகுதியைச் சேர்ந்த ஏ. வி. தண்டபாணி என்பவருடைய, அதே குற்றத்தைச் செய்தவருடைய, நாமினேஷன் செல்லுபடியாகி இருக்கிறது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அதிகாரிகளுடைய போக்கு அப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டவேதான். இதிலே, எலெக்ஷன் ஆபிசர்கள் செய்ய வேண்டியது, நாங்கள் அதில் தலையிடுவதற்கு உரிமையில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால், அதே நேரத்திலே, ஒரு சுற்றறிக்கை—மன்னிக்க வேண்டும், சுற்றறிக்கை அல்ல,—ஒரு ஜி.ஓ.-வை சர்க்கார் பிறப்பித்திருக்கிறார்கள். அதைப் பற்றி எனது அருமை நண்பர் திரு. மாதவன் குறிப்பிட்டபோது, கனம் அம்மையார் அவர்கள் குறிக்கிட்டார்கள். அது ஆர்.டி.எல்.ஏ. இலாகாவினால், 2265 என்ற எண்ணுடன், அக்டோபர் 1962-ல் ஒரு ஜி.ஓ.-வாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு அது என்ன என்று அறிய நாங்கள் எவ்வளவு முயற்சித்தும் முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் அணுகிக் கேட்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லுகிறார்கள், அதைக் காண்பிக்கக் கூடாது என்று. ஏதாவது ரகஸ்ய உத்தரவு என்றால் காண்பிக்கக் கூடாது தான். இதைக் காண்பிக்க அதிகாரிகளைக் கண்டு இவர்கள் அஞ்சிக் கொண்டு இருக்கிறார்களே என்றுதான் சொல்லுகிறேன். ஒரு ஜி.ஓ.-வைப் பொறுப்பு வாய்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் பத்துபேர் சேர்ந்து நான்கு நாட்களாகப் பார்க்க வேண்டும் என்று முயற்சிக்கிறோம், முடியவில்லை. அதே ஆர்டர் அங்கே யூனியனில் இருக்கிறது. அதிலே என்ன அப்படி இருக்கிறது? எங்களுக்குக் காட்டினால் என்ன கெட்டுவிடும்? ஏன் கொடுக்க முடியாது, கொடுக்கக் கூடாது? சர்க்காரால் பிறப்பிக்கப் பட்ட உத்தரவைக் குடிமகன் ஒருவன் பார்க்க உரிமை இருக்கிறது. அதைக் கொடுப்பார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: யூனியனிலே கிடைக்கிறது என்றால், அங்கே அவர்களிடமே வாங்கிக் கொள்ளலாமே. இங்கே சர்க்காரிலே கேட்பானேன்?

திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் கேட்பதற்கு, 'அங்கேயே பார்த்துக் கொள்ளுங்கள்' என்பது பொறுப்புள்ள பதில்தானா என்று கேட்க விரும்புகிறேன். கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு கேட்டேன். சில நண்பர்கள் கூடச் சொன்னார்கள், கொடுக்க மாட்டார்கள் என்று. ஆனால், உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கிடைக்கும் என்று நான் சொன்னேன். எங்களிடம் அதன் பிரதி இருக்கிறது. அதைக் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்கிறோம். ஆனால், இங்கே காட்டினால், நீங்களே ரோனியோ போட்டுக் கொண்டு வந்துவிட்டீர்கள் என்று சொல்லக் கூடும் என்றுதான் அதைக் காட்ட விரும்பவில்லை. எவ்வளவு தூரம் பஞ்சாயத்து, ஊராட்சி நிர்வாகத்தில் சர்க்கார் தலையிடுகிறார்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்ல முற்பட்டேன்.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [22nd January 1965

அதைப்போல, இந்த விவாதத்தில், புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவுகிறேன் என்று கொடுத்த உறுதி மொழி பற்றி பெரிய விவாதமாகப் பேசப்பட்டது. கிராமங்களில் சொல்லுவார்கள், புண்ணியத்திற்குக் கொடுத்த மாட்டைப் பல்லுப் பார்த்தாலும், பிச்சைச் சோத்தில், குழைந்த சோறு என்பதா, என்று. அது போல இருக்கிறது, இவர்கள் சொல்லுவது. சர்க்காருக்குக் கொடுப்பது என்பது செத்தவனுக்குக் கொடுப்பது போலத்தான். அவர்கள் அங்கே செத்துக் கொண்டிருக்கிருர்கள், இவர்கள் இப்பொழுதுதான் யார் யார் என்ன என்ன இழந்திருக்கிருர்கள், எந்த வீடுகள் எவ்வளவு விழுந்து இருக்கிறது என்று கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிருர்கள். காலம் கடந்து செய்யும் உதவியால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை. இன்றைக்கு இருப்பவர்கள், இவர்கள் கணக்கு முடிவதற்குள் இறந்துவிடுவார்கள். அல்லது பிள்ளை போச்சு, பெண்டாட்டி போச்சு என்று அவனே கடலில் விழுந்து சாவோம் என்று செய்தும் இருப்பான். வாங்கி வைத்துக் கொண்டு சர்க்கார் எப்பொழுது அவர்களுக்குக் கொடுப்பது? அவர் மட்டும் என்ன சொன்னுர்? அப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. கலியாணசுந்தரம் கூட இருந்தார். எழவு வீட்டில் சிரிப்போமா, கலியாண வீட்டில் அழுவோமா? அது தெரியாதா? (கனம் திரு. எம். பக்தவத்லம்: இப்பொழுது அதுதான் இல்லை). கனம் அமைச்சர் ராமைய்யா அவர்கள் செய்ததையெல்லாம் மக்கள் பாராட்டினுர்கள். அதே சமயத்தில், வேறு சில அமைச்சர்கள், அங்கே இவ்வளவு (முழங்கால் அளவு) தண்ணி இருந்தது என்று, அங்கே இறங்காமலே திரும்பி வந்து விட்டார்கள். எனவே, மக்கள் சொன்னுர்கள், எங்களிடமே நேராகக் கொடுங்கள் என்று. இப்பவும். எம்.ஜி.ஆர். சொன்னுர்கள். 'ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறேன், பந்துலு பிக்சர்ஸ்-இல் நடிக்கிறேன், ரூபாய் கொடுக்கிறேன்' என்று. அதற்கு ஒரு கமிட்டியும் நியமித்து இருக்கிருேம், எந்தக் கட்சி வேறுபாடும் இல்லாமல் அது செயல்படும். எப்பவும் புரட்சி நடிகர் சொன்னதைச் செய்யாமல் இருந்தது கிடையாது. காங்கிரஸ் கட்சிக்குக் கூடக் கொடுத்தேன், அவர்கள் வேண்டாம் என்று சொன்னதினுல் கொடுக்கவில்லை, என்று சொன்னுர்கள் அவர்கள். இந்த ராமச்சந்திரன் சொன்னது கிடையாது. சொன்னதைச் செய்யாமல் இருந்தது கிடையாது என்று தான் சொன்னுர்கள். ஆகவே அதைப் பற்றி, எட்டில் வந்திருக்கிறது, பூட்டில் வந்திருக்கிறது, என்றெல்லாம் சொல்லுவது பொருத்தமற்றது. இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி செலுத்துகிறேன், வணக்கம்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய நண்பர் திரு. தண்டாயுதபாணி அவர்களால் கொண்டுவரப் பட்டுள்ள நன்றித் தீர்மானத்தை ஆதரித்து, வரவேற்று ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநில சர்க்கார், அகில இந்தியாவிலுமே, ஒரு எடுத்துக் காட்டாக விளங்கும் சர்க்கார். மற்ற மாநிலங்களிலெல்லாம் பிரச்னைகளைத் தீர்க்க வழி தெரியாமல் விழிக்கும்போது, நம் மாநில சர்க்கார் மற்ற மாநிலங்கள் போற்றும் வகையிலும்,,

22nd January 1965] *[திரு. ஏ. ஆறுமுகம்]*

பாராட்டும் வகையிலும், பின்பற்றும் வகையிலும் பேர் எடுத்திருக்கிறார்கள், என்பதை நான் சொல்லத் தேவையில்லை. அப்படி இருந்தும், இப்படிப் பட்ட சர்க்காருக்குத் திடீரென்று ஒரு சில வியாபாரிகளால், தங்களுடைய சுயநலத்திற்காக, லாபத்திற்காக செய்த சில காரியங்களால் நம்முடைய நாட்டில், உணவு உற்பத்தியில் வெற்றி பெற்று இருந்தாலும், ஓரளவுக்கு வருஷா வருஷம் அதிகமான உற்பத்தி கண்டு இருந்தாலும், திடீரென்று ஒரு சிக்கல் ஏற்பட்டது. அந்தச் சிக்கலை எப்படி எப்படிச் சமாளிக்கலாம் என்று அமைச்சர் அவை ஆலோசனை செய்து அக்கறை காட்டிக் கண்ணும் கருத்துமாகப் பாடுபடும்போது, தொடர்ந்து மறுபடியும், இயற்கையின் காரணமாக, பெரிய ஆபத்து வந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில், மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் சரியாகக் குறிப்பிட்டது போல, கட்சியை வளர்க்கவும், கட்சி செல்வாக்கைப் பெருக்கவும் எதிர்க் கட்சி பயன் படுத்துகிறது என்று கருத முடியுமே தவிர, வேறொன்றும் இல்லை.

மதிப்பிற்குரிய கனம் முதல் அமைச்சர் அவர்கள் தமிழ்ப் பற்றுக் கொண்டவர்கள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்ற வாக்கியத்தின்படி நடந்து கொள்ள வேண்டும். திரு. ராமசந்திரன் அவர்கள் தாராளமாகக் கொடுக்காமல், முன்னாலேயே கொடுக்கப் போகிறேன் 'அந்தப் பகுதிக்கு வரப் போகிறேன்' என்று சொன்னதெல்லாம் தன்னையே விளம்பரப் படுத்தத் தான் என்று கருத வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, ராமேச்வரம், தனுஷ்கோடிப் பகுதியில் அவர் இருந்த நேரம் அரை மணி அல்லது அதற்கும் குறைவு; அதுவும் 15, 20 நாட்களுக்குப் பிறகு போனார்கள். இன்னொன்றும் சொல்ல வேண்டும். நடிகர் ராமச்சந்திரன் அவர்கள் சர்க்காரிடம் கொடுக்க சர்க்காரிடம் தமக்கு நம்பிக்கை யில்லை என்று சொன்னார்கள். பெருவாரியாக மக்கள் நம்பிக்கை வைத்து இவ்வளவு அங்கத்தினர்களை இங்கே அனுப்பியிருக்கும்போது, 'எனக்கு இந்த சர்க்காரிடம் நம்பிக்கை யில்லை' என்று ஒரு தனி மனிதன் சொல்வது, கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி, தானும் அதுவாகப் பாவித்து தானுந் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற்போலுமே என்பதாக நான் சின்ன வயதில் வகுப்பில் படித்ததுதான் ஞாபகம் வருகிறது. இன்னொன்று அவர்களைப் பற்றி எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய வள்ளல் தன்மை பற்றி நான் கூட கனம் முதல் அமைச்சர் அவர்களை நேற்று ஒரு கேள்வி கேட்டேன்.

கனம் உதவி சபாநாயகர் : அது பற்றியெல்லாம் இங்கே சொல்ல வேண்டியதில்லை.

திரு. ஏ. ஆறுமுகம்: ரிக்ஷா வண்டி ஓட்டுகிறவர்களுக்கு மழை காலத்திலே . . .

[22nd January 1965

கனம் உதவி சபாநாயகர்: திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய செய்கைகளைப்பற்றிக் கனம் அங்கத்தினர் இங்கே விவாதிக்க வேண்டியதில்லை. கவர்னர் உரையின் மீது பேச வேண்டியதை மட்டும் இப்பொழுது பேசலாம்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சில பெரியவர்கள் தாராளமாக உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு, வருமான வரிச் சட்டம் போன்றவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத் தாராளமாக நன்மை செய்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அந்த வகையிலே தான், அவர்கள் ஐம்பதாயிரம் பேர்களுக்கு—சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிறவர்களுக்கு—ரெயின் கோட் வாங்கிக் கொடுக்கப் போவதாகச் சொல்லி, ஒரு டிவிஷனிலே போய் 500 பேர்களுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி 49,500 பேர்கள் பெற வேண்டிய நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலையிலே தான் . . .

கனம் உதவி சபாநாயகர்: கனம் அங்கத்தினர் மற்ற விஷயங்களைப் பேசலாம்.

திரு. ஏ. ஆறுமுகம் : ஆகவே, இன்கம்-டாக்ஸ் அதிகாரிகள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இனிமேல் நடக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதிருஷ்டவசமாக இங்கே இப்பொழுது உட்கார்ந்திருக்கிறார்கள். நேற்று அவர்கள் பேசியபோது, 'உங்களுக்கு வால் இருக்கிறது, அதை நறுக்குகிறேன்' என்று அவர்களைக் குறித்து முதல் அமைச்சர் பேசியதாகச் சொன்னார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தியைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் வால் இருப்பதாக அவர்கள் ஏன் சொல்கிறார்கள் ? இந்த நாட்டின் குடியரசு தினத்தைத் துக்க நாளாகக் கொண்டாடுவதாகச் சொல்கிறவர்கள் யார் ? அப்படிச் சொல்கிறவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தானே ? இதையும், மிகப் பொறுப்புள்ள சட்ட மன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறார்களே அவர்கள் தானே சொல்கிறார்கள் ? அவர்களுக்கு அந்தத் துடுக்குத் தனம் இருக்கலாமா ? பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர்களில் நல்ல மாணவர்களும் இருக்கிறார்கள். துடுக்குத்தனம் செய்கிற மாணவர்களும் இருக்கிறார்கள். துடுக்காக இருக்கிற மாணவர்களைப் பார்த்து, அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மைப்படுத்தலாம், அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் துடுக்குத்தனத்தை மாற்றலாம் என்ற அக்கறையோடு பேராசிரியர்களும், கல்வி நிபுணர்களும், 'உன் வாலைக் கொஞ்சம் அடக்கிவை, இல்லாவிட்டால் நறுக்கிவிடுவேன்' என்று சொன்னால், அதில் தவறு என்ன இருக்கிறது? மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி நல்ல எண்ணத்தில் சொல்லும் வார்த்தைதானே அது ? நல்ல பிள்ளைகளாக வரவேண்டும் என்ற அக்கறையில்தானே அப்படிச் சொல்வது ? ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொன்னதாக வைத்துக்கொண்டாலும், நல்ல எண்ணத்தில் தான் அவ்வாறு

22nd January 1965] [திரு. ஏ. ஆறுமுகம்]

அவர்கள் சொன்னதாக எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, அதைத் தவருக எண்ணிக் கொள்ளக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியபோது நான் இங்கு இல்லை. எனக்கு வால் இருக்கிறதோ இல்லையோ தெரியாது. அது அவர்கள் தான் சொல்ல வேண்டும். ஆனல், 'வால்' என்ற வார்த்தை என் வாயில் வரக்கூடிய வார்த்தை அல்ல. அப்படி நான் சொன்னதாகப் போட்ட பத்திரிகை அவர்கள் பாணியில் போட்டிருக்கலாம்.

திரு. ஏ. ஆறுமுகம்: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ன சொல்கிருர்கள்? ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு 50 பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், நல்ல எதிர்க்கட்சி தேவை என்ற கருத்தில் வந்திருக்கிறதாகச் சொல்கிருர்கள். சந்தோஷம். அவர்களுக்கு நல்ல கொள்கை, நல்ல திட்டம், நல்ல லட்சியம் இருப்பதாகவும் அவர்கள் சொல்கிருர்கள். ஆனல், நல்ல லட்சியம் வைத்துக் கொண்டிருப்பதாக வைத்துக்கொண்டாலும், இந்த நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னுர்கள். 'பிரிவினை கூடாது, அது துரோகம்' என்று மற்றவர்கள் சொன்னுர்கள். 'நாட்டைக் காட்டிக் கொடுக்கக்கூடிய காரியம்' என்று சொன்னுர்கள். அன்றும் சொன்னுர்கள். இன்றும் சொல்கிருர்கள். அவர்களைப் பார்த்துத் தான் 'துரோகிகள்' என்று கூடச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறேம். காரணம், இன்று நாட்டு மக்கள், சுதந்திர உணர்ச்சியுடன், தலை நிமிர்ந்து நிற்கிருர்கள். இந்த நாட்டு மன்னர்களாக மக்கள் வாழ்கிருர்கள். நாட்டிற்கு விடுதலை பெற்று, ஜனநாயக வாதிகளாக நாம் இருக்கிறேம். உலகிலுள்ள குடியரசு நாடுகளிலேயே இந்தியா ஒரு சிறந்த குடியரசு நாடாகத் திகழ்கிறது. அப்படிப்பட்ட நல்ல பெயரும், நல்ல புகழும், செல்வாக்கும் கிடைத்திருக்கும் இந்த நாட்டுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கும் காரியங்களைச் செய்கிற உங்களைப் பார்த்து, 'துரோகிகள்' என்றும், இந்த நாட்டைக் கெடுக்கிறவர்கள் என்று சொல்வது . . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் பேசும்போது, 'உங்களை' என்று குறிப்பிடுகிருர் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டுதான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நான் தங்களைக் குறிப்பிடவில்லை.

நல்ல மரத்தில் புல்லுருவி பாய்வது போல், 45 கோடி மக்கள் வசிக்கும் இந்தப் பாரத தேசத்தில், ஏறக்குறைய மூன்றரை கோடி மக்கள் வசிக்கும் இந்தத் தமிழ்நாட்டில், ஒரு அரசியல் கட்சி என்ற போர்வையிலே இத்தகைய கெட்ட பெயரை நமக்குச் சம்பாதித்துக் கொடுக்கக் கூடாது.

(மணியடிக்கப்பட்டது)

[22nd January 196L

திரு. எஸ். ஜே. ராமசாமி : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையிலே உணவுப் பிரச்னையைப்பற்றி மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏறக்குறைய 4½ லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்படும் என்று கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், இங்கே நான் இதிலே குறிப்பிட விரும்புவது, சர்க்காருக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவும் கொள்முதல் செய்துகொள்ளட்டும். ஆனாலும், சாதாரண மக்களை நசுக்கக்கூடிய அளவுக்கு இந்தக் கண்ட்ரோல் முறையைப் புகுத்தாமல், சர்க்கார் கொள்முதலை வைத்துக் கொள்ளலாம். எவ்வளவு தானியங்களைக் கொள்முதல் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்துகொண்டு, மிச்சத்தை உங்கள் விருப்பப்படியே விற்றுக் கொள்ளுங்கள் என்று நிபந்தனை வைத்தாலுங்கூட மிக நன்றாக இருக்கும். ஏனென்றால், சில இடங்களில் இப்பொழுது நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகின்றோம். செங்கற்பட்டு மாவட்டம் இருக்கிறது. அதை அடுத்து வடாற்காடு மாவட்டம் இருக்கிறது. இந்த இரண்டு மாவட்டங்களின் எல்லையில் எங்களுடைய பகுதி இருக்கிறது. எங்களுடைய பகுதியில் ஜி.ஈ.பி. 24 என்கிற ரக கிச்சலிச் சம்பா நெல் மூட்டை ஒன்று 33 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், எடையில் அங்கே விற்கப்படுவதே இல்லை. எல்லாம் பழையபடி மரக்காலில் அளந்துதான் வாங்கப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. இப்படிப் பட்ட நிலைமை அங்கே இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய தாலூகா சப்ளை ஆபிசரிடத்தில் நான் என்னுடைய ஸ்டாக்கைபற்றி ஒரு விவரத்தைக் கொடுத்தேன். நான் இந்தச் சர்க்காருக்கு 400 மூட்டை நெல் ப்ரொக்யூர்மென்டில் கொடுத்திருக்கிறேன். மிச்சம் இருக்கும் நெல் ஸ்டாக் பற்றி தகவல் அனுப்பி வைத்தேன். அந்த ஸ்டாக்கைப்பற்றி இந்த இடத்தில் உங்கள் மூலமாக சர்க்காருக்கும் படித்து காட்ட விரும்புகிறேன்.

" திரு. தாலூக்கா சப்ளை ஆபீசர், அரக்கோணம் வட்டம், வடாற்காடு மாவட்டம் அவர்களுக்கு. அடியிற்கண்ட விகிதாச்சரப்படி நெல் இருப்பு இருக்கிறது. இது எனது வயலில் அறுவடை செய்யப்பட்ட நெல்.

	மூட்டைகள்
1. கிச்சிலி சம்பா நெல் மூட்டை 1-க்கு 80 கிலோவாக	101
2. சொர்ணவாரி நெல் மூட்டை 1-க்கு 80 கிலோவாக	12
3. ஒட்டுக் கிச்சலி மூட்டை 1-க்கு 80 கிலோவாக	15
ஆக ஒரு நூற்று இருபத்து எட்டு மூட்டைகள்	128

தக்கோலம், (கையொப்பம்) எஸ். ஜே. ராமசாமி,
15—12—1964. **எம்.எல்.ஏ."**

இதுதான் நான் தாலூக்கா சப்ளை ஆபீசருக்கு எழுதிய கடிதத்தின் வாசகம். 128 மூட்டை என்று அவருக்கு ஸ்டாக லிஸ்ட் அனுப்பி யிருந்தேன். அதுவும் அச்சடித்த லெட்டர் பேப்பரில்தான் அனுப்பியிருந்தேன். தாலூக்கா விநியோக அதிகாரி அதைத் திருப்பி எழுதியனுப்பியிருக்கிறார். "திருப்பி அனுப்பப்பட்டது. குறித்த பாரத்தில் உறுதிமொழி அனுப்ப வேண்டியது" என்ற குறிப்போடு திருப்பியனுப்பியிருக்கிறார். எந்த இடத்தில் உறுதி மொழி வாங்குவது, யாரிடத்தில் உறுதிமொழி வாங்குவது, எங்கே அவர்கள் உறுதிமொழி பாரங்கள் வைத்துக்கொண்டிருக் கிறார்கள் என்கிற தகவல் ஒன்றும் கிடையாது. உறுதிமொழி பாரத்தில் அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகள் கண்ட்ரோலை அவமதிக்கிறார்களா? அல்லது கண்ட்ரோலினால் இவர்களுடைய சுயநலத்திற்காக, இவர் களுடைய அதிகாரத்தை விவசாயி மீது செலுத்துவதற்காக, ஆர்ப் பாட்டம் செய்தார்களா என்று எனக்குப் புரியவில்லை. எனக்கே இம்மாதிரி இருக்கிறதென்றால் ஒரு சாதாரண விவசாயியிடம் இந்த அதிகாரி எப்படி நடந்துகொள்வார் என்று சொல்லத் தேவையில்லை.

இன்னொரு சம்பவம், எங்கள் பகுதியில் நடந்ததைச் சொல் கிறேன். இந்தக் கண்ட்ரோலினால் எவ்வளவு திமை ஏற்பட்டிருக் கிறது என்பதற்காகச் சொல்கிறேன். சட்ட மன்றத்திலே ப்யூன் வேலை செய்கின்ற ஒருவர் முன்பு சாப்பாட்டுக்கு அரிசி கிடைக்காத காலத்தில் அங்கே வந்தார். என்னைத் தெரிந்திருந்ததால் அங்கே வந்தார். என்னைக் கேட்டார். நான்கு அல்லது ஐந்து படி அரிசி கொடுத்தனுப்பினேன். அதை வாங்கிக்கொண்டு வந்தாரோ இல்லையோ அவரைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். அவர் உடனே என்னிடம் வந்து, 'நீங்கள் சொல்லுங்கள்' என்றார். 'நான் போகமாட்டேன், நீங்கள் ரயிலிலே போய்விடுங்கள், தொந் தரவு இருக்காது' என்று சொன்னேன். இதை எதற்காகச் சொல் கிறேன் என்றால், பதினைந்து மூட்டை எடுத்துக் கொண்டு போக லாம் என்ற உத்தரவு ஒரு நாளைக்கு இருக்கும். மறு நாளைக்கு அந்த உத்தரவு போய், ஐந்து மூட்டை தான் எடுத்துக்கொண்டு போகலாம் என்று மாற்றப்படும். ஒரு சாதாரண ஆள், சென்னை யில் இருக்கக்கூடிய ஒருவர் தனக்கு, சென்னையில் அரிசி கிடைக்க வில்லை என்று வெளியிலே வந்து வாங்கிக்கொண்டு வரும்போது, இப்படியெல்லாம் தடை ஏற்படுகிறது. ஆகவே, ஐந்து படி, பத்து படி அளவில் கொண்டுபோனால் விட்டுவிட வேண்டும். ஐந்து படி, பத்து படி என்று வருவது கூடத் தடை செய்யப்படுகிறது. இன்னொன்று கூடச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய மகன் லயோலா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவனுடைய லாட்ஜ்க்குப் போய் இருந்தேன். அங்கு போடப் பட்ட அரிசியைப் பார்த்தேன். இந்த அரிசிச் சாதமா மாணவர் களுக்குப் போடப்படுகின்றது? இதையா நீங்கள் சாப்பிடு கிறீர்கள்? என்று கேட்டேன். இப்பொழுது கொஞ்சம் பரவா யில்லை என்றார்கள். இதற்கு முன்பு போடப்பட்ட அரிசியைப் பார்த்தால் நீங்கள் ஓடிப் போய் இருப்பீர்கள் என்றார்கள்.

இன்னும் சென்னையில் உள்ள அம்பீஸ் கபே என்பது மிகப் பெரிய ஹோட்டல். அங்கே போடப்படுகிற அரிசியைப் பார்த்தால் மிகவும் வருத்தம் உண்டாகும். இப்படிப்பட்ட மட்ட அரிசியினால் மக்களுக்கு நோய் தான் வரும். கிராமங்களில் உயர்ந்த ரக அரிசி கிடைக்கிறது. ஆனால் வருவதற்குத் தான் பல தடைகள். ஒரு ஜில்லாவிலேயே கூட ஐந்தாறு செக் போஸ்டுகள் . .

MR. DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m. to-day.

The House then rose.

(After lunch)—3 p.m.

1-56 p.m. (Mr. Speaker in the Chair.)

VII.—GOVERNMENT BILLS—*cont.*

(1) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (CONTINUANCE) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Cultivating Tenants Protection (Continuance) Bill, 1965 [a] and move that the Bill be taken into consideration.

In moving the motion, I wish to explain briefly the object of the Bill.

The Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) was enacted with a view to protect the interests of the cultivating tenants temporarily, until comprehensive tenancy reforms were undertaken in this State. The Government considered that comprehensive tenancy reforms should be undertaken only after all the intermediary tenures prevalent in this State were abolished and legislation for the imposition of the land ceilings was enacted and implemented. Accordingly, the life of Madras Act XXV of 1955 was being extended from time to time by means of amending Acts. By the latest amending Act, its life has been extended upto 26th September 1965.

The Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 was the first enactment of this State passed with a view to abolish intermediary tenures. It abolished the intermediary tenures prevalent in zamindari estates, under-tenure estates and whole inam villages which were estates even before the passing of the Madras Estates Land (Third Amendment) Act, 1936. The Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, the Madras Minor Inam (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, and the Madars Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 which are to be implemented shortly, will abolish the intermediary tenures prevalent in whole inam villages which became estates as a result of the Madras Estates Land (Third Amendment) Act, 1936, part inam villages,

[a] Published in the *Fort St, George Gazette Extraordinary*, dated 16th January 1965.